# தமிழரசு

செப்டம்பர் 1-15, 1999 ரூ. 5/-



# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2030

ஆவணி

செப்டம்பர் 1–15, 1999

மலர் : 31 இதழ் : 5

விலை ரூ. 5




## இந்த இதழில்...


★ இதோ ஒரு பெர்னாட்ஷா ........ 2

★ மாணவ மணிகளுக்கு அண்ணாவின் அறிவுரை ..... 5

★ கல்கி ஒரு மகாமனிதர் ........ 7

★ கலைஞரின் சங்கத்தமிழ் ........ 12

★ மலேரியா நோய் பரவுவதைத் தடுக்க ........ 18

★ பொன்னியின் புதல்வர் ........ 20

★ தமிழ் நாடகத் தந்தை ........ 29

★ வருவாய்த்துறையின் நலத்திட்டங்கள் ........ 35

★ சங்கத் தமிழர்கள் வாழ்வில் ஆடைகள் ........ 37

★ என்னைக் கவர்ந்த பாரதி ........ 39

★ டோக்ரா ........ 42

★ கிராமப்புறப் பகுதிகளில் வறுமை ஒழிப்பில் சுயநிதி உதவிக்குழுக்கள் ........ 43

★ மூடப்பட்ட தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு உதவி ........ 45


### திருக்குறள்

*வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்*
*தீமை யிலாத சொலல்.*

பிறருக்கு எள் முனையளவு தீமையும் ஏற்படாத ஒரு சொல்லைச் சொல்லுவதுதான் வாய்மை எனப்படும்.

– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...

முதல் பக்க அட்டையில்...

**பேரறிஞர் அண்ணா**

கடைசிப் பக்க அட்டையில்...

**பேரறிஞர் அண்ணாவின் 91ஆவது பிறந்த நாளில் (15–9–99) முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அண்ணா சிலைக்கு மாலையணிவிக்கிறார்.**

தற்காலத்து நாடகக் கலையைப் பற்றிப் பேசும் போதெல்லாம் ஆங்கிலம் படித்த மேதாவிகள் பெர்னாட்ஷாவையும், கிப்ஸனையும் நினைத்து ஒரு குரல் அழுவது வழக்கம். ''நாடகம், கீடகம் என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கலாம். ஆனால் ஒரு பெர்னாட்ஷாவுக்கும், ஒரு கிப்ஸனுக்கு எங்கே போவது? திருடப் போக வேண்டியது தான்!'' என்று சொல்லுவார்கள். அப்படியெல்லாம் திருடவும் கிருடவும் போக வேண்டாம். தமிழ்நாடு நாடகாசிரியர் இல்லாமல் பாழ்த்துப் போகவில்லை என்று சமீபத்தில் தெரிந்து கொண்டேன்.



இரண்டு வாரத்திற்கு முன்பு திருச்சிராப்பள்ளியில் ''ஓரிரவு'' என்னும் நாடகத்தைப் பார்க்க நேர்ந்தது. பார்த்ததின் பயனாக, ''இதோ ஒரு பெர்னாட்ஷா தமிழ்நாட்டில் இருக்கிறார்! கிப்ஸனும் இருக்கிறார்! இன்னும் கால்ஸ்வொர்த்தியும்கூட இருக்கிறார்'' என்று தோன்றியது.

நாடகக் கதையும், கதையை அமைத்திருந்த பாணியும், கட்டுக்கோப்பும், காட்சிகளின் அமைப்பும், சம்பாஷனையும் அப்படி ஒன்றுக்கு மேல் ஒன்று சிறந்து விளங்கி, என்னைத் திணற அடித்து விட்டன. நாடக

# இதோ ஒரு பெர்னாட்ஷா

**- கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி**

முடிவில் என்னைப் பேசும்படி சொன்னபோது ஒன்றும் பேசத் தோன்றவில்லை. ''நன்றாகயிருக்கிறது; மிக நன்றாகயிருக்கிறது; அதிக நன்றாகயிருக்கிறது!'' என்றுதான் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியிருந்தது.

திராவிடக்கட்சி–சுயமரியாதைக் கட்சி–ஜஸ்டிஸ் கட்சிச் சொற்பொழிவாளர்களிலே தற்சமயம் தலைசிறந்து விளங்குகிறவர் திரு.சி.என்.அண்ணாதுரை அவர்கள். அவர் சொற்பொழிவுகள் சிலவற்றை நான் கேட்டிருக்கிறேன். "சொற்பொழிவு என்றால் இதுவல்லவா சொற்பொழிவு, தட்டுத் தடுமாறி சொற்களுக்குத் திண்டாடி நிற்பதையெல்லாம் சொற்பொழிவு என்கிறோமே!" என்று எண்ணத் தோன்றும்.

திரு.அண்ணாதுரையின் சொற்பொழிவு ஒன்றை நான் நேரில் கேட்காவிட்டாலும், நண்பர் ஒருவர் அதைப் பற்றிக் கூறியது என் மனதில் பதிந்து போயிருக்கிறது. சென்ற ஆண்டின் இறுதியில் சென்னையில் தமிழ் எழுத்தாளர் மகாநாடு நடந்தது. அச்சமயம் நான் பம்பாயில் அகப்பட்டுக் கொண்டேன். இரயில் பாதையும் உடைப்பட்டுப் போயிருந்தபடியால், மகாநாட்டுக்கு வர முடியவில்லை. திரும்பி வந்ததும் எழுத்தாளர் மகாநாட்டைப் பற்றி விசாரித்தேன். திரு.அண்ணாதுரையின் பிரசங்கத்தைப் பற்றி ஒருவர் சொன்னார். நமது கிராமங்களிலுள்ள ஜனங்கள் அறிவு விளக்கம் பெறாமல் பழைய குருட்டு நம்பிக்கைகளிலே ஆழ்ந்துகிடப்பதைப் பற்றி திரு.அண்ணாதுரை பேசினாராம். "மின்சார சக்தியைக் கண்டுபிடித்தவர் யார் என்று கிராமவாசியைக் கேளுங்கள், தெரியாது; ஆனால் யமனுக்கு வாகனம் எருமைக்கடா என்று தெரியும். நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்? என்று கேளுங்கள் தெரியாது; ஆனால் யமனுக்கு வாகனம் எருமைக்கடா என்பது மட்டும் தெரியும். ரேடியத்தின் உபயோகம் என்னவென்று கேளுங்கள், தெரியாது; ஆனால் யமனுக்கு வாகனம் என்னவென்று கேட்டால்,

உடனே எருமைக்கடா என்று பதில் வரும்... இந்த மாதிரி யமனையும் எருமைக்கடாவையும் வைத்துக் கொண்டு திரு.அண்ணாதுரை மேற்படி மகாநாட்டில் வெளுத்துக் கட்டிவிட்டார் என்று பிரசங்கத்தைக் கேட்ட நண்பர் சொன்னார். எழுத்தாளர் மகாநாட்டிலேயே திரு.அண்ணாதுரை பிரசங்கந்தான் விசேஷ நிகழ்ச்சி என்றும் தெரிவித்தார்.

ஆனால், பேச்சும், பிரசங்கமும் சொற்பொழிவும் உடனுக்குடனே காற்றிலே போய்விடுகின்றன. கூட்டத்துக்கு வருகிற ஜனங்களில் 100–க்கு 50 பேர் சொற்பொழிவை சரியாகக் கவனிப்பதேயில்லை; மற்ற ஐம்பது பேர் ஒரு காதினால் வாங்கி, இன்னொரு காதினால் விட்டு விடுகிறார்கள்.

பேச்சைக் காட்டிலும், எழுத்து அதிக வலிமையுடையது. ஆனால் பேச்சு எழுத்து எதுவும் நாடகத்துக்கு அருகிலும் வராது. ஜன சமூகத்தை உண்மையில் சீர்திருத்த விரும்புகிறவன் கையாள வேண்டிய சாதனம் நாடகமேயாகும்.

நடிக்கக்கூடிய நாடகத்தை எழுதும் ஆற்றல் மிகவும் அரியது. அந்த ஆற்றல் திரு.அண்ணாதுரையிடம் பூரணமாக அமைந்திருக்கிறது என்பதை ‘‘ஓரிரவு’’ நாடகத்தில் கண்டு மகிழ்ந்தேன்.

## தமிழ வீரன்!

***தமிழுக்குத் தொண்டுசெய்து சிறைக்குச் சென்றோன்,***
***தலைசிறந்த பேச்சுவல்லோன்; தமிழ வீரன்;***
***தமர்என்றும் தான்என்றும் நினைப்ப தன்றித்***
***‘தமிழ்நாட்டின் நலத்தினுக்கே உயிர்உடல்கள்***
***அமைக’ என இரவு பகல் உழைக்கும் மேலோன்.***

**– பாவேந்தர் பாரதிதாசன்**

## அறிஞர் பட்டம் பெற்ற வரலாறு

1945ஆம் ஆண்டில் நாகர்கோவிலில் நடந்த ஒரு கூட்டத்துக்கு அண்ணா சென்றிருந்தார். அக்கூட்டத்திற்கு மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் செய்குதம்பிப் பாவலரும் வந்திருந்தார். அந்தக் கூட்டத்தில் பேசும் போது கம்பராமாயணப் பாடல்கள் சிலவற்றிற்கு அண்ணா புது விளக்கம் கொடுத்தார். அந்த விளக்கம் பொருத்தமுடையதாகவே இருந்தது. அதைக் கேட்டுப் புலவர் செய்குதம்பிப் பாவலர் மிகவும் வியப்படைந்தார். கூட்டம் முடிந்ததும் அண்ணாவும், செய்குதம்பிப் பாவலரும் கம்பராமாயணத்தைப் பற்றிக் கலந்து பேசினார்கள். அப்போது செய்குதம்பிப் பாவலர், அண்ணாவின் கூரிய அறிவையும், சொற்போர் புரியும் ஆற்றலையும் அறிந்து வியந்தார்; அண்ணா அவர்களுக்கு ‘அறிஞர்’ என்னும் பட்டத்தை வழங்கி மகிழ்ந்தார். அதன் பிறகு அண்ணாவை எல்லோரும் ‘அறிஞர் அண்ணா’ என்று அழைக்கலாயினர்.

பிற்காலத்திலோ அண்ணாவின் பேரறிவைக் கண்டு வியந்தவர்கள் அவருக்கு ‘பேரறிஞர்’ என்னும் பட்டத்தை வழங்கினார்கள். ‘அறிஞர் அண்ணா’ அவுர்கள் ‘பேரறிஞர் அண்ணா’ என்று அழைக்கப்பட்டார்.

# அண்ணா ஒரு மருத்துவர்

இளந் தமிழுலகத்தில் – எழுகின்ற தமிழுலகத்தில் – இன்று ‘அண்ணா’ என்று அருமையாக அழைக்கப்படுகின்றவர் தோழர் திரு.அண்ணாதுரை. அவர் ஆயிரம் மேடை ஏறிய அறிஞர்; பல்லாயிரம் மக்களின் உள்ளத்தை ஒருங்கே கவரும் சீரிய கூரிய சொல்லாளர்; கண்ணின்று கண்ணறச் சொல்லும் திண்ணியர்.

அண்ணாதுரை கலையறிந்தவர். தமிழ்நாட்டின் பழைய நிலையறிந்தவர். “மன்னும் இமயமலை எங்கள் மலையே” என்று மார்தட்டிக் கூறிய வீரர் வாழ்ந்த தமிழகத்தில் இன்று கோழைகளாய், மோழைகளாய் நாம் குன்றலாகாது; காளைகளாய், களிறுகளாய் வாழ்தல் வேண்டும் என்று ஆசைப்படுகின்றவர் அவர்.

தமிழ்க் குலத்தை அழிக்கும் வேர்ப் புழுக்களை அழித்தாலன்றித் தமிழகம் தழைக்குமாறில்லை; ஊழ்வினையே பேசி ஆள்வினை அற்றிருக்குமளவும் நாம் உய்யுமாறில்லை என்று உறுதியாகக் கருதுகின்றவர் அவர்.

தமிழ்நாட்டைப் பிடித்த பீடைகள் ஒழிய வேண்டுமாயின், “நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்” என்று வள்ளுவர் வகுத்த மருத்துவ முறையைத் தயங்காது தமிழர் கையாளுதல் வேண்டும் என்பது அவர் கொள்கை. ‘புண்ணுற்ற மேனியைப் புறம் பொதித்து மூடுதலால் என்ன பயன்?’ என்பது அவர் கேள்வி.

மதிநலம் வாய்ந்த மருத்துவர், அழுகிய தசையைப் பார்த்து அறுத்தால், தமிழ்க் குலம் தலையெடுக்கும் என்பதில் என்ன தடை? உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கள்வரது நச்சுப் பகைமையை நசுக்காவிட்டால் நாடு நலம் பெறுவதெப்படி?

தமிழர் வாழவேண்டும், தமிழர் பண்பாடு சிறக்க வேண்டும் என்ற அரும் பெருங்குறிக்கோளுடையவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

**– சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை**

திண்டாமலில்லை. அண்ணாதுரையின் பேச்சிலும், எழுத்திலும் புத்துணர்ச்சிக்கு ஒருவித கவர்ச்சியும், திருப்தியும் ஏற்பட்டது, அண்ணாதுரையை மாணவர்கள் விரும்பினர்; வாலிபர்களும் சூழ்ந்தனர்.

அண்ணாதுரை "சமூக சீர்திருத்தத்திற்குப் புதிய மெருகு கொடுத்து, புதிய உணர்ச்சிகளைத் தழுவிப் போகாவிட்டால் கட்சிக்கு வளர்ச்சியில்லை" எனக் கண்டார். அதனால் புதிய அமைப்புக்கு வேண்டிய பூர்வாங்க வேலைகளைப் பூர்த்தி செய்தார்.

– ப.ஜீவானந்தம்

## தமிழர் தளபதி

**1948** ஆம் ஆண்டில் சென்னைத் தீவுத் திடலில் ஒரு பெரிய பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் அண்ணாவும் தமிழ் தென்றல் திரு.வி.க.வும் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் நிகழ்த்திய பேருரை திரு.வி.க.வை மிகவும் கவர்ந்துவிட்டது.

அதே கூட்டத்தில் அண்ணாவுக்குப் பிறகு பேசிய திரு.வி.க. "தமிழகத்தில், திரு.வி.க.நடை, திரு.வி.க.தமிழ், திரு.வி.க. பேச்சு முறை, திரு.வி.க.எழுத்து என்று இன்று நிலவி வருவது மாறி, இனி வருங்காலத்தில், அண்ணாதுரை நடை, அண்ணாதுரை தமிழ், அண்ணாதுரை பேச்சு முறை, 'அண்ணாதுரை எழுத்து' என்றுதான் வரப்போகிறது. வருங்காலத்தில் தமிழ் மொழி அழிந்து சிதைந்துவிடுமோ, அதை யார் காப்பாற்றப் போகின்றார்களோ என்று நான் ஐயப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால், இனி நான் ஐயப்படாமல் அமைதியாகவே சாவேன். அண்ணாதுரை தமிழுக்குத் தொண்டு செய்வதை என்னால் மறக்கவே முடியாது. அண்ணாதுரை ஓர் அரசியல்வாதி மட்டும் அல்லர். அவர் தாய்நாட்டையும் தாய்மொழியையும் காக்கும் தமிழர் தளபதி" என்று அண்ணாவைப் பாராட்டிப் பேசினார்.

## அண்ணாவின் விருந்து!

இளைஞர்களிடையில் அண்ணாதுரைக்கு செல்வாக்கு அதிகரித்து வந்திருக்கிறது. அண்ணாதுரையின் சொல்வன்மையும், எழுத்து வன்மையும் இளைய உள்ளங்களுக்கு ருசித்ததே இதற்குக் காரணம்.

உலக அறிவோடும், அரசியல் உணர்ச்சியோடும், இனவெழுச்சியும், கலை ஆர்வமும், மொழிப்பற்றும், தமிழகத்தில் குறிப்பிடத்தக்க வண்ணம் கிளர்ந்தெழுந்தன. இந்தப் புதிய எழுச்சியும், உணர்ச்சியும் வாலிபர்களையும்

மண்ணில் சிறந்த அரசியல் ஆட்சியே
மக்களாட்சி
விண்ணின் சிறந்தது! சான்றவர் மேலது!
மேன்மை மிகும்
அண்ணலார் காந்தி அறவழி சென்றே
அரசியலின்
கண்ணியம் காக்கும் கரமெங்கள் அண்ணா
கவின்கரமே.

– கவிஞர் வாணிதாசன்

# மாணவ மணிகளுக்கு அண்ணாவின் அறிவுரை

## வைரமாகத் திகழுங்கள்

"மாணவர்கள் வைரங்களாக இருக்கவேண்டும் வைரத்திற்கு அதிக மதிப்பு இருப்பதற்கு ஒரு காரணம், பூமியின் வெகு ஆழத்தில் அது இருப்பதே ஆகும்!

நிலத்தின் கீழே தோண்டினால் சுண்ணாம்பு கிடைக்கும் – நிலக்கரி கிடைக்கும்; அதற்கும் கீழே அழுத்தி வைக்கப்பட்டுள்ள வைரத்திற்கு தான் மதிப்பு இருக்கிறது!

அதைப்போலவே, மாணவர்களும் தங்கள் இளமைப் பருவத்தை, 'அரசியல் கிளர்ச்சி' என்று ஈடுபடாமல் அழுத்தி வைக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்கள், தங்கள் இளமைப்பருவத்தை அழுத்தி வைக்க வேண்டுமென்று கூறினேனே தவிர, 'அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபடக்கூடாது' என்று சொன்னேனே தவிர – அரசியலில் அக்கறைச் செலுத்தக்கூடாது என்று கூறவில்லை.

கல்லூரியை விட்டு வெளியே வந்த பின்னர்தான், 'இந்த நாட்டின் தலைமையமைச்சர் யார்?' என்று தெரிந்து கொள்ளவேண்டும் என்று நான் கூறவில்லை!

இப்போதைய பருவம் – கிடைத்தற்கரிய பருவம்; தேடிப் பெறுகின்ற கல்விச் செல்வத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்; மாணவப் பருவத்தை அழுத்திவைத்து வைரமாகத் திகழுங்கள்!

இப்பொழுது நீங்கள் பெறுகின்ற கல்வி உங்களுக்காக மட்டுமல்ல – சமுதாயத்திற்காகக் கல்வி பெறுகின்றீர்கள் என்பதை உணர்ந்து செயல்படுங்கள்!"

## புனிதப் பணியில் மாணவர் ஈடுபட வேண்டும்

கண்ணியமிக்க பரம்பரையின் வழித்தோன்றல் களாகிய மாணவர்கள் இந்தச் சமுதாயத்தை வளப்படுத்தும் பணிக்கு மிகவும் பொருத்தமானவர்கள். இந்தப் பணியில் அவர்கள் காணும் வெற்றியில்தான் இந்த நாட்டின் எதிர்காலமே இருக்கிறது.

புன்னகை பூக்கும் நிலம் நோக்கும் ஏழை மனிதனை – குடிசையில் வாழும் சாமானிய மனிதனை – தனது குழந்தைகளின் எதிர்காலம் பற்றி ஏங்கும் மனிதனை – முன்னேற்றும் புனிதப் பணியில் மாணவர் சமுதாயம் ஈடுபட வேண்டுகிறேன்.

## அறிவு புகட்ட வேண்டும்!

சமுதாயத்திற்கு உழைக்கவேண்டும் என்று ஆர்வத்திலுள்ள மாணவர்கள், கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள பாமர மக்களுக்கு அறிவு புகட்ட வேண்டும்.

## சிறந்த ஆசான்!

மாணவர்களின் மனவளம் அவர்களின் குடும்ப வளத்தையே பெரிதும் பொறுத்திருக்கிறது. கல்வியில் நாட்டம் பிறக்கவும், அதில் ஆர்வம் வளரவும் சுற்றுச் சார்பைவிடச் சிறந்த ஆசான் வேறு இருக்க முடியாது.

வாழப் பிறந்தோம், அதற்கேற்ப வையகத்தை மாற்றி அமைப்போம்; அவரவர் தத்தமக்குக் கிடைத்திடும் வாய்ப்புக்கு ஏற்ப, அந்தப் பொது நோக்கம் வெற்றி பெறப் பணியாற்ற வேண்டும்.

## அறிவுத்தூதர்களாக விளங்க வேண்டும்!

பகுத்தறிவுப் பிரச்சாரம் கடினமானதுதான்! ஆனால், வாலிபப் பருவத்திலுள்ள மாணவர்களைவிட, வேறு யாரும் இப்பணிக்கு இலாயக்கு இல்லை. மாணவர்களே, கிராமாந்திரத்திலுள்ள மக்களிடம் அறிவு எடுத்துச் சொல்லுகிற தூதுவர்களாக விளங்க வேண்டும்.

## ஆராயும் அறிவு வேண்டும்

எத்தகைய கருத்துக்கும் நீங்கள் மனத்திலே இடம் தருவதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. மாணவ மணிகளாகிய உங்களுக்கு ஆராயும் அறிவு வேண்டும். நீங்கள் அனைவரும் புத்துலகச் சிற்பிகளாக வேண்டும். உங்களிடத்தில் தீரமும், திறமும் இருந்தால் மட்டும் போதாது. இத்துடன் அறிவு ஆராய்ச்சிகளும் தேவை. அதை அறிவுத் தெளிவோடு ஆராய்ந்து, இது சரி, இது தவறு என்று முடிவு கட்டும் மனப்பான்மை உங்களுக்கு

வேண்டும். இதோடு திட்டவட்டமான கொள்கையும், பெருநோக்கும் உங்களுக்கு இருக்க வேண்டும்.

### சிறந்த புத்தகம்

எல்லாப் புத்தகங்களையும் விட சிறந்த புத்தகம் இந்த பரந்த உலகம்தான்; உலகத்தைவிட உன்னதமான புத்தகம் வேறு கிடையாது.

### உங்களால் முடியும்!

மாணவர்களாகிய உங்களிடம் கைவிடப்பட்ட 'கேஸ்' ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மனிதனை மனிதனாக்க – மனிதனிடமிருந்து மிருகத் தன்மையைப் பிரிக்க – மக்களிடத்திலே மனவளத்தை உண்டாக்க – நீங்கள் பாடுபடவேண்டும். மூட நம்பிக்கையுள்ள மக்களைத் திருத்த டாக்டர்களால் முடியாது; உங்களால் முடியும்.

## எனக்குக் கை கூடாதது அண்ணாவுக்குக் கைகூடியது...

– தந்தை பெரியார்

"பிரசாரங்கள் நடத்துவதில் 'சந்திரோதயம்' போன்ற நாடகம் நடத்துவது மிக முதன்மையானதாகும். இதை நான் பத்து பன்னிரெண்டு ஆண்டு காலமாகவே சிந்தித்து, சிந்தித்து ஒன்றும் சரியாய் கைகூடாமல், இப்போது தோழர் அண்ணாதுரை அவர்கள் துணிவோடு கிளம்பி, முகத்திற்குச் சாயம் பூசிக்கொண்டு மேடை ஏறிப் பாவலாப் போடவும், அதை ஒரே சமயத்தில் 5,000 மக்கள் பார்த்துக் களிக்கும்படியான நிலை ஏற்பட்டிருக்கிறதையும் பார்த்து நான் பெருமை அடையாமல் இருக்க முடியவில்லை.

உண்மையைச் சொல்வதானால், அண்ணாதுரையின் சந்திரோதய நாடகம், அதை பார்த்த மக்களுக்கு வெகு உணர்ச்சியாகவும், அறிவுக்கு நல்விருந்தாகவும், மானத்திற்கு உயர்தர வழிகாட்டியாகவும் – தொடக்கம் முதல் முடிவு வரை – விளங்குகிறது என்பது சிறிதும் மிகைபடக் கூறியதாக ஆகாது".

## பெரியாருக்கு அண்ணா அளித்த பரிசு!

"...நெடுந்தொலைவு போன மகன், திரும்பத் தந்தையைப் பார்க்க வரும்போது கையில் கிடைத்ததை வாங்கி வந்து தருவான். அதேபோல, இன்று பெரியாரை பார்க்க வந்திருக்கிற நானும் ஓர் அன்புப் பரிசை – கனியை – ஏதோ என்னால் இயன்றதை – கொண்டு வந்திருக்கிறேன்.

சுயமரியாதை இயக்கத் திருமணங்களை நடத்திச் சாதி ஒழிப்புக்காகப் பெரியார் பாடுபட்டு வருகிறார். பகுத்தறிவு திருமணங்களும், கலப்புத் திருமணங்களும் நாட்டில் ஏராளமாக நடைபெற்றிருக்கின்றன.

இந்தத் திருமணங்களைச் செல்லுபடியாக்கிச் 'சுயமரியாதைத் திருமணச் சட்டம்' கொண்டு வரப் போகிறோம் என்ற நல்ல செய்தியை அன்புப் பரிசை – கனியை – பெரியாரிடம் அளிக்கிறேன்.

இவ்வாறு 7–6–67இல் திருச்சி பெரியார் மாளிகையில் பொதுவுடைமைத் தலைவர் ப.ஜீவானந்தம் அவர்களுடைய புதல்வியின் திருமண விழாவிலேயே அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்.

அதைக்கேட்டதும், பெரியாரின் உற்சாகம் கங்கு, கரையையெல்லாம் உடைத்துக் கொண்டு பொங்கிப் பெருகியது! தம் பருத்த மேனி குலுங்கச் சிரித்து மகிழ்ந்து கை தட்டினார்.

பூரிப்பில் மிதந்த பெரியார் அவர்கள் "இதை அண்ணா அவர்களின் அருள்வாக்காகவே எடுத்துக் கொள்கிறேன்" என்று கூறி புகழ் மாலை சூட்டினார் அண்ணாவுக்கு!

# கல்கி ஒரு மகா மனிதர்

**- முதலமைச்சர் கலைஞர்**

“நேற்றிரவு 11 மணி அளவில் நம்முடைய கல்கி இராஜேந்திரன் அவர்கள் தொலைபேசி மூலமாக என்னைத் தொடர்பு கொண்டு சரியாக ஆறு மணிக்கெல்லாம் வந்து விடுவீர்களா என்று கேட்டார். நான் ஏற்கெனவே இந்த நிகழ்ச்சிக்கு ஒத்துக் கொண்டிருந்தாலுங்கூட; நான் எண்ணிக் கொண்டிருந்தது – கல்கியைப் பற்றி என்ன குறிப்பெடுத்து பேச வேண்டியிருக்கிறது? அவரைப் பற்றித்தான் எல்லோருக்கும் தெரியும், நமக்கும் தெரியும், பொதுவாக நான்கு வார்த்தை பேசினால் போதுமே என்று எண்ணினேன். ஆனால் கல்கி இராஜேந்திரன் என்னிடத்திலே தொலைபேசியிலே பேசிய பிறகு இரவு நான் திருவொற்றியூர், அம்பத்தூர், தியாகராயர் நகர் கூட்டங்களை முடித்து விட்டு பத்தரை மணி அளவிலே வீடு வந்து சேர்ந்து அதன்பிறகு அவரிடம் தொலைபேசியிலே பேசிய பிறகு ஏதாவது குறிப்புகள் தயாரிக்க வேண்டுமென்று இரவெல்லாம் கண்விழித்து சில குறிப்புகளைத் தயாரித்தேன். குறிப்புகளுக்காக எனக்குக் கிடைத்த நூல் சுந்தா என்கின்ற ஒரு நல்ல எழுத்தாளர் எழுதிய பொன்னியின் புதல்வர் என்ற பெரிய நூல். அதைப் படித்தேன். கல்கி அவர்கள் ஒரு எழுத்தாளர் மாத்திரமல்ல; தன்னுடைய எழுத்தை கதைகளாக, கவிதைகளாக, கட்டுரைகளாக, சாவி அவர்கள் குறிப்பிட்டதைப் போல நகைச்சுவை துணுக்குகளாக அவர் வெளியிட்டாலுங்கூட அதனுடைய அடித்தளமாக இந்திய நாட்டின் சுதந்திரக் கனல் இருந்தது என்பதை யாரும் மறந்திடவும் முடியாது. மறுத்திடவும் இயலாது. அத்தகைய ஆற்றலாளர் – மறைந்த ஆனால் என்றைக்கும் மறையாமல் இருக்கின்ற கல்கி அவர்கள் ஆவார்கள்.

இன்றைக்குத் தமிழிசைக்கு இவ்வளவு பெரிய மகத்துவம் தமிழ்நாட்டிலே ஏற்பட்டிருக்கிறதென்றால் அதற்கு அடிகோலியவர்களில் ஒருவர் பேராசிரியர் கல்கி என்று சொன்னால் அது மிகையாகாது. அதைப் பற்றி சுந்தா எழுதிய புத்தகத்திலே ஒரு குறிப்பு வருகிறது. அதை உங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 1943 மே மாதத்தில் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார், டாக்டர் ஆர்.கே.சண்முகம் செட்டியாரின் துணையுடன், தமிழ் இசைச் சங்கத்தை நிறுவினார். அந்தச் சங்கத்துக்கு அவர்கள் இருவரும் தாமே தாராளமாய் நன்கொடை வழங்கியும், பிறரிடம் திரட்டியும் நான்கு இலட்சம் ரூபாய் நிதி அமைத்தார்கள்.

அச்சங்கத்தின் ஆதரவில் முதலாவது தமிழிசை மாநாடு, அந்த ஆண்டு இறுதியில், ஒரு பெரிய திருவிழாவைப் போல் சென்னையில் 12 நாட்கள் நடைபெற்றது. அதற்குத் தலைமை வகிப்பதற்காக டி.கே.சிதம்பரநாத முதலியார் குற்றாலத்திலிருந்து



வந்தபோது, அவரை எழும்பூர் நிலையத்தில் பல அன்பர்களுடன் சேர்ந்து மாலையிட்டு வரவேற்றார் கல்கி. தமது பத்திரிகையின் அடுத்த இதழின் அட்டையில் அவருடைய வருகைத் தோற்றத்தை வெளியிட்டு "தமிழர் பண்பாட்டின் உருவம்" என்று அவரை வர்ணித்தார். அதற்கும் அடுத்த புத்தாண்டு இதழில் அந்த மகாநாட்டின் சிறப்பை சிறப்புத் தமிழில் வர்ணித்தார்.

**இன்னிசை வெள்ளத்தில்**
**மூழ்கிப்போன வசைமொழி**

"ஆதி சிவன் பெற்று, ஆரிய மைந்தன் வந்து பணி செய்த தமிழ்த் தாயை வாழ்த்துகிறேன். மூன்று குலத் தமிழ் வேந்தர்கள் போற்றி வளர்த்த தமிழ்த் தாய்க்கு வாழ்த்துக் கூறுகிறேன். தமிழ்நாட்டிலே பிறந்து தமிழ்நாட்டிலே வளர்ந்து தமிழ்நாட்டிலே சிறந்த கர்நாடக சங்கீதக் கலையை வாழ்த்துகிறேன். கர்நாடக சங்கீதத்தின் அன்பர்கள் அனைவருக்கும் வாழ்த்துக் கூறுகிறேன்.

அன்றொரு நாள் பாரதியார் தமிழ் தாயின் வாயிலாகப் புலம்பினார்!

***...என்றந்தப் பேதை உரைத்தான்!***
***இந்த வசை எனக்கு எய்திடலாமோ!***

எதைக் குறித்துப் பாரதியார் இவ்விதம் வருந்தினார்? "மேல் நாட்டுப் புதுக் கலைகளைத் தமிழில் சொல்ல முடியாது, சொல்லும் சக்தி தமிழுக்கு இல்லை" என்று யாரோ ஒரு பேதை உரைத்தது பாரதியாரின் காதில் விழுந்தது. உடனே அவருக்குக் கோபம் மூண்டது. "கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்!" என்று வெதும்பினார்.

தமிழ்த் தாயின் மேல் ஏற்பட்ட வசைகளுக்குள்ளேயே மிகக் கொடியது. "தமிழ் மொழி சங்கீதக் கலைக்கு இசைந்த பாஷை இல்லை" என்பதாகும். கூறத்தகாதவர் கூறிய இந்தக் கொடிய வசையானது சென்னையில் கூடிய தமிழிசை மகாநாட்டு இன்னிசை வெள்ளத்தில் முழுகியே போய்விட்டது.

அந்த மகாநாட்டின் மேடையில் இராஜாஜி, இராஜாசர் அண்ணாமலைச் செட்டியார், டாக்டர் சண்முகம் செட்டியார், சி.என்.அண்ணாதுரை, பம்மல் சம்பந்த முதலியார் ஆகியோரிடையே உரை நிகழ்த்தும் பெருமையைக் கல்கி அடைந்தார் என்று இந்தக் குறிப்புகள் நமக்குக் கூறுகின்றன. இதிலிருந்து தமிழிசையின்பால் பேராசிரியர் கல்கி கொண்டிருந்த பேரன்பும் – பற்றும் – பாசமும் ஆர்வமும் அளவில் அடங்காதது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

அவர் சமுதாயத்திலே ஏற்பட்ட சில நடவடிக்கைகள், கிளர்ச்சிகள் ஆகியவற்றை எப்படி அணுகினார் என்பதற்கு ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். தந்தை பெரியார் அவர்கள் பிள்ளையார் உடைப்பு என்கிற ஒரு நிகழ்ச்சியிலே ஈடுபட்டார். இதை நான் ஆரம்பிக்கும்போது யாரும் பயந்து விடத்தேவையில்லை – இதைப் போய் இப்போது எடுக்கிறானே என்று. கல்கி அதை எப்படி அணுகினார் என்பதற்காக நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். இதையும் சுந்தா அவருடைய நூலிலே குறிப்பிடுகிறார்.

1953ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் தேதியன்று பிள்ளையார் உருவங்கள் செய்து உடைத்தார்கள். பெரிதாக ஒன்றும் நடக்கவில்லைதான். ஆனால் அதன் மூலம் தோன்றிய எதிர்ப்பும் விளைவும் பெரிதாக இருந்தன. அது எவ்வளவு பெரிது. எப்படி என்பதை கல்கியின் தலையங்கத்தின் தொடர்ச்சியிலிருந்து காணலாம்.

(நான் சில நேரங்களில் பிள்ளையார் எப்படி தமிழ்நாட்டிற்கு வந்தார் என்று அந்த வரலாற்றைச் சொல்லியிருக்கிறேன். வாதாபி கணபதி என்று நம்முடைய இசை நிகழ்ச்சிகளிலே பாடுவதிலிருந்தே அவர் வாதாபியிலிருந்து வந்தவர், தமிழ்நாட்டில் தோன்றியவரல்ல என்று கூறுவேன். அதைப் பல பேர் எதிர்த்து அறிக்கை எல்லாம் விட்டிருக்கிறார்கள். ஆனால் எனக்குச் சாதகமாக கல்கி எழுதியிருக்கிறார்)

"பல்லவ சேனாதிபதி பரஞ்சோதியார் வடக்கே படையெடுத்துச் சென்று வாதாபி நகரை எரித்து அழித்த பிறகு, அங்கிருந்து வாதாபி கணபதியை வெற்றி முழக்கத்துடன் ஊர்வலமாக எடுத்து வந்து, தமிழ்நாட்டில் நிலைநாட்டினார் அல்லவா? அந்தக் காலத்தில் தமிழ் மக்கள் விநாயகர் விஷயத்தில் காட்டிய பக்தி நெறியை இத்தனை நூற்றாண்டுகளுக்குப் பிறகு, இன்று மறுபடியும் தமிழ்நாட்டில் கண்டோம். மூலை முடுக்குகளிலும், சந்துபொந்துகளிலும், இடிந்த கோயில்களிலும், குளத்தங்கரை ஆற்றங்கரைகளிலும் வீற்றிருந்த விநாயகர்களுக்கெல்லாம் யோகம் பிறந்துவிட்டது. (இதை பெரியார் உடைத்ததால்) அபிஷேக அர்ச்சனைகளும், உற்சவ ஊர்வலங்களும் அமோகமாக நடைபெற்றன. அறுவகைச் சமயங்களில் ஒன்றான "காணாபத்தியம்" என்னும் சமயமே புத்துயிர் பெற்றுவிட்டதாகத் தோன்றுகிறது.

உண்மையான ஆத்திகர்கள் அவ்வளவாக மகிழ்ச்சி கொள்ள முடியாத, ஏன், வருத்தமே கொள்ளத்தக்க சில நிகழ்ச்சிகளும் நடைபெற்றதை இங்கே குறிப்பிட வேண்டியிருக்கிறது. திராவிடர் கழகத் தலைவரின் உருவப் படங்களைக் கொளுத்துதல், அவரைப் போல் பொம்மைகளைச் செய்து உடைத்தல், கொடும்பாவி கட்டி இழுத்தல் போன்ற செயல்கள் ஆஸ்திகத் தன்மைக்குச் சிறிதும் பொருந்தாத அநாகரிகமான காரியங்கள். 'அன்பே சிவம்' என்பது திருமூலரின் அருள்வாக்கு 'அன்பே கடவுள்' என்னும் கருத்தை ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு விதத்தில் வலியுறுத்தி இருக்கிறது. ஆகையால் அன்பு நெறிக்கு மாறான செயல் எதுவும் ஆஸ்திகம் ஆக முடியாது. வாயினால் மட்டும் ஆஸ்திகம் பேசிக் கொண்டு உள்ளத்தில் நீசத்தனமான துவேஷத்தை

கேட்டிருக்கிறார்கள். "நாஸ்திகப் பிரச்சாரத்தைப் பற்றி உமக்குக் கவலை இல்லையா? ஹிந்து மதத்தைத் தூஷிப்பவர்களைக் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டாமா?'' என்று வேறு சில நேயர்கள் கேட்டிருக்கிறார்கள்.

நல்லது, கடவுளைப் பற்றி என்னுடைய கருத்தை விஸ்தரிப்பதில் எனக்கு ஆட்சேபம் இல்லை; கடவுளுக்கும் ஆட்சேபம் இராது. கடவுள் ஒருவர் உண்டு என்பதை நான் நம்புகிறேன். ஆனால் கடவுள் இல்லை என்று வாதிப்பவர்களிடத்தில் எனக்குக் கோபம் கிடையாது. கடவுள் உண்டு என்று சொல்லவும், பிரச்சாரம் செய்யவும் எனக்கு எப்படி உரிமை கோருகிறேனா, அப்படியே கடவுள் இல்லை என்று வாதிக்கவும் பிரச்சாரம் செய்யவும் பிறருக்கு உரிமை கொடுக்க விரும்புகிறேன்...

நிரப்பி வைத்துக் கொண்டிருப்பவர்கள் தான், நாஸ்திகர்கள் மீது பழிக்குப் பழி வாங்க நினைத்து மேற்கூரியவை போன்ற செயல்கள் புரிவார்கள்.

உண்மை ஆஸ்திகர்களுக்கு நாஸ்திகத்தின் மீது வெறுப்பு இருக்கலாம்; ஆனால் நாஸ்திகர்கள் மீது வெறுப்பு இருக்கக் கூடாது.

"கடவுளைக் குறித்து உம்முடைய கருத்தை இன்னும் கொஞ்சம் விஸ்தரிக்க முடியுமா?" என்று சில நேயர்கள்

ஆனால் நாத்திகர்களோ, திராவிட கழகத்தாரோ, மற்றவர்களோ, பிரச்சாரத்தோடு நில்லாமல், பலாத்காரத்தைக் கையாளத் தொடங்கும்போது அது நாட்டுக்கும் சமூகத்துக்கும் எதிரான குற்றமாகிறது.

### பிள்ளையார் சிலை உடைப்பும் அறிஞர் அண்ணாவின் கருத்தும்

இது கல்கி எழுதிய தலையங்கம். அந்தக் கால கட்டத்திலே தான் அறிஞர் அண்ணா அவர்களிடம்

பிள்ளையாரை நீங்கள் உடைப்பீர்களா என்று கேட்டபோது – நான் பிள்ளையாரையும் உடைக்க மாட்டேன், பிள்ளையாருக்கு தேங்காயும் உடைக்க மாட்டேன் – என்று கூறிய கருத்து வெளி வந்தது உங்களுக்குத் தெரியும். அந்தக் கருத்துக்கும் கல்கி அவர்களின் தலையங்கத்திற்கும் எவ்வளவு பொருத்தம் இருக்கிறது பாருங்கள் என்பதற்காகத் தான் இதை நான் உங்கள் முன்னால் படித்துக் காட்டினேன்.

கலைவாணர் என்.எஸ்.கே. நடித்த "நல்லதம்பி" என்று ஒரு படம். அறிஞர் அண்ணா கதை வசனம் எழுதி வெளிவந்த படம். அண்ணா அவர்களைப் பற்றி கல்கி அவர்கள் அவருடைய ஓரிரவு நாடகத்தை தஞ்சாவூரில் பார்த்துவிட்டு – இதோ ஒரு பெர்னார்ட் ஷா என்று அண்ணாவைப் புகழ்ந்து, இவர்தான் தென்னாட்டு பெர்னார்ட் ஷா என்று பாராட்டியிருக்கிறார். அந்த அண்ணா அவர்களுடைய கதை உரையாடல் கொண்ட நல்லதம்பி படம் வெளிவந்தது. அப்படி வெளிவந்த போது அதற்கு பல எதிர்ப்புக் கருத்துகள் எல்லாம் விமர்சனங்களாக எழுதப்பட்டன. அதைப் பற்றி கல்கி தன்னுடைய பத்திரிகையிலே விமர்சனம் எழுப்பினார். அந்த விமர்சனத்திற்கு அவர் தந்த தலைப்பு "என் கடவுள்" என்பதாகும்.

என்.எஸ்.கிருஷ்ணன் எடுத்ததும் நடித்ததுமான அந்தப் படமும் ஆஸ்திகர்களின் கண்டனத்துக்கும், தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைக்கும் இலக்காகி இருந்தது. "நல்லதம்பி என்கிற கெட்ட தம்பி கடவுள் இல்லை என்று மறுப்பதாய் அமைந்த படம்" என்பது அதன்மீது தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில் முக்கியமானது. அதைக் கல்கி மறுதலித்து, உண்மையிலேயே அவன் நல்லதம்பி தான் என்று சொன்னார். பெற்றோர் இருவரையும், உலகம் போற்றும் உத்தமர்கள் மூவரையும் அவன் போற்றியதைச் சுட்டிக்காட்டி, "அன்னை தந்தையரை கடவுள் என்று சொல்வதில் நமக்கு என்ன ஆட்சேபம் இருக்கமுடியும்?" என்று கேட்டார். "அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்" என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. "மாதுரு தேவோபவா! பிதுரு தேவோபவா! என்று உபநிஷதம் முறையிடுகிறது. எல்லா மதங்களிலும், எல்லா நாடுகளிலும் பெற்றோர்களைத் தெய்வம் என்று போற்றுவது வழக்கமாய் இருந்து வருகிறது.

புத்தர், ஏசு, மகாத்மா காந்தி மூவரும் மாநிலம் வாழ்வதற்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்தவர்கள், தீனர்களின் துயரம் தீர்ப்பதற்காக தாங்கள் எல்லையில்லா இன்னல்களை அனுபவித்தவர்கள். அவர்களைக் "கடவுளர்கள்" என்று சொல்வது சாலவும் பொருந்தும்.

ஒரு மனிதன் கோயிலுக்குப் போக வேண்டாம்; மற்ற வெளிப்படையான மதாசாரங்களை அனுஷ்டிக்க வேண்டாம். புத்தர், ஏசு, மகாத்மா இவர்களைப் போற்றி, இவர்கள் காட்டிய வழியில் தன் வாழ்க்கையை ஒருவன் நடத்தினான் என்றால் அவனே உண்மையான ஆஸ்திகன் என்று 5–6–49 கல்கி தலையங்கத்திலே எழுதியிருக்கிறார். இந்த விமர்சனத்தை அச்சமயம் கவர்னர் – ஜெனரலாக இருந்த ராஜாஜி படித்து விட்டு, ரசிகமணி டி.கே.சி. அவர்களுக்கு 7–6–49 அன்று ஒரு கடிதம் எழுதுகிறார். அதிலே "என்.எஸ்.கிருஷ்ணனுடைய நல்ல தம்பி படத்தைப் பற்றி எழுதியிருக்கும் விமர்சனம் மிகவும் நன்றாயிருந்தது என்று கிருஷ்ணமூர்த்திக்குச் சொல்லவேண்டும். "நல்ல டெக்னிக்கை விரும்புகிறவர்கள் வேறு படங்களைப் பார்க்க போங்கள், நல்ல இலட்சியம், நல்ல நடிப்பு, நல்ல சிரிப்பு – இவற்றை விரும்புகிறவர்கள் நல்லதம்பி படத்தைப் பாருங்கள்" என்று வெகு அழகாக முடிந்திருக்கிறது. இந்த நடை கிருஷ்ணமூர்த்திக்குப் பிறகு யார் எழுதப் போகிறார்கள்?" என்று இராஜாஜி அவர்கள் வியந்து பாராட்டியிருக்கிறார் அந்த விமர்சனத்தை.

### மனோகரா கதை வசனம் பற்றி கல்கியின் விமர்சனம்

என்னைப் பற்றியும் சொல்லிக் கொள்ளவேண்டும். இந்தப் புத்தகத்திலே வருகிறது. கழகக் கலைஞர்கள் எழுத்துகளைப் பற்றி கடைசியாக கல்கி எழுதிய விமர்சனம். மனோகரா படத்தைப் பற்றியது. அதைப்பற்றி அவர் சொல்கிறார். ஜீவசக்தியுள்ள வசனத்தின் வெற்றி என்று. எனக்குத் தரப்பட்ட அந்த நற்சான்றை கல்கியால் தரப்பட்ட நற்சான்றை, பெர்னார்ட் ஷா என்று அண்ணாவைப் புகழ்ந்தவர் மனோகரா படத்தைப் பற்றி என்ன சொல்கிறார் என்பதை உங்களுக்குச் சொல்லி நான் அந்தப் பெருமையை அடைய வேண்டாமா? இந்த விழாவிலே நான் அதைச் சொல்லி நான் அடைகின்ற அந்த மகிழ்ச்சி ஒன்றைத்தானே நானே பரிசாக எடுத்துக் கொள்ள விரும்புகிறேன். கல்கி அதிலே எழுதுகிறார்,

"இந்தத் திரைப்படத்தில் வரும் மனோகரன் இராஜ சபையில் நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்துகிறான். அதைச் சொற்பொழிவு என்று சொன்னால் போதாது. ஏனெனில், சாதாரண பேச்சுக்களைக் கூட இந்தக் காலத்தில் சொற்பொழிவு என்று குறிப்பிடுகிறோம்.

மனோகரன் இராஜ சபையில் பேசும் பேச்சை 'சொற்பிரவாகம்', 'சொல் வெள்ளம்', 'சொற் பிரளயம்',

'சொல் சண்டமாருதம்' என்றெல்லாம் சொன்னாலும் திருப்தி உண்டாகவில்லை. சொல் அம்பு மழை – சொல் குண்டு மழை – அணுகுண்டு சொல்மாரி – எரிமலைச் சொற்பொழிவு – என்றெல்லாம் சொல்லக்கூடிய விதமாக, மனோகரன் தீப்பொறி பறக்கும் காரசாரமான சொற்களைக் கொட்டித் தீர்க்கிறான்.

தமிழ் மொழியை எவ்வளவு வன்மையாய்க் கையாள முடியும் என்பதற்கு மனோகரனின் இராஜசபைப் பேச்சு நல்ல எடுத்துக்காட்டு. இந்த வாக்கியங்களில் பொதிந்த புகழ்ச்சிக்கு உரியவர் மு.கருணாநிதி.

– என்று அந்த விமர்சனத்தை கல்கி முடிக்கிறார். அத்தகைய பெருமை ஏன் கல்கிக்கு ஏற்பட்டிருக்கின்றதென்றால் ஒரு எழுத்தாளர் இன்னொரு எழுத்தாளரைப் புகழ்வது அரிது. பொதுவாக ஒரு துறையிலே இருப்பவர்கள் அதே துறையிலே இருக்கின்ற இன்னொருவரைப் புகழ்வது மிகமிக அரிது. ஒரு சங்கீத வித்வான் இன்னொரு சங்கீத வித்வானைப் புகழ மாட்டார். மேடையில் புகழ்வார்கள் ஆனால் தனியாகப் பேசும்போது அந்த புகழ்ச்சி போலியாகவே தோன்றும். அதைப் போலவே ஒவ்வொரு துறையிலும் இருப்பவர்கள் அந்தத் துறையிலே இருப்பவர்களை மனதாரப் பாராட்டுவது என்பது சாதாரணமான காரியமல்ல. அதிலும் கல்கி அவர்கள் இதையெல்லாம் எழுதிய அந்தக் காலக் கட்டம் இருக்கிறதே அப்போது அரசியல் ரீதியாக கல்கி அவர்களுக்கும் திராவிட இயக்கத்தாருக்கும் ஒரு நல்ல சுமூகமான சூழ்நிலை இல்லை என்பதை அறிவீர்கள். அதையெல்லாம் ஒதுக்கி தள்ளிவிட்டு எழுத்து, இலக்கியம், கலை, காவியம் என்ற அளவிலே இவைகளைக் கல்கி நோக்கினார் என்பதை எண்ணும்போது அவர் மிக உயர்ந்த எழுத்தாளர் – எழுத்தாளர் மாத்திரமல்ல – பண்பாளர் – பண்பாளர் மாத்திரமல்ல – மகா மனிதர் என்று சொல்லக்கூடிய அளவிற்கு அவருடைய எழுத்தோவியங்கள், நடவடிக்கைகள், பாராட்டுரைகள், விமர்சனங்கள் என்றைக்கும் சிரஞ்சீவியாக நாட்டிலே நடமாடிக் கொண்டிருக்கின்றன.

கல்கி அவர்களைப் பற்றி ஒரு நாள் முழுதும் பேசிக்கொண்டிருக்கலாம். அவருடைய எழுத்துக்கள் 500 ரூபாய் விலையில், 600 ரூபாய் விலையில், ஆயிரம் பக்கங்கள், இரண்டாயிரம் பக்கங்கள் என்ற சிவகாமியின் சபதம் ஆனாலும் பொன்னியின் செல்வன் ஆனாலும், தியாகப் பூமியானாலும் இவைகள் எல்லாம் தினந்தோறும் படித்து சுவைக்கக் கூடிய எழுத்துக்களாகும். அப்படிப்பட்ட எழுத்துக்களுக்குச் சொந்தக்காரரான கல்கி அவர்கள் தமிழின்பால் தமிழர்களின்பால் எவ்வளவு ஆழ்ந்த பற்று கொண்டிருந்தார் என்பதற்கு அவர் தமிழிசையிலே கொண்டிருந்த பற்றை இங்கே நான் எடுத்துக் காட்டினேன்.

பேர் வைப்பதிலேகூட அவர் பொன்னியின் செல்வன் என்ற அந்த புதினத்திற்கு அவர் தன்னுடைய ஆர்வத்தைக் காட்டியதற்கு இராஜராஜசோழன், இராஜேந்திர சோழன் இவர்களையெல்லாம் குறிப்பிட்ட கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தன்னுடைய மகனுக்கு இராமமூர்த்தி என்றோ, கபாலமூர்த்தி என்றோ பெயர் வைத்திருக்கலாம். அப்படியெல்லாம் வைக்காமல் இராஜேந்திரன் என்று பெயர் வைத்தாரென்றால் இராஜராஜ சோழனுடைய செல்வன் இராஜேந்திரன் என்ற சோழ மன்னருடைய அந்தப் பெருமையை தன்னுடைய உள்ளத்திலே தாங்கியிருக்கிறார் என்று குறிப்பிட்டு இனிமேலாவது நம்முடைய தமிழ்க் குடும்பங்களிலே பெயர் வைப்பவர்கள் நம்முடைய தமிழர்களுடைய வரலாறு விளங்கும்படியாக தமிழ்ச்சொற்கள் ஒளிவிடும்படியாக தமிழ்ப் பெயர்களாக அந்தப் பெயர்களை வைப்பதற்கு கல்கி தன்னுடைய மகனுக்கு இராஜேந்திரன் என்று பெயர் வைத்திருக்கிறாரே – அதைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் வைத்திருக்கிறேன் என்று என்னுடைய குடும்ப பெயர்களைச் சொன்னால் நீ திராவிட இயக்கம், அதைப் போல வைப்பாய் என்று சொல்லி விடுவீர்கள். கல்கியே தமிழ் ஆர்வத்தின் காரணமாக அப்படி பெயர் வைத்திருக்கிறார். எனவே அவரைப் பின்பற்றி இந்த விழாவிலே ஒவ்வொரு தமிழனும் எடுத்துக் கொள்ள வேண்டிய உறுதிமொழி. தன்னுடைய வீட்டுப் பிள்ளைகளுக்கு பெண்ணாக இருந்தாலும் பையனாக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் தமிழ் வரலாற்றுப் பெயர்களை தமிழ்மொழி பெயர்களை வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு வரலாற்றுப் புகழ் வாய்ந்த பெயரை கல்கி அவர்கள் தன் மகனுக்கு இராஜேந்திரன் என்று வைத்திருக்கிறாரே, அதை பின்பற்றுவதற்கு இந்த விழா பயன்படட்டும். குறைந்தபட்சம் அந்த ஒரு சூளுரையாவது அனைவரும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு கல்கி புகழ் வாழ்க வாழ்க என்றுரைத்து என் உரையை நிறைவு செய்கிறேன்".

– கல்கி நூற்றாண்டு விழாவையொட்டி
9–9–1999 அன்று சிறப்பு அஞ்சல் தலைவெளியீட்டு
விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து...

# கலைஞரின் சங்கத் தமிழ்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் படைக்கப்பெற்ற சங்கப் பாடல்கள் — காலந்தோறும் நின்று நிலவுவதற்குத் துணைபுரியும் வகையில் — அறிஞர் பெருமக்கள் பலர் உரைவிளக்கம் தந்துள்ளனர். சங்கப் பாடல்களை எளிய கவிதைகளாக்கி, பாமர மக்களும் படித்துணரும் வகையில் தமிழ்ப்பணியாற்றியவர்களில் கலைஞர் மு. கருணாநிதி குறிப்பிடத்தக்கவர். அவரின் சங்கத் தமிழ் நூல் இங்கு ஆய்வுப் பொருளாகிறது.

*கருவூலப் பொருள்கூட அள்ள*
*அள்ளக் குறையும் — சங்கக்*
*கவிப்பெரியோர்கள் கற்பனையோ*
*அகழ்கின்ற ஊற்றாக நிறையும்*
*பழம்புலவர் பெருமக்கள் தமிழர் வீரம், காதல்*
*பண்பாடு போற்றுகின்ற வாழ்க்கை*
*நெறிமுறைகள்;*
*பாட்டாலே தொகுத்தளித்து, நம்மைப் பிற*
*நாட்டாரும் போற்றுகின்ற செயல்புரிந்தார் (ப.2)*

*இந்தச் சங்கத்தமிழின் பெருமையைச்*
*சாற்றுதல் எளிதோ (ப.4)*

— என நவின்று இவ்வரிய பணியைத் தம் தமிழ்ப் பணியின் தலையாயதாக்கி நிறைவேற்றியுள்ளார் கலைஞர். சங்கப் பாடல்களில் தம்மைக் கவர்ந்த 100 பாடல்களைத் தேர்ந்து இன்றைய மொழி நடைக்கு மாற்றி, முதலில் குங்குமம் வார இதழில் வெளியிட்டார்; பின் அவை சங்கத் தமிழ் நூலானது.

### *சங்கத் தமிழ்*

"சங்கத் தமிழ் என்னும் நூல், சங்க காலத் தமிழ்ச் சொல்லோவியங்கள் சிலவற்றை, இன்றைய தமிழர், இனிது படித்து உணர்ந்து உவகை கொள்ளும் வகையில், தெள்ளத் தெளிந்த தமிழ்க் கவிதைகளாக ஆக்கியளிக்கும் இனிய பனுவல்... சங்கத் தமிழ்ப் பாடல்களைப் படித்து இன்புறும் எண்ணம் மங்கிவிட்ட இக்காலத்தில், அவற்றின் இலங்குகின்ற தன்மையை—இலக்கியப் பாங்கை—மக்கள் நுகரவொட்டாமல் பயிலவொட்டாமல், புறக்கணிக்கத் தூண்டும் சிலருடைய போக்கு மிகுந்து வரும் இந்நாளில், அவற்றைப் போற்றிப் படிக்கும் ஆர்வத்தைப் பொதுமக்களிடையே வளர்க்கின்ற அரும்பணியைப் புரிகின்றன இந்நூலாசிரியர் விளக்கக் கவிதைகள்" எனும் கீ. இராமலிங்கனார் கூற்று இரத்தினச் சுருக்கமாக இந்நூலைப் பற்றி எடுத்தியம்புகிறது.

### *தேர்ந்த பாடல்கள்*

சங்க இலக்கியத்தின் இரு கண்களான அகம், புறம் இரண்டிலும், தம் நோக்கில் தமிழர் வாழ்வினை, தமிழர் பண்பாட்டினை தமிழின்பத்தை மிகுதியாகத் தருவனவாகக் கருதும் பாடல்களைத் தேர்ந்தளித்துள்ளார். எட்டுத்தொகையையும், பத்துப்பாட்டையும் முழுமையாக அறிமுகப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இதில் புலனாகிறது. பத்துப்பாட்டின் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை,



முல்லைப்பாட்டு, மலைபடுகடாம் தவிர்த்த ஏனைய நூல்களின் சிறுசிறு பகுதிகள், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக

— ந.கடிகாசலம்

இதில் விளக்கம் பெற்றுள்ளன. எட்டுத்தொகை நூல்களனைத்தும் கையாளப்பட்டிருப்பினும் புறநானூற்றில் கலைஞருக்குள்ள பற்று அதில் 50 பாடல்களுக்கு மறு ஆக்கம் கொடுத்திருப்பதில் வெளிப்படுகிறது. அகப்பாடல்களில் குறுந்தொகை 16 பாடல் கொண்டு முதலிடம் பெறுகிறது. இசைப்பாடல் வடிவத்திற்குக் குறுந்தொகையை மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார். ஐங்குறுநூற்றில் இரண்டே பாடல்கள் அமைவது அந்நூலின் அடிச் சிறுமை கருதி எனலாம். பரிபாடல், பதிற்றுப்பத்து ஆகியவற்றின் நீட்சியும் செறிவும் சான்றுக்கு ஒன்று என்ற நிலையில் இடம் பெற்றுள்ளன. கபிலர், பரணர், நக்கண்ணையார், பிசிராந்தையார், ஔவையார் முதலான புலவர் பெருமக்கள் பெரிதும் இவரைக் கவர்ந்துள்ளனர்.

தமிழரின் மனிதநேயத்தை உலகிற்கு ஓங்கி ஒலிக்கச் செய்த உயரிய பாட்டான கணியன் பூங்குன்றனின் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதைத் தலைமையாக்கி நூலைத் தொடங்கியிருப்பதும் பாராட்டப்படவேண்டியதாகும். இனி, நூலின் தன்மையை நோக்கலாம்.

### *தலைப்பு*

சங்கப் பாடலுக்கு விளக்க உரை தரும்போக்கில், பாடலுக்குத் தலைப்பிடும் நிலை சிறப்பாக அமைந்துள்ளது. காட்டு: **தகடூரான் தந்த கனி, செவிலி தேடிய சித்திரப்பாவை, வாடைக்காற்றில் வாடிய காதலி, வாணன் மணந்த வண்ணத் திருமகள், மானங்காத்த மறவன், உலைக்களைத்து இரும்பும் ஒருதுளி நீரும்.** இவை வெறும் தலைப்புகள் அல்ல; முழுப்பாட்டின் செய்தியினையும் — உள்ளடக்கத்தினையும் — எடுத்தியம்பும் தலைப்புகளாக அமைந்துள்ளன. விளக்கக் கவிதையைப் படித்துச் சுவைத்து வரும்போதே ஒவ்வொரு தலைப்பும், உரிய சங்கப் பாடலின் உள்ளீட்டை எத்துணை நுட்பமாகவும், பொருத்தமாகவும் நுணுகி அறிந்து சூட்டப் பெற்றிருக்கின்றது என்பதை உணர்ந்து உளங்களிக்கலாம் (ப.vii) என்ற கூற்று முற்றும் பொருத்தமானது.

### *அமைப்பு*

தேர்ந்த பாடல்களை, சங்க இலக்கியத்தை வாசகர்க்கு எளிய முறையில் அறிமுகப்படுத்தல் நோக்கமாதலின், வடிவம் கவிதையாயினும், அதனுள் கதை கூறிச் செல்லும் பாங்கினைக் கையாளுகிறார். இது, கவிதை பற்றிய பின்புலத் தகவல்களைத் தெளிவாக்கப் பெரிதும் துணையாகிறது.

***தடையின்றிக் கொடை வழங்கும் சேர சோழ***
***பாண்டியரை***
***கடையேழு வள்ளல்களைக் குறுநில மன்னவனாம்***
***நல்லியக்கோடனுடன் ஒப்பிட்டுக்காட்டிப்***
***பத்துப்பாட்டில்***
***நத்தத்தனார் பாடியதே சிறுபாணாற்றுப்***
***படையாகும்!***
***பண்டொருநாள் ஓய்மாநாடெனப் பரந்த***
***நிலந்தான்***
***திண்டிவனம் பகுதியாய்த் திரிந்ததெனத்***
***தெளிவார் அறிஞர்!***
***இடைக்கழி நாட்டிற் பிறந்தார் இந்தப்புலவர் —***
***இதனை***
***இன்றைய சென்னைக்கருகேயுள்ள நல்லூர்***
***என்றும் நவில்வார்!***



***மாவிலங்கை, கிடங்கில், எயிற்பட்டினம், வேலூர்,***
***ஆமூர்***
***மாத்தமிழன் நல்லியக்கோடன் ஆட்சியிலே மணம்***
***பரப்பியதை;***
***பாவலராம் நத்தத்தனார் விளக்கிடும் பாங்கே***
***தனிச் சிறப்பாம்! (ப. 269)***

என்பதைச் சான்றாக்கலாம். இதில், பாடிய புலவர், பாட்டுடைத் தலைவன், நூலின் மையக் கருத்து ஆகியன தெளிவாக்கப்பட்டுள்ளன. பாடல் இடம்பெறும் நூலும் சுட்டப்படுவதை,

***கலித்தொகையில் முல்லைக்கலியில் ஒரு***
***தகப்பன்; தன்***
***கட்டழகுப் பூங்கொடியைப் பரிசப் பணமின்றி,***
***தருவதற்குத்***
***தயார் என்று தோள்தட்டி அறிவிக்கின்றானாம்;***
***அதனைத்***
***தமிழ்ப்புலவர் சோழன் நல்லுருத்திரனார் என்பார்***
***சுவைபடச் சொல்லுவதைப் படிக்கும்போழ்து —***
***பலாச்***
***சுளையினை வெல்லுகின்ற தித்திப்பை***
***உணர்வோம் நாம் (ப.352)***

என்பதனால் அறியலாம்.

தொடர்புடைய பிற செய்திகளையும் படிப்பவர்க்குத் தரவேண்டும் என்ற முனைப்பு காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக, முதற்பாடலான யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதற்கான விளக்கவுரையைக் குறிப்பிடலாம். இதில்,

1. பூங்குன்றம் எனப் புறநானூற்றில் இடம் பெற்ற பெயர்தான் மூதறிஞர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் பிறந்த மகிபாலன்பட்டியாக மாறிற்று;

2. இச் செய்தியை உரைத்தவர் பெரும்புலவர் மாணிக்கனார்.

3. இதே பூங்குன்றன் நற்றிணைப் பாடலில், மருந்துக்கு உதவுகின்ற மரத்தின் பட்டைகளை மட்டுமன்றி அந்த மரத்தையே வேரோடு பிடுங்குவதோ? எனக்கேட்டு, பயன்படுவது எதனையும் பாதுகாக்க வேண்டுமெனப் பாங்காக அறிவுரை பகருகின்றான்.

முதலான செய்திகள் இடம்பெறுவது சுட்டத்தக்கது. தொடர்ந்து; குறிப்பிட்ட பாடலுக்கு உரிய விளக்கம் தரும் போக்கில்,

*எல்லா ஊரும் எமது ஊரே*
*எல்லா மனிதரும் எமது உறவே*

என எழுதத் தொடங்கி,

*"ஒரே உலகம்" எனும் கொள்கைதனை – மனிதரெலாம்*
*"ஒரே குலம்" எனும் தத்துவத்தைப் புவியில்*
*கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு*
*முன் தோன்றிய மூத்த குடிப் பிறந்த தமிழ்க்*
*கணியன் பூங்குன்றன், கவிதை நடைச்*
*சொல்லூன்றி நிலைநாட்டுகின்றான்!*

*விதிப்பயனே எல்லாம் என்றுரைத்துச் சோர்ந்து*
*கதியற்றுக் கன்னத்தில் கைவைப்போர்தனைப் பார்த்து;*
*"நன்மைக்கும் தீமைக்கும் காரணங்கள்*
*நமது செயல்களேயன்றி பிறரல்ல"என்று*
*நயம்பட உரைக்கின்றான் அந்த நற்றமிழ்ப்*
*புலவன்! (ப. 6, 8)*

எனப் பாடற் பொருளைத் தருகிறார். அடுத்து, விளக்கவுரையின் இறுதியில், பாடலின் ஒட்டுமொத்த கருத்தினைச் சுருக்கமாக – செறிவாகத் – தொகுத்துரைப்பதும் சுட்டப்பட வேண்டியதாகும். இதற்கு,

*இவ்வாறு;*
*உலக ஒற்றுமை, ஒரு குலக் கொள்கை,*
*உயிரின் தன்மை, உயரிய வினைகள் – வாழ்வில்*
*உற்ற துன்பமும் உவகையின்பமும் ஒன்றெனக் கருதுதல்,*
*உயர்ந்துள்ள செல்வர்க்குப் பணியாமை – வீணில்*
*உழன்றிடும் சிறியோரை இகழாமை; எனப் பல*
*வண்ணமிகு மலர்கள் கொண்டு – உயர்*
*எண்ணங்களைத் தொகுத்தளிக்கும் பெரும்*
*உள்ளம் காணுகின்றோம் இந்தக் கவிதையினில்; புது*
*வெள்ளம் போல் இக்கருத்து பரவட்டும்*
*காசியினில்! (ப.8)*

என்பதைச் சான்றாக்கலாம். தொடர்ந்து, இயன்றவிடங்களில் தமது திறனாய்வுக் கண் கொண்டு பார்த்து சிந்தனை முத்தினையும் தருகிறார். சான்று:

*ஆனால் ஒன்று:*
*ஊரெல்லாம் இணைந்து ஒருலகாய் ஆவதென்பதும்*
*உறவுகொண்டே மனிதகுலம் ஒன்றே எனத் திகழ்வதும்*
*உயரிய குறிக்கோளாம் என்றுரைத்த புலவன் கூட*
*தனது ஊரை மறவாமல் பூங்குன்றமென இணைத்தே*
*கணியன் பூங்குன்றன் எனும்*
*கவிஞனாய் உலவியதைக் கவனமுடன்*
*எண்ணிப் பார்த்தால் – அந்த மாமனிதனையும்*
*மண்ணின் பற்று விடவில்லை என்பதுதான்*
*உண்மையன்றோ, (ப. 8–9)*

இன்று கூட, பலர், தமது பெயருடன் ஊர்ப் பெயரை இணைத்துப் பேசும்போக்கினை நினைவிற்கொண்டே இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார் எனலாம்.

விளக்கவுரை, கருத்துரை ஆகியவற்றின் இறுதியில், சங்கப் பாடலைத் தந்திருப்பது படிப்பவர்க்குப் பயன்தரக்கூடியது. முழுப்பாடலுடன், பாடல் எண், இடம் பெற்ற நூல், பாடியவர் ஆகிய குறிப்புகளையும் தந்திருப்பது, நூலின் நோக்கத்தினை மிகத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

சங்கப்பாடலை அடுத்து, அப்பாடலில் காணும் சில அரிய சொற்களுக்குப் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது. படிப்பவர்க்கு முழுப் பயன் விளைய வேண்டும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடாகும் இது.

(எ—டு)

குறுமக்கள் = இளம்பிள்ளைகள். கோடு = தந்தம்.
கழாஅலின் = கழுவுதல் காரணமாக.
கடாஅம் = யானைக்குப் பிடிக்கும் மதம்.
ஒன்னாதோர் = பகைவர். துன் = நெருக்கம் (ப. 268)

சங்கப் பாடல்களின் இயல்பான செறிவுத்தன்மை, அருஞ்சொற்களின் அடுக்கு, புதைபொருள் போன்றவற்றை விளக்கி, தமிழ் அறிந்த எவரும் மிக எளிதாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நூலின் அடிப்படை நோக்கம் நிறைவேறுவதற்காகச் சில வெளியீட்டு முறைமைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

பாடலுக்குச் சுவை கூட்டல் மட்டுமின்றிக் கற்பவரைக் கவர்ந்திழுக்கும் கூறாக நாடகத் தன்மையைப் பயன்படுத்தியுள்ளார். **முரசுகட்டிலில் மோசுகீரனார்** எனும் பாடலை இதற்கு எடுத்துக்காட்டாகத் தரலாம்.

*மாளிகையின் முன்புறத்தில் உலவுதற்கு*
*மாமன்னன் வந்தபோது வியப்புற்று*
*முரசு கட்டிலருகே விரைந்தான்– ஆங்கு*
*மோசுகீரனார் உறங்குதல் கண்டான்!*

*"வாள் எடுத்து வந்திடவோ அரசே?" யென்று*
*ஆள் ஒருவன் வணங்கி நின்றான்...*
*அரசனின் விழிகள் நெருப்பைப் பொழியும்;*
*அவனது மொழியில் ஆத்திரம் வழியும்;*
*என்றந்த வீரன் நினைத்தற்கு மாறாக*
*"எடுத்துவா விசிறியை!" என்றான் வேந்தன்!*

*காவலனோடிக் கொண்டுவந்த கவரியினைக்*
*கைகளில் ஏந்திக் கவிஞர் மீது*
*கனிவுடன் வீசிப் பணிவிடை புரிந்தான்*
*நனிமிகு புகழுடன் நாடாண்ட வேந்தன்!*

*களைப்பு நீங்கிப் புலவர் எழுகின்ற வரையில்*
*கவரி வீசுதலை மன்னன் நிறுத்திடவில்லை...*
*நெடுநேரம் கழிந்தபின்னர் எழுந்த புலவர்;*
*திடுமெனக் குதித்தார், கட்டிலில் இருந்து!*
*"மன்னவனே என்ன இது?" எனத் துடித்தார்! –*
*"இந்தச்*
*சின்னவன் பெற்ற பேறு" என்றான், சேரன்!*

பொருண்மையை முழுமையாகவும் தெளிவாகவும் தருதல் கருத்தாதலின் துணையாகப் பிற இலக்கியச் சிந்தனைகளையும் இணைத்துத் தருதலும் காணப்படுகிறது. புறநானூற்றில் ஏழடிப் பாடல் ஒன்று. சேரமான் கணைக்கால் இரும்பொறை பாடியது. தமிழர்தம் மானவுணர்வுக்கு ஒளிவிளக்காகத் திகழ்வது. சங்கத் தமிழரின் வீரத்தை — மானம் தவறாது வாழ்ந்த மாண்பினை விளக்கும் பாடல் அது. அதற்கு, 'சங்கத் தமிழ்' ஆசிரியர் தீட்டியுள்ள சொல்லோவியம், சங்கப்பாடல் மீது மோகத்தை உண்டாக்கிவிடுவதைக் காணலாம். பாட்டின் மையப் பொருளை எடுத்து விளக்கும் போக்கில், திருக்குறள் வரிகளை — சரளமாக உவமைகளை — ஆசிரியர் கையாள்கிறார். மேற்படி பாடலுக்கான உரையைத் தொடங்குகையில்,

*மயிர்நீப்பின் வாழாத கவரிமான் போல்*
*மானம்வரின் உயர்நீப்பார் எனும் குறளுக்கு;*
*தயிர் கடைந்தால் தலைகாட்டும் வெண்ணெய் போன்று*
*தமிழ்ச் சங்க காலத்து வீரன் வாழ்வே உண்மைச் சான்று (ப.10)*

என்று மேலும் விளக்கம் தருகிறார். இறுதியில்,

*எப்படிப்பட்டோர் இருந்தார் மறைந்தார் என்பது – அவரவர்*
*எச்சத்தாற் காணப்படும் என்பதற்கொப்ப*
*சேரமான் கணைக்கால் இரும்பொறை*
*வீரவாளினை ஓலையாய்க் கொண்டு*
*தீட்டிய புறப்பாடலை நீட்டுகின்றேன் உம்மிடையே –*
*படித்துப் பாரீர் – உணர்ச்சியால்*
*துடித்துப் போவீர்! (ப.15)*

என்று படிப்போரைத் தூண்டுகிறார்.

சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர் என்பது சங்கத் தமிழ் அகப்பாடல் மரபாயினும், அம்மரபு மீறல், எளிமை நோக்கில்,

*வெடித்து மணம் கமழுகின்ற முல்லைப் பூ*
*அடுக்கி வைத்த பல்வரிசைப் பைந்தொடியால்*
*துடித்துப் போய்த் துவளுகின்றேன் தோழா; என்று*
*தோள் மீது கை போட்டுக் கேலி செய்த*
*'தூயன்' எனும் நண்பனிடம் தொகுத்துரைத்தான்*
*வாள் கொண்டு வையத்தைக் கலக்குகின்ற*
*"வணங்காமுடி" யென்ற பெருவீரன்! (ப.368)*

என்று தலைவன் பெயர் வணங்காமுடி, தோழன் பெயர் தூயன் எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.





பாடலின் தோற்றத்தை உணர்த்துவதற்காகக் கற்பனை நிகழ்வுகளை ஆசிரியர் உருவாக்குவது காணமுடிகிறது. கணியன் பூங்குன்றனின் பாடல் எழுச்சியை,

*இந்நாளில் சில புலவர்போல் வாழ்வார்க்கு*
*வாழ்த்துரைத்து*
*இன்னலுற்று அவர் தாழ்வாராயின் அக்கணமே*
*சிறகடித்து*
*அற்றகுளத்துப் பறவைபோல அடுத்தகுளம்*
*பார்க்கின்ற*
*இயல்புடையார் அப்போதும் சிலர் இருந்திடத்தான்*
*செய்தார்கள்!*
*கணியூர்ப் பூங்குன்றனோ; அவர்கண்டு கவலை*
*மிகக் கொண்டதனால்*
*அணிமணிகள் தமிழில் செய்து அரசர்க்கும்*
*வள்ளல்கட்கும்*
*பூட்டி மகிழ்வதிலே ஆர்வமொரு கடுகளவும்*
*காட்டாமல் இருந்திடவே;*
*நீட்டி முழக்கிச் சிலபேர்; "அரசை அணுகிப் பரிசு*
*பெறப்*
*பாடல்களை இயற்றிடுக!" எனக் கேட்டபோது —*
*கணியன்;*
*பக்குவமாய் விடையளித்து அவர் விருப்பமதைத்*
*தட்டிக் கழித்தான்!*
*"நாடு பற்றிப் பாடுகின்றீர் — நன்று! நன்று*
*நாடாளும் மன்னர் பற்றிப் பாடுகின்றீர் — அதுவும்*
*நன்று!*
*நாடுதனை மீட்பதற்கும் புதிதாகப் பறிப்பதற்கும்*
*கேடுகளைச் சுமந்து விழுப்புண்கள் ஏந்துகின்ற*
*பீடுநடை வீரர் பற்றிப் பாடுகின்றீர் — மிகவும்*
*நன்று!*
*ஏடுகொள்ளா இலக்கியங்கள் காதலையும்*
*களம்புகுவோர் காதையையும்*
*எடுத்தியம்பும் காரணத்தால் என்வழியைத்*
*தனிவழியாய் ஆக்கிக் கொண்டு*
*எல்லா ஊரும் எமது ஊரே*
*எல்லா மனிதரும் எமது உறவே — என*
*எழுதத் தொடங்குகின்றேன்" என்றான்! (ப.6)*

— எனக் காட்டுகிறார்.

ஒரே கருத்தமைந்த, ஒரே பொருண்மை தரும் பாடல்களைத் தொகுத்து, விளக்கவுரை நல்குகிறார். சான்றாக, புறம். 19, 24, 25, 26, 36, 76 ஆகிய 6 பாடல்களின் கருத்துப் பிழிவை, **தமிழ் நெஞ்சங்கள் போற்றிய தலையாலங்கானத்தான்** (ப. 326—329) எனும் தலைப்பில் தந்திருக்கிறார். புறம் 142, 143, 144, 146, 147 ஆகிய பாடல்களின் கருத்துச் சாற்றினை **அன்றைக்கே ஒரு கண்ணகி** (ப. 261—264) எனும் தலைப்பில் பருகத் தருகிறார்.

இசைக்கு மனதை ஈர்க்கும் வல்லமை அதிகமாதலின், தன் சங்கத் தமிழுக்கு இசைப் பாடல் வடிவமும் ஆசிரியர் அளித்திருப்பது சுட்டத்தக்கது. முல்லைக்கலிப் பாடல் ஒன்று.

*ஆயமகன் குழலூதினான்; அந்த*
*ஆயமகள் குழைந்தாடினாள்!*
*ஏறுதழுவி வெற்றி கொண்டால் — அவனை*
*ஏற்றுக்கொள்வேன் என்றுரைத்தாள்!*
*வீறுகொண்டே காளைமீது பாய்ந்துவிட்டான்—பெரு*
*வெற்றி கண்டே அவன்மீது சாய்ந்துவிட்டாள்!*
*(ப.397)*

— எனத் தொடங்கும் பாடலுக்கு, இராகம் செஞ்சுருட்டி, தாளம் ஆதி என்றும் ஆசிரியர் குறித்துள்ளார்.

சங்கப் பாடல்களின் உயிர் நாடியான திணை, துறை, கூறுவோர், கேட்போர் ஆகியன பற்றிக் கவலைப்படாது பாடலின் மையக் கருத்தினை விளக்குவதற்கே முதன்மை அளித்துள்ளார். பாண்டியன் அறிவுடை நம்பியின் படைப்புப் பல படைத்து பலரோடுண்ணும் உடைப்பெருஞ் செல்வராயினும் எனும் புறப்பாடலை (188) தாய் ஒருத்தியின் கூற்றாக,

*மங்கையென்னைத் தாயென்று அழைத்திட*
*மகவொன்று கருவில் அரும்பில் வரையில்*
*மனதுக்கோர் நிம்மதியில்லை*
*மகிழ்ந்து கூத்தாட வழியும் இல்லை (ப.377)*

— என அமைத்திருப்பது சான்றாகும்.

### *சில குறிப்புகள்*

1. எடுத்துக்கொண்ட பாடலோடு நேரடித் தொடர்பில்லை என்றாலும், சங்க காலச் செய்திகளை இடனறிந்து இடைசெருகும் பாங்கு காணப்படுகிறது. மோசிகீரனாரின் பாடலுக்கு (புறம்.50) மாற்று வடிவம் காட்டுகையில்,

*தமிழ் காக்கும் மூவரில் ஒருவன்*
*தகடூர் எறிந்த சேரமான் இரும்பொறையாம்!*

*பதிற்றுப்பத்தில் எட்டாம்பத்துப் பாடி — அவனைப்*

*பாராட்டி மகிழ்வித்த செயலுக்காக— அவன்*
*ஆண்டிருந்த நில முழுதும் கொடையாக*
*அரிசில் கிழார் எனும் புலவருக்குப் பரிசெனவே*
*அறிவித்து*
*அதனைப் பெற அவர் மறுத்திடவே அவரையே*
*தனக்கு*
*அறவுரை கூறும் அமைச்சராக*
*ஆக்கிக்கொண்டான்!*

***செந்தமிழ்பால் வைத்திருந்த பாசத்தாலே***
***செங்கோல் பிடித்திருந்த அவன் கையில்***
***சிலவேளை எழுதுகோலும் ஏறிக்கொண்டு***
***சிறப்புமிகு இலக்கியங்கள் படைத்ததுவாம்! (ப.297)***

என ஆசிரியர் இணைத்துள்ளார். இதனால், சில வரிகளில் அமையும் சங்கப் பாடல்கள் கலைஞரின் கைவண்ணத்தில் சில பக்கங்களுக்கு நீள்கின்றன.

2. பண்டைத் தமிழ் மரபை ஆங்காங்கே எடுத்துக் காட்டுதலும் உண்டு.

*அந்நாளில் புலவரெல்லாம் அகிலத்தை ஆளுகின்ற*
*அரசர்களின் அவைக்களத்தில் அரிய தமிழ்க்*
*கவிகள்பாடி*
*ஆனையென்றும் சேனையென்றும் ஆயிரம்*
*பொற்கிழிகள் என்றும்*
*மானியங்கள் மற்றும் பல பரிசில் என்றும்*
*மலைமலையாய்ப் பெற்றிடுவர் (ப.5–6)*

— என்பதைச் சான்றாகத் தரலாம்.

3. சங்க இலக்கியத்தின் சிறந்த உவமைகள் அவ்வண்ணமே எளிமையாக்கி எடுத்துரைப்பது பாராட்டத்தக்கது.

***இடிக்கும் கேளிர்! நும்குறை ஆக***
***நிறுக்கல் ஆற்றினோ நன்றுமற் றில்ல;***
***ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்***
***கையில் ஊமன் கண்ணிற் காக்கும்***
***வெண்ணெய் உணங்கல் போலப்***
***பரந்தன்று, இந்நோய்; நோன்று கொளற்கு***
***அரிதே (குறுந். 58)***

எனும் வெள்ளிவீதியார் பாடலில் காணும் உவமை,

***அறிவுரை நல்கிடும் அன்பு நண்பனே!***
***அவ்வுரை என்னுடலை உருகாமல்***
***தடுத்திடும் தன்மை கொண்டதாயின்***
***தயங்காமல் ஏற்றிடுவேன்!***
***அவ்வாறு எனைக் காத்திடும் வலிமை***
***அவ்வுரைக்கு உளதாயின் நன்றென்பேன்!***
***கதிரோனின் வெய்யம் தகிக்கும்***
***கடும்பாறை யொன்றில்***
***கையில்லாத முடவனும் – பேச***
***வாயில்லாத ஊமையுமான ஒருவன்***
***உருகிக் கொண்டிருக்கும் பசு***
***வெண்ணெய்தனைக்***
***காப்பாற்ற முடியாத நிலையில்***
***பாறையில் பாழாகும் வெண்ணெயினைப்***
***பாதுகாக்க வாரீர் எனக் கூவவும் முடியாமல்***

***பாய்ந்து சென்று எடுத்தேகிப்***
***பத்திரப்படுத்தவும் இயலாமல்***
***கண்கொண்டு பார்க்கும் காவலனாக மட்டும்***
***நின்று கொண்டிருக்கும் பரிதாபத்தைப் போல்***
***நீயும்; காதல் பிரிவால் உருகிக் கொண்டிருக்கும்***
***– எனக்கு***
***நீண்ட அறிவுரைகளை நீட்டி முழக்குகின்றாய்***
***(பக். 370–371)***

என்று, கலைஞர் விளக்கத்தில் எளிமையடைந் திருக்கிறது.

4. கலைஞரின் தமிழ்ப்பற்று சங்கத்தமிழிலும் வெளிப்படுவதை,

***உப்பு வணிகர் ஓட்டி வருகின்ற வண்டிகளைத்***
***தொடர்ந்து; புலவர்,***
***ஒப்புவமை காட்டித் தீட்டியுள்ள ஓரிருவரிகளிலே***
***விழிபதிந்தால் – நமது***
***மொழி அருமை தெரியும் – முன்னோர்***
***பெருமையெலாம் புரியும்! உலகில்***
***மூத்த குடிப்பிறந்தோர் தமிழர் என்ற வரலாறு***
***விரியும்! (ப. 269)***

— என்பது போன்ற பகுதிகளின் வாயிலாக அறியலாம்.

### *தொகுப்புரை*

பாரதிதாசன், கண்ணதாசன், மு.ரா. பெருமாள் முதலியார் முதலானோர் சங்கப் பாடல்களை மறுஆக்கம் செய்யத் தலைப்பட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். கலைஞரின் சங்கத் தமிழ், தமிழ்த் திருப்பணி என்பது மட்டுமல்ல, சங்கப் பாடல்கள் கடினமானவை எனும் கருத்தை உடைத்துவிட்ட வெற்றிப்பணி எனவும் கூறலாம். ஆழ்ந்த தமிழிலக்கியப் புலமையும், திரைப்படத்துக்குத் திரைக்கதை வசனம் தீட்டியதனால் பெற்ற அனுபவமும் இவ்வெற்றிக்குத் துணையாகின்றன. தமிழ், தமிழர், சங்கத்தமிழ்ப் பண்பாடு என்பதைப் பறைசாற்றும் கலைஞரின் சங்கத்தமிழ் இன்றைய மொழியில் சங்க இலக்கியத்தைப் படைத்துக் காட்டுவதில், மாற்றுக் கருத்து கொண்டோரும் பாராட்டும் வகையில் அமைந்து வெற்றி கண்டிருக்கிறது என்பது உண்மை.

*நன்றி* : சங்க இலக்கியம்
*வெளியீடு* : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ★

# மலேரியா நோய் பரவுவதைத் தடுக்க

மலேரியா நோய் 'அனபிலிஸ்' எனப்படும் ஒருவகை கொசுவினால் பரவுகிறது. இந்த கொசு திறந்த நிலையிலுள்ள கிணறு, நீர்த்தேக்கத் தொட்டிகள், கட்டுமானப் பணி நடைபெறும் இடங்கள், தண்ணீர் தேங்கியிருக்கும் பகுதிகளில் உற்பத்தியாகி வாழ்கிறது இந்நோயினை கட்டுப்படுத்த பொதுமக்கள் கீழ்கண்ட வழிமுறைகளைக் கடைப்பிடித்து ஒத்துழைக்கச் சென்னைக் குடிநீர் வாரியம் கேட்டுக் கொள்கிறது.

1. வீட்டிலுள்ள கிணறு, அடிநிலை மற்றும் மேல்நிலைத் நீர்த்தொட்டிகளைக் கொசுக்கள் புகாமல் மூடி வைக்கவேண்டும்.
2. மொட்டை மாடிகளில் மழைத்தண்ணீர் தேங்காமல் வழிந்து செல்வதற்காகச் சரியான வசதிகள் செய்து வைத்துக் கொள்ளவேண்டும்.
3. மழை தண்ணீர் வீணாகாமல் நிலத்திலும் செலுத்தி சேமிப்பதற்கான வழிமுறைகளை சென்னைக் குடிநீர் வாரியம் இலவசமாக அளிக்கிறது.
4. தண்ணீர் நிரப்பி வைத்துள்ள பாத்திரங்களை மூடிவைக்க வேண்டும்.
5. கட்டுமானப் பணி நடைபெறும் இடங்களில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.
6. பெரிய அளவில் பணி நடைபெறும் இடங்களில் கொசு நோய் ஒழிப்பு மருந்துகளைத் தெளிக்க வேண்டும்.
7. சுற்றுப்புறங்களில் நீர் வழிந்து வீணாவதைத் தடுக்க ஒழுகும் நீர்த்தேக்கத் தொட்டிகளை சீர்செய்து, அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும்.
8. அதிக நீர் அழுத்தம் உடைய பகுதிகளில் அடிநிலை நீர்த் தொட்டிகளில் பந்து வால்வுகளை அமைத்து நீர் வீணாவதைத் தடுக்கலாம்.
9. நீர்க்குழாய் அமைந்துள்ள பகுதிகளின் சுற்றுப்புறத்தை நீர் தேங்கியிரா வண்ணம் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

நோய் வராமல் தடுக்க சென்னைக் குடிநீர் வாரியத்துடன் ஒத்துழையுங்கள்.

## குடிநீரில் சிவப்பு புழு ஒரு கண்ணோட்டம்

தண்ணீர், உலகில் உள்ள ஜீவராசிகள் அனைத்திற்கும் இன்றியமையாத ஒரு பொருள் ஆகும். இந்நீர் ஏரிகளில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் போது மழைநீரால் அடித்துவரப்படும் பொருட்களால் அசுத்தமாகிவிடுகிறது. ஆகையால் கிருமிகள் இல்லாத ஏரிகளைக் காண்பது மிகவும் அரிதாக உள்ளது.

மனிதன் தன் செயல்திறன் மூலம் எவ்வாறு அதைக் குடிநீராக மாற்றுவது என்று ஆராய்ந்து அதில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளான். உலகம் முழுவதும் ஆராய்ச்சிகள் யாவும் எவ்வாறு மனித உடலுக்கு தீங்கு விளைவிக்காத பொருளாகத் தண்ணீரை உற்பத்தி செய்து, வழங்குவது என்று முனைப்புடன் செயல்படுகிறது.

இத்தகைய ஆராய்ச்சிகளின் பயனாக நாம் பருகும் தண்ணீர் பருகுவதற்கு ஏற்றதாகப் பல சோதனைகளுக்கு உட்படுத்தியபின் வழங்கப்படுகிறது.

இவ்வளவு முன்னெச்சரிக்கையாக இருந்தும் சுற்றுப்புற சூழல் காரணமாக சில நுண்பூச்சிகள் நாம் பருகும் குடிநீரில் இருக்க வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது. இது உலகம் முழுவதும் உள்ள ஒரு விஷயமாயினும். அவை எவ்வாறு உற்பத்தியாகி குடிநீரில் கலக்கிறது என்பது பற்றிய ஆராய்ச்சி நடந்துள்ளது.

சென்னை மாநகர் குடிநீர் விநியோகத்தில் இத்தகைய நுண்ணிய பூச்சிகள் சிவப்பு புழு (Blood Worms) என்று சொல்லக்கூடிய புழு அவ்வப் பொழுது சில நிலத்தடி தண்ணீர் தொட்டிகளிலும் மற்றும் மேல்நிலை நீர்த்தொட்டிகளிலும் கண்டதாக அறியப்பட்டுள்ளது.

சென்னைக் குடிநீர் தர வசதி பிரிவில் அத்தகைய சிவப்புப் புழுக்களை பரிசோதித்ததில் டிப்டோரா என்ற இரண்டு இறக்கைகள் கொண்ட நுண்பூச்சி இனத்தைச் சேர்ந்ததாக கண்டறியப்பட்டது. இதை கொசு மற்றும் ஈக்களுக்கும் இடைப்பட்ட விட்டில் பூச்சி போன்ற பூச்சி இனத்தில் சேர்க்கலாம். இது சேர்க்கையின் பின் ஒரே தடவையில் 200க்கும் மேற்பட்ட முட்டைகளை இடவல்லது. இதற்குத் தண்ணீர் தொட்டிகளில் உள்ள அழுக்குகளே உணவாக அமைகிறது. முட்டை, புழுவாக மாறி தண்ணீரில் மேல் நிலைக்கு வந்து கடைசியாகப் பூச்சியாக மாறுகிறது. உலக

*சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியாக நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணன் அவர்கள்*
***9–9–1999*** *அன்று ராஜ்பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில்*
*மேதகு தமிழக ஆளுநர் செல்வி பாத்திமா பீவி அவர்கள் முன்னிலையில் பதவி பிரமாணம் ஏற்கிறார்.*

சுகாதார நிறுவனம் (W.H.O.) இதை பற்றி கூறும்போது சிவப்பு புழு குடிநீரில் ஏனைய நாடுகளில் உள்ளதாக அதன் ஆராய்ச்சியில் கூறியுள்ளது.

இத்தகைய ஏனைய ஆராய்ச்சிகளின் சான்றுகள் இருப்பினும் சென்ற ஆண்டு எக்ஸ்னோரா, அண்ணாநகர் பகுதி மக்கள் இத்தகைய புழுக்கள், அவர்கள் குடிநீர்த் தொட்டிகளில் இருப்பதாகக் கூறியபின் சென்னை குடிநீர் தர உறுதி பிரிவு/மாதிரி புழுக்களை இதுபற்றி ஆராய்ச்சி செய்யும் லயோலா கல்லூரி பூச்சிகளின் ஆராய்ச்சி நிலையத்தில் கொடுத்து ஆராய்ந்து வல்லுநரின் ஆய்வு தொகுப்பைக் கொடுக்கக் கோரி இருந்தது.

அதன் அடிப்படையில் இந்த ஆராய்ச்சி மையம் இப்புழுவை தக்கவாறு பராமரித்து அதன் பருவ பரிணாமத்தை ஆய்வு கூடத்தில் உருப்பெற செய்து அந்த பூச்சியின் அங்கப் பகுதிகளை ஆராய்ந்து இது மேற்கூறிய சிவப்புப் புழு (Blood Worms) அல்லது கிரோநமஸ் லார்வே என்ற டிப்டோரா வர்கத்தை சார்ந்தது என்று மதிப்புரை வழங்கியது. மேலும் இந்த புழுக்கள் பார்ப்பதற்கு அருவருப்பான தோற்றத்தைக் கொடுத்தாலும் மனிதனுக்கு, மற்ற கொசு மாதிரி எந்த நோயும் ஏற்படுத்துவதில்லை.

இந்த புழுக்கள், மற்ற கொசுக்கள் மாதிரி மனிதனைக் கடிப்பதில்லை. ஆகையால் இதனால் யாதொரு தீங்கும் அல்லது நோயும் வர வாய்ப்பில்லை. எனினும், இந்த புழுக்கள் தங்கும் இடம் அசுத்தமாக இருப்பதால் இந்த புழுக்களைக் குடிக்கும் நீரிலிருந்து அப்புறப்படுத்தி விடுவது சாலச் சிறந்தது.

ஆகவே இந்த புழுக்கள் வராமல் தடுக்க நாம் நம்முடைய வீடுகளில் உள்ள கீழ்நிலை நீர்த்தொட்டிகள் (Sump) மற்றும் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை (OHT) அடிக்கடி கழுவி சுத்தமாக வைக்க வேண்டும்.

இப்புழுக்கள் உற்பத்தியாகி பெருகுவதைத் தவிர்க்க வீட்டில் உள்ள தண்ணீர் தொட்டிகளை 3 மாதத்திற்கு ஒரு முறையாவது சுத்தம் செய்து சுற்றுப்புறச் சூழல் சுத்தமாக வைப்பதன் மூலம் இந்த புழுக்களை அறவே நீக்க முடியும்.

*நன்றி: சென்னைக் குடிநீர் – செய்தி மடல்*

**“வைரம் ஜொலிக்க வேண்டுமானால், சாணை பிடிக்கத்தான் வேண்டும். தங்கம் பிரகாசிக்க வேண்டுமானால், தணலில் காய்ச்சத்தான் வேண்டும். ஆம், அதைப் போல, நல்வாழ்வு பெற வேண்டுமானால் நாம் பகுத்தறிவுப் பாதையில் செல்லத்தான் வேண்டும்.”**

**– பேரறிஞர் அண்ணா**

# பொன்னியின் புதல்வர்

— சுந்தா

சனிக்கிழமை, ஸ்வாதி நட்சத்திரத்தில் பிறந்தான் — கிறிஸ்து சகாப்தப்படி, 1899 செப்டம்பர் ஒன்பதாம் தேதி.

கிருஷ்ணமூர்த்திக்குப் பிறகு அடுத்தடுத்து இரண்டு தங்கைகள், அப்புறம் ஒரு தம்பி, கடைக்குட்டி ஜகதீசன்.

அம்மாவின் மடியிலும் அக்காளின் இடுப்பிலும் அண்ணனின் பாதுகாப்பிலும் வளர்ந்தான் கிருஷ்ணமூர்த்தி.

இந்த வரலாற்றில் "பொன்னியின் புதல்வர்" எனப் பெயர் பெற்றுள்ள கிருஷ்ணமூர்த்தி, பொன்னுவின் புதல்வராய்ப் பிறந்தவர். பொன்னு என்பது அவருடைய தந்தை ராமசுவாமி அய்யரின் செல்லப் பெயர். பொன்னு என்று பெரியவர்களும், பொன்னுவையர் என்று சிறியவர்களும் அவரைக் கூப்பிடுவதுண்டு. அவர் பக்கத்து மணல்மேடு கிராமத்தின் கர்ணமாய் இருந்த காரணத்தால் கணக்கையர் என்ற பெயரும் அவருக்கு உண்டு. புத்தமங்கலம் அக்கிரகாரத்தில் அவர் வசித்த சொந்த வீட்டுக்குக் கணக்கையர் வீடு என்றே பெயர்.

**ஸ்வாதி நட்சத்திரம்**

அந்தக் காலத்து வழக்கப்படி மிகச் சிறிய வயதிலேயே அல்லாமல், இருபதாவது வயதிலேதான் ராமசாமி அய்யருக்குக் கல்யாணம் ஆயிற்று. அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்றுவிட்டு, பேறு காலத்தில் நேர்ந்த நோயினால் இறந்து போனாள். பிறந்த குழந்தைக்கு, தம் தாயாரின் பெயரான மங்களம் என்பதைச் சூட்டினார் பொன்னுவையர். அந்தக் குழந்தையைப் பாதுகாத்து வளர்ப்பதற்காக, உறவினர்களின் வற்புறுத்தலால் சிறிது காலத்துக்குப் பிறகு இரண்டாம்தாரம் கொண்டார். கொண்ட தாரத்துக்கு அவருடைய குல தெய்வத்து அம்மனின் பெயரே வாய்த்திருந்தது. மூத்தாளைப் போலவே நற்குணவதியாய் இருந்த தையல்நாயகி, அவருடைய மகளைத் தன் மகள் போலவே வளர்த்து வந்தாள்.

மங்களத்துக்கு ஏழு வயதாகியிருந்தபோது தையல் நாயகிக்கு முதல் பிள்ளை வேங்கடராமன் பிறந்தான். அதற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த வரலாற்றின் நாயகன் கிருஷ்ணமூர்த்தி, விகாரி ஆண்டு, ஆவணி 25ஆம் தேதி

**பால பாகவதர்!**

தகப்பனார் திண்ணையிலிருந்து புராணக் கதைகள் சொல்லும்போது, சிறுவன் கிருஷ்ணமூர்த்தி சில சந்தேகங்களை எழுப்பிக் கேள்வி கேட்பான். சின்னப் பையனின் அதிகப் பிரசங்கித்தனம் என்று அதைப் பொன்னுவையர் கருதாமல், தக்கபடி பதில் கூறுவார். அவ்வளவு புத்திசாலித்தனமாய்க் கேள்வி கேட்கத் தோன்றியதை மெச்சுவார்.

பண்டிகை நாட்களில் பஜனையின் கடைசியில் திவ்யநாம சங்கீர்த்தனம் முடிந்ததும், சுடர் விளக்கைக் கிருஷ்ணமூர்த்தி கையிலேந்தி நர்த்தனம் செய்வான். சதங்கை கிலுகிலுக்க அவன் ஆடும் அழகை, உற்றார் ஊரார் மெச்சக் கண்டு, தந்தையும் அவனை மெச்சி வாழ்த்துவார்.

அப்போதெல்லாம் பொன்னுவையர் என்ன நினைத்திருப்பார்? பையன் கெட்டிக்காரன் என்பதைவிட, பக்தி சிரத்தை உள்ளவன் என்பதையே மேலாக நினைத்திருப்பார். தம்மைப் போலவே அவனும் மூன்று காலம் அனுஷ்டானங்கள் செய்து கொண்டு ஓர் ஆசாரப் பிராமணனாய் இருப்பான் என்று தான் நினைத்திருப்பார். இன்னும் சில ஆண்டுகளில் அவன் தெய்வபக்தியைத் தேசபக்தியாய் மாற்றிக் கொள்வான் என்பதையோ, அந்தப் புதிய பக்தியினால் சிறைவாசம் செய்வான் என்பதையோ, பிராமண ஆசாரங்களை விடுத்துத் தீண்டத் தகாதவரைத் தீண்டி, அவர்களுடன் சமபந்தி போஜனம் செய்வான் என்பதையோ, அவர்களுடைய ஆலயப் பிரவேசத்துக்காகப் பிரச்சாரம் செய்வான் என்பதையோ அவர் நினைத்திருக்க முடியாது. ஒரு பத்திரிகையாளனாய், இலக்கியப் படைப்பாளனாய்ப் புகழ் சூடப் போகிறான் என்பதையும் அவர் எதிர் பார்த்திருக்க முடியாது.

**சேச்சேசே!**

தனது கிராமத்தில் காணாத, காண முடியாத விசித்திரமான ஆண்களும் பெண்களும் நிறைந்த நாவல்களைப் படிப்பதில் உண்டான மோகம், சிறுவன் கிருஷ்ணமூர்த்திக்கு முற்றிக் கொண்டது. எங்கிருந்தோ எப்படியெல்லாமோ திரட்டிய நாலைந்து நாவல்களை எடுத்துக் கொண்டு, ஆற்றங்கரை ஆலமரத்தை நோக்கிச் செல்லுவான். மரத்தடியில் சாய்ந்து கொண்டே ஆசையுடன் நாவல்களைப் படிப்பான். "பலே பலே" என்று பாராட்டுச் சொற்களைப் பொழிந்து கொண்டு பக்கங்களைப் புரட்டுவான். திடுக்கிடும் நிகழ்ச்சிகள் வரும் போது, "ஐயோ!" என்று கத்துவான். ஆச்சரியமான நிகழ்ச்சி என்றால், "போடு சக்கை!" மிகமிகச் சுவையான பகுதி ஒன்றைப் படித்து முடித்தால், "நாசமாய்ப் போச்சு!" அவனுடைய அகராதியில் அதற்கு, "பிரமாதம்" என்று பொருள். "சேச்சேச்சே!", "*சீச்சீச்சீ*" என்றாலும் உயர்ந்த பாராட்டே.

வறுத்த நிலக்கடலையை மடியில் கட்டிக் கொண்டு ஒவ்வொன்றாய் உடைத்துத் தின்றுகொண்டே படிப்பான்; கடலை தீர்ந்து போனால், இலேசாக வலிக்கும்படி தலைமயிரைத் திருகிக் கொண்டே படிப்பான்; அல்லது கீழ் உதட்டை நிமிண்டிக் கொள்வான் அதன் மீதுள்ள மெல்லிய தோலை உரித்துக் கொள்வான். உதடு மிகவும் வலித்தால், அதை விட்டுவிட்டு, நெற்றியை விரல் நுனியால் தடவிக் கூச்சம் காட்டிக் கொண்டே படிப்பான். இவைகளெல்லாம் பிற்காலத்தில் சேஷ்டைகளாக நிலைத்து விட்டன.

**எட்ட முடியாத உயரம்!**

"ஸ்ரீதரம் குருஸ்வாமி" என்னும் கே.குருஸ்வாமி, தேசியப் பள்ளியின் ஆசிரியராகவும், 1956லிருந்து ஐந்தாண்டு காலம் தலைமை ஆசிரியராகவும் இருந்தார்.

அதே குருஸ்வாமி, ஓய்வு பெற்றபின், தேசியக் கல்லூரியின் பொன்விழா மலரில், தமது பழைய நினைவுகள் பற்றி ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை எழுதினார். அந்தக் கட்டுரையில் ஒரு பகுதி கல்கியைப் பற்றியது:

கிருஷ்ணமூர்த்தி எனும் பெயர் கொண்ட மாயவரத்து மாணாக்கன் ஒருவன், திருச்சி தேசியப் பள்ளிக் கூடத்தின் அருமை பெருமைகளைப் பற்றி எப்போதும் பேசிக் கொண்டே இருந்தான்; அந்தப் பள்ளியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று மட்டில்லா ஆசை கொண்டிருந்தான். கடைசியில் 1918இல் அவனுடைய ஆசை நிறைவேறியது. அவனுடைய பேச்சிலே மயங்கி நானும் ஆசை கொண்டு இதே பள்ளியில் அடுத்த ஆண்டில் சேர்ந்தேன்.

படிப்பிலே மற்ற மாணவர்கள் எட்ட முடியாத உயரத்தில் இருந்தான் கிருஷ்ணமூர்த்தி. 1921 ஜனவரியில் ஆங்கிலப் பள்ளிகளை விட்டு வெளியேற வேண்டும் என்ற மகாத்மாவின் குரலைக் கேட்டு திடீரென்று அவன் படிப்பை நிறுத்திக் கொண்டான். முதல்வர் இராமானுஜாச்சாரியார் அனுதாபப்பட்டார். ஆயினும் அவர் கிருஷ்ணமூர்த்தியிடம் சொன்னார்: "நீ முதலாவதாய்த் தேறி மேலும் படித்துச் சிறக்க வேண்டியவன். அப்படியே நீ விலக எண்ணினாலும், இன்னும் இரண்டே மாதங்கள் பொறுத்து, சர்க்கார் பரீட்சையே எழுதிவிட்டுப் போயேன்".

"நான துணிந்துள்ள வழிக்கு எஸ்.எஸ்.எல்.ஸி. பத்திரத்தினால் என்ன பிரயோஜனம் ஸார்?" என்று கிருஷ்ணமூர்த்தி கேட்டான். தாம் படித்த பள்ளியையும் பழைய பிணைப்புக்களையும் கல்கி ஒருபோதும் மறக்கவில்லை. பள்ளியின் வைர விழா நடந்தபோது, கல்லூரி நிதிக்காக முனைந்து பணம் திரட்டிக் கொடுத்தார். அதற்கெனச் சென்னையில், பழைய மாணவர் கமிட்டி ஒன்றை அமைத்தார். தமது பத்திரிகையில் சிறப்புக் கட்டுரைகளும் நிதி விண்ணப்பங்களும் வெளியிட்டார். திருமதி சுப்புலஷ்மியின் உதவிக் கச்சேரி ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார்.

**காந்த ஈர்ப்பு**

டாக்டர் டி.எஸ்.சௌந்தரராஜன், இலண்டனில் உயரிய வைத்தியத் தேர்ச்சிகள் அடைந்து, சில ஆண்டுகளுக்கு முன்னால் திருச்சிக்கு வந்து, சொந்த வைத்தியசாலை ஒன்றை நடத்திக் கொண்டிருந்தார். இங்கிலாந்தின் தலைநகரில் அவர் மூன்று ஆண்டு காலம் தங்கியிருக்கையில், புரட்சி தேசபக்தர்களான வ.வே.சு.ஐயருடனும், வீரசாவர்க்கருடனும் தோழமை கொண்டிருந்தார். தாய்நாடு திரும்புகையில், வைத்தியத் தொழிலை நடத்திக் கொண்டே தேச விடுதலைக்காகப் போராடுவது என்று உறுதி பூண்டார். மகாத்மா காந்தியின் ஒத்துழையாமைத் திட்டம் வெளியானதும், அதற்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்வதில் டாக்டர் ராஜன் தீவிரமாய் ஈடுபட்டார்.

அப்படிப்பட்ட ராஜன், ஏற்கெனவே தேசபக்தியினால் பொங்கிக் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தியையும், முத்துக் கிருஷ்ணனையும் மற்றும் சில இளைஞர்களையும் படிப்பைத் துறக்கும்படி செய்ததில் வியப்பில்லை.

டாக்டர் ராஜன் பொழிந்த காந்தச் சொற்களே, தாம் பள்ளியை விட்டு வெளியேறக் காரணமா யிருந்தன என்பதை, 1934இல் நடந்த இந்திய சட்டசபைத் தேர்தலில் அவருக்கு வோட் செய்யும்படி எழுதிய பிரச்சாரக் கட்டுரை ஒன்றில் நகைச்சுவையுடன் கல்கி தெரிவித்தார்.

## முதல் சிறைவாசம்

சாத்வீகமாய்த் தடை உத்தரவுகளை மீறிச் சிறைபுகுவது என்பது தேசபக்தியை எடுத்துக் காட்டும் ஒரு பெருமைச் செயலாகக் கருதப்பட்டது. அடுத்தடுத்து தேசம் முழுவதிலும் தலைவர்களும் தொண்டர்களும் பெருமையுடன் சிறை புகுந்தார்கள். தொண்டர் கிருஷ்ணமூர்த்தியும் அவ்விதப் பெருமைக்காகக் காத்திருந்து, கரூரில் கைதாகி அதை அடைந்தார்.

## அம்மாவின் கவலை

கிருஷ்ணமூர்த்தி, சிறைவாசம் செய்து, தொண்டராய் இருந்து, பின்னர் திரு.வி.க.வின் நவசக்தியில் சேர்ந்த சில மாதங்கள் ஆன பிறகு, அவருடைய தாயார், பிறந்த ஊரான தலையூருக்குப் போய், சகோதரர் ராமுவுடன் கொஞ்ச நாள் தங்கியிருந்தார். அப்போது ஒரு நாள், "பாவம் கிருஷ்ணமூர்த்தி, பட்டணத்திலே எங்கே சாப்பிடுகிறானோ, உடம்புக்கு ஒத்துக் கொள்ளாமல் என்ன சங்கடப்படறானோ!" என்று அங்கலாய்த்துச் சொன்னார்.

"பேசாமல் அவனுக்குக் கல்யாணம் பண்ணி வச்சுட்டாக் கவலைப்படாமல் இருக்கலாமே" என்று ராமு அய்யர் சொல்லி, உள்ளூர் ராமசாமி அய்யரின் பெண் ருக்மிணியைச் சிபாரிசு செய்தார். "தாயார் குஞ்சம்மாளைப் போலவே பெண்ணும் குடித்தனப் பாங்கானவள்" என்பதைக் கேட்டதும் தையல்நாயகி அம்மாளுக்கு அந்தச் சம்பந்தத்தில் விருப்பம் உண்டாயிற்று. கேட்க வேண்டுமா? கிராமத்தில் வீட்டுக்கு வீடு பேச்சுப் பரவி மளமளவென்று காரியங்கள் நடந்தன. பெண்ணின் தகப்பனார், தாயார் மற்றும் உறவினர்கள் எல்லாம் ராமு அய்யர் வீட்டில் கூடி விட்டார்கள். அவர்கள் பேச உட்கார்ந்தபோதே, கோவிலில் அதிர்வெட்டு வெடித்தது. "ரொம்ப நல்ல சகுனம். சுவாமியே அனுக்கிரகம் பண்ணி விட்டார்" என்றார் ஊர்ப் பெரியவர் நாராயணசாமி அய்யர்.

சிறிது நேரத்துக்குப் பிறகு பெண்ணை அலங்காரம் செய்து கொண்டு வந்து பெரியவர்கள் எல்லோருக்கும் நமஸ்காரம் செய்யச் சொன்னார்கள். அவள் குனிந்த போது, மறுபடியும் அதிர்வெட்டுக் கேட்டது.

"இன்னொரு தரமும் ஈஸ்வர சம்மதம் கிடைத்து விட்டது" என்று மகிழ்ந்தார் பெரியவர். "ஜாதகம் கீதகம் ஒண்ணும் பார்க்க வேண்டாம்".

"கிருஷ்ணமூர்த்தி—ருக்மிணின்னு பெயர்ப் பொருத்தம் ஒண்ணே போதுமே!" என்றார் மற்றொரு பெரியவர். அப்போதுதான் அந்தப் பொருத்தத்தை உணர்ந்த எல்லாரும், "ஆமாம், ரொம்பச் சிலாக்கியமான பொருத்தம்" என்றார்கள்.

## அண்ணாவின் பயம்

அக்கிரகாரத்தார் எல்லாருடைய முன்னிலையிலும் நிச்சயதார்த்தம் நடந்து விட்டது. பெரியவரின் வக்கிணைப்படி வேங்கடராம அய்யர் தமது தம்பிக்கு விவரமாய் ஒரு கடிதம் எழுதி, அதிலும் கவரிலும் நாலு மூலைகளிலும் மஞ்சள் தடவி தபாலில் சேர்ப்பித்தார். தம்பி என்ன நினைப்பானோ, எப்படி நடந்து கொள்வானோ என்று கவலைப்பட்டுக் கொண்டே புத்த மங்கலத்துக்குத் திரும்பினார்.

## திரு.வி.க.வின் முடிவு

கண்களை மூடிச் சிறிது யோசித்து விட்டு திரு.வி.க. தொடர்ந்தார்: "பெரியோர்கள் கல்யாணத்தை நிச்சயம் செய்வது நமது ஹிந்து தர்மத்துக்கு ஏற்றதே. வேறு விஷயங்களிலே நான் புதுமைக் கருத்துக்கள் கொண்டவனாயினும், கல்யாண விஷயத்தில் பழைமைக் கருத்தே கொண்டவன்... கல்யாணமே வேண்டாம் என்று நீங்கள் நினைத்தால் அது சரியல்ல. இல்லறத்தில் இருந்தே தாய் நாட்டுக்கும் தாய் மொழிக்கும் பணி செய்ய முடியும். நமது காந்தி அடிகளையே பார்த்துக் கொள்ளலாம். உங்களைச் சில மாதங்களாய்க் கவனித்து வந்ததில், நீங்கள் பெரும் பணிகள் செய்யக் கூடியவர் என்பதை உணர்கிறேன். இந்தப் பணிகளுக்கு இல்லறம் வலிமையூட்டும். உங்கள் அண்ணா நிச்சயம் செய்திருக்கும் பெண் நல்ல மனையாளாய் இருப்பாள் என்பதில் ஐயம் வேண்டாம்.

எதிர்வாதத்துக்கு இடம் வைக்காதபடி, அந்த முனிவர் மண வாழ்த்தே கூறிவிட்டார். அண்ணாவும் தம்பியும் உணர்ச்சிவசப்பட்டு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

## மொழிபெயர்ப்புப் பணி

கல்கியின் 'நவசக்தி' நாட்களின்போது, மகாத்மாகாந்தியின் சுய வரலாற்றுக் கட்டுரைகள் 'யங் இந்தியா' பத்திரிகையில் வந்து கொண்டிருந்தன. அந்தக் கட்டுரைகளைத் தமிழாக்கி 'நவசக்தி'யில் வெளியிடும் பொறுப்பும் பெருமையும் கல்கிக்கு வாய்த்திருந்தன.

## எந்தையும் தாயும்

குடித்தனம் தொடங்கிப் பத்துப் பதினைந்து நாள் ஆன பிறகு, கல்கிக்கு ஓர் அதிர்ச்சி உண்டாயிற்று. தம் மனைவிக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்பதை அறிந்ததால், அதிர்ச்சியாய் இருந்தாலும் கோபித்துக் கொள்ளவில்லை. அது அவளுடைய குற்றம் அல்ல. அவளுடைய பெற்றோர்களின் குற்றம். அந்தக் காலத்தில் எத்தனையோ பெற்றோர்கள் பெண்களை எழுத்து வாசனை இன்றி வளர்த்தார்கள். தமது தாயாருக்குக் கூட எழுதப் படிக்கத் தெரியாது என்பதை நினைத்துக் கொண்டார்.

ஒருநாள் அவர் நவசக்தி அலுவலகத்திலிருந்து கொஞ்சம் முன்னதாக வீட்டுக்குத் திரும்பியபோது, தம் மனைவி அக்கம்பக்கத்து வீட்டுக் குழந்தைகள் புடைசூட உட்கார்ந்து, அவர்களிடமிருந்து பாடம் கற்றுக் கொண்டிருந்ததைக் கண்டார். "பேஷ், பேஷ்! குழந்தைகளோடும் குழந்தைகளிடமிருந்தும் படிப்பதுதான் சரியான வழி" என்று பாராட்டினார். விரைவிலேயே அவள் நன்றாக எழுதவும் படிக்கவும் கற்றுக் கொண்டு விட்டாள். தம் கணவரும் மற்றவரும் எழுதுவதைப் படித்து ரசிக்கவும் தொடங்கினாள்.

இராச் சாப்பாடு முடிந்து, திறந்த முற்றத்தில் ருக்மிணி பற்றுப் பாத்திரம் தேய்க்கையில் அவர் துணையாக இருப்பார். மூங்கில் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பார். அல்லது குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டே பாட்டுப் பாடுவார். அவர் அடிக்கடி பாடும் பாட்டு, பாரதியாரின் "எந்தையும் தாயும்".

## திருச்செங்கோடு

ஆசிரமவாசிகள் எல்லாருமே ஓய்வு நேரங்களில் நூற்க வேண்டும் என்று ராஜாஜி விதி செய்து, தாமே அதன்படி செய்து

காட்டினார். கல்கியின் மனைவி ராஜாஜியின் குமாரியிடமிருந்தும் சந்தானத்தின் மனைவியிடமிருந்தும் நூற்கக் கற்றுக் கொண்டு, அவர்களுடன் உட்கார்ந்து மணிக்கணக்கில் நூற்பார். சில நாட்களில் கணவருடன் போட்டி போட்டுக் கொண்டு நூற்பார். ஒரு சமயம் ஆசிரவாசிகள் எல்லோரும் ஓய்வில்லா ராட்டை நோன்பு ஒன்று நடத்தி, நூற்ற நூலை மகாத்மா காந்திக்குப் பிறந்தநாள் பரிசாக அனுப்பி வைத்தார்கள்.

### விமோசனம்

ராஜாஜியை ஆசிரியராகவும் கல்கியை உதவி ஆசிரியராகவும் கொண்ட மதுவிலக்குப் பிரச்சாரப் பத்திரிகை — "விமோசனம்", சுக்ல வருஷம் ஆவணி மாதத்தில், அதாவது 1929 ஆகஸ்டு மாதத்தில் வெளியாகத் தொடங்கியது.

எடுத்த எடுப்பிலேயே "விமோசனம்" சீரானதொரு வெளியீடாய் இருந்ததற்குக் காரணம், ராஜாஜிக்கும் கல்கிக்கும் பத்திரிகைத் தொழிலில் இருந்த அனுபவம் — மகாத்மா காந்தி 1922இல் சிறையிலிருந்தபோது அவருடைய "யங் இந்தியா" வாரப் பத்திரிகையை நடத்திய அனுபவம் ராஜாஜிக்கு; நவசக்தி அனுபவம் கல்கிக்கு.




### மீண்டும் சிறை

கல்கிக்கு இரண்டாவது சிறைத் தண்டனை 1930 செப்டம்பரில் கிடைத்தது. அதுபற்றி, அதே மாதம் 26ஆம் தேதிய "சுதேசமித்திரன்" பத்திரிகையில் வெளியான செய்தி:

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசி ஸ்ரீமான் ஆர்.கிருஷ்ணமூர்த்தி, 24ஆம் தேதி தடை உத்தரவை மீறிக் கூட்டத்தில் பேசியதால் அவர் 188(2)ஆவது பிரிவின்படி விசாரிக்கப்பட்டு, கோபிச்செட்டிப்பாளையம் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டால் ஆறு மாதக் காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

### விகட மயம்!

1931 இறுதியில் ஆசிரமத்தைவிட்டுக் கல்கி புறப்பட்டார். ஆசிரவாசிகள் அனைவரும் ராஜாஜியின் தலைமையில் கூடி, கல்கி தம்பதியருக்கு நல்வாழ்த்துக் கூறி அவர்களை வழியனுப்பி வைத்தார்கள்.

அப்போது மனைவி ஐந்து மாதக் கர்ப்பிணியாய் இருந்ததால், அவளைக் கல்கி பிறந்தகத்தில் கொண்டு போய் விட்டுவிட்டு, சென்னைக்குச் சென்று, ஆனந்த விகடனின் துணையாசிரியராய், நடைமுறையில் மெய்யாசிரியராய் அமர்ந்தார். அவர் வருவதற்காகவே காத்திருந்த வாசன் 1932 தொடக்கத்திலிருந்து தமது பத்திரிகையை மாதம் இருமுறை இதழாகக் கொண்டு வரச் செய்தார். துமிலனின் துணையுடன் கல்கி, முழு ஊக்கத்துடன் பத்திரிகை வேலையில் ஈடுபட்டார். ஆனந்த விகடன் என்ற பெயருக்கு ஏற்ப, அட்டைப்படம், தலையங்கம், கதைகள், கட்டுரைகள், விமரிசனங்கள் முதலிய எல்லாவற்றையும் விகட மயமாய் ஆக்குவதென இருவரும் திட்டமிட்டு அதை ஈடேற்றுவதில் முனைந்தார்கள்.

### டி.கே.சி.

ஆனந்த விகடனுடன் தொடர்பு கொண்டதற்குச் சில வாரங்களுக்கு முன்னால், அதாவது 1928 ஜூன் மாத இறுதியில் ஒரு நாள் மாலை, நவசக்தி அலுவலகத்திலிருந்து வெளியே புறப்பட்ட கல்கி, மனம் போனபடி காலைப் போக விட்டுச் சென்னைத் தெருக்களில் நடந்து கொண்டிருந்தார். அன்று காங்கிரஸ் கூட்டம் ஏதும் இல்லை; பொழுதுபோக்குக்கு நல்ல நிகழ்ச்சிகளும் இல்லை. அப்படிப் போய்க் கொண்டிருக்கையில், ஒரு ஹாலின் வாசலில், "ஸ்ரீமான் டி.கே.சிதம்பரநாத முதலியார் தமிழின் தனித்தன்மை பற்றி பிரசங்கம் செய்வார்" என்று எழுதிய பலகை ஒன்றைக் கண்டார்.

### பொருநையின் புதல்வர்

நெல்லை நாகரிகத்தின் விளக்கமாய்த் திகழ்ந்த ரசிகமணியைப் பொருநையின் புதல்வர் என்றே வர்ணிக்கலாம். அவருடைய தோழமையினால் பொன்னியின் புதல்வர் தமது தஞ்சைப் பண்பாட்டுடன் நெல்லைப் பண்பாட்டையும் சேர்த்துக் கொண்டார். அந்தச் சங்கமத்தின் புனல் வளத்தில் விளைந்த நற்பயிர்கள் எத்தனையோ!

### வட்டத் தொட்டி

வட்டத்தொட்டி என்பது திருநெல்வேலி வண்ணார்ப் பேட்டையில், டி.கே.சிதம்பரநாத முதலியார் வசித்த சொந்த வீட்டின் விசாலமான கூடத்தில் அமைந்த வட்ட வடிவ முற்றம். அந்த முற்றத்தில் வட்டமாய்ப் போட்டுள்ள பிரம்பு நாற்காலிகளில், டி.கே.சி.யும் அவருடைய இலக்கிய நண்பர்களும் சீடர்களும் அமர்ந்து உரையாடுவார்கள். வட்டத்தொட்டி என்பது நாளாவட்டத்தில், அந்த இடத்துக்கு மட்டுமின்றி, அதில் அளவளாவிய அன்பர்களின் சங்கத்தையும் வளைத்து வழங்கலாயிற்று. 1935லிருந்து சுமார் ஐந்தாண்டு காலம் அந்தச் சங்கம் இயங்கி, தமிழ் இலக்கியம், கலைகள் ஆகியவற்றின் வளர்ச்சியிலும், நம் வரலாற்று நாயகரின் வாழ்க்கையிலும், வெவ்வேறு வகையில் பங்கு கொண்டது.

அந்த வட்டத்தொட்டிக்கு அவ்வப்போது வந்து போனவர்களிலும், அதன் நிலையான உறுப்பினர்களிலும், கல்கியுடன் ஏற்கெனவே சம்பந்தப்பட்டவர்களும் உண்டு; அதன் மூலமாகவே அவருடன் தொடர்பு கொண்டவர்களும் உண்டு.

கல்கியின் சரித்திர நாவல்களுக்குப் பயன்பட்ட பண்டையத் தமிழ் நூல்களைப் பதிப்பித்து அளித்த தமிழ்த் தாத்தா சாமிநாதையர், எண்பது ஆண்டு தாண்டிய பருவத்தில், கைத்தாங்கலாக அந்தத் தமிழ்த்தொட்டியில் இறங்கி அமர்ந்து, எளிமையும் இனிமையும் அருமையும் தவழப் பேசி இருக்கிறார்.

அவருக்குச் சற்றே இளையவரும், கம்பனின் கவிச்சுவையைச் "செந்தமிழ்" பத்திரிகையின் மூலம் முதன்முதலாகக் கல்கிக்கு ஊட்டியவருமான வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் வாலிப மிடுக்குடன் அந்தத் தொட்டியில் வீற்றிருந்து, தமது அகலியை வெண்பாவைப் பாடிக் காட்டியிருக்கிறார்.

"குமரி முனையிலிருந்து காற்றலைகளிலே களிநடனம் புரிந்து வந்த இனிய கவிதைக் குரலோசை" எழுப்பியவர் எனக் கல்கி வர்ணித்த தேசிகவிநாயகம் பிள்ளை, அந்த ரசிகர் வட்டத்தில், தமது பாமணத்தைப் பரப்பி இருக்கிறார்.

"வரும் பொருள் உரைக்கும் வல்லமை கொண்ட இராஜ தந்திர மேதை" — இவ்வாறு கல்கி போற்றிய ராஜாஜி, அந்த ரசிகமணித் தொட்டிலில் அரசியல் சந்தடியை மறந்து இலக்கியத்தின் அமைதியை அனுபவித்திருக்கிறார்.

"அன்பும் ஆர்வமும், பக்தியும் பரவசமும், தமிழும் தயாளமும், இசையும் தாளமும் ஓர் உருவெடுத்தாற் போன்ற பெரியார்" — கல்கியின் இவ்விதப் புகழ் மொழிக்குப் பாத்திரரான டி.எம்.கிருஷ்ணசாமி ஐயர், அந்த வட்டத் தடாகம் நிரம்பத் திருப்புகழைப் பொழிந்திருக்கிறார்.

இகழ்வாய்க் கல்கி கருதிய ஒன்றை, தெய்வமாக் கலை என அவர் உணரும்படி செய்து, அந்த உணர்வினால் சிவகாமி என்ற அமரக் கதைச் செல்வியைக் கற்பனை செய்யக் காரணமாயிருந்த பால சரஸ்வதி, அந்த வட்ட அரங்கிலே சதங்கை ஒலிக்க ஜதிக்கோலம் இழைத்திருக்கிறார்; தாயார் ஜயம்மாளின் நவரச இசைச் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் நவ நவ நாடகங்களை அபிநயித்துக் காட்டியிருக்கிறார்.

## தியாக பூமி

சுதந்திரத்துக்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்னரே, பிரசாரம் பொதிந்த நாவல் ஒன்றைக் கல்கி எழுதினார். அது சினிமாப் படமாகவும் வந்தது. அதுதான் "தியாக பூமி".

அந்த நாவலின் முதற் பதிப்புக்கான முன்னுரையில் டாக்டர் சுப்பராயன் சொல்லியுள்ளதுபோல், "நம் நாட்டில் பெண்களின் சுதந்திரம் இப்போது எப்படிக் குறுகிப் போயிருக்கிறது. அதை எவ்விதத்தில் விரிவடையும்படி செய்யலாம் என்பதே இக்கதையின் முக்கிய இலட்சியம்". இத்துடன் தீண்டாமைப் பிரச்சினை பற்றிய பிரசாரமும் இதில் அடங்கியிருக்கிறது. சமூகப் பிரச்சினைகளான இவைகளைப் பொதிந்து நாவல் எழுதவோ படம் எடுக்கவோ துணிச்சல் வேண்டியதில்லைதான். ஆனால், சுதந்தர வேட்கையைத் தூண்டி விடும் வகையில் துணிச்சலுடன் சேர்த்த காட்சிகளும் நிகழ்ச்சிகளும் அதில் உண்டு. "தாயின் மணிக்கொடி பாரீர்" என்று பாடிக்கொண்டு ஒரு தேசிய பஜனைக் கோஷ்டி செல்வது, சம்பு சாஸ்திரி பேத்தி சாருவுடன் ஊர்ஊராய்ச் சென்று தேசியப் பிரசாரம் செய்வது சாவித்திரியும் அவளுடைய கணவனும் சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைசெல்வது முதலியன அவற்றுடன் (கல்கி இயற்றி, படத்தில் டி.கே.பட்டம்மாள் பாடிய) "பந்தம் அகன்று நம் திருநாடு உய்ந்திட வேண்டாமோ" என்ற பாட்டு வேறு.

"தியாக பூமி படம், பின்னர் தனி நபர் சத்தியாகிரகம் நடந்த சமயத்தில் அரசாங்கத்தின் தடை உத்தரவுக்கு உள்ளாயிற்று. அதன் தேசியப் பிரசார வன்மைக்கு அது ஒரு சான்று.

## விகடன் நாட்கள்

நாட்டின் சுதந்தரத் திருநாளுடன் தேசிய விடுதலை இயக்கம் முற்றுப் பெற்றது. அந்த இயக்கத்தில் ஈடுபட்டோரில் பெரும்பாலோருக்கு அது ஒரு போராட்ட இயக்கமாக மட்டுமே இருந்தது; அவர்களுடைய தேசபக்தி அன்னிய ஆதிக்கத்தைச் சமராடி ஒழிப்பதை மட்டுமே குறியாகக் கொண்டிருந்தது. அவர்களில் எழுத்தாளர்களாயும் பேச்சாளர்களாயும் இருந்தவர்களில் பலரும், தமது எழுத்தையும் பேச்சையும் அந்தக் குறிக்கோளுக்காக மட்டுமே பயன்படுத்தினார்கள். அவர்களில் விதி விலக்காய் இருந்தவர்களில் கல்கியும் ஒருவர். அவருடைய தேசபக்தி இந்தக் குறிக்கோளுக்கு அப்பாலும் விரிந்தது. பாரத நாட்டின் பண்பாடு, அதன் ஒரு பகுதியும் தனித்தன்மை கொண்டதுமான தமிழகப் பண்பாடு ஆகிய இரண்டின் உள்ளீடான தத்துவங்களிலும் வெளியீடான வண்ணங்களிலும் அவருடைய கவனம் லயித்தது. அவற்றை அவர் அனுபவித்து அனுபவித்து,

தமது அனுபவ ஆனந்தத்தை, நேரான கட்டுரைகள் மூலமும் புனைகதைகள் — நாவல்கள் மூலமும், பிறருடன் பகிர்ந்து கொண்டார்.

சுருங்கச் சொன்னால், மிக விரிவானதொரு தேசியத்தால் எழுந்தவை கல்கியின் இலக்கியச் சாதனைகள்.

இந்தச் சாதனைகளின் அறிகுறிகளையும் அடையாளங் களையும், அவருடைய பிள்ளைப் பருவம் முதலே காண முடிந்தது என்றாலும், அவருடைய ஆனந்தவிகடன் நாட்களிலேதான், அவற்றுக்கு வேண்டிய அனுபவங்களும் தொடர்புகளும் துணைகளும் வகையாக வாய்த்தன.

### மகாத்மாவின் திட்டம்

மகாத்மா காந்தி புதியதொரு சத்தியாகிரகத் திட்டத்தை உருவாக்கி அறிவித்தார். தேசபக்தர்கள் தனித்தனியாகவும், அமைதியான முறையிலும், சட்டத்தை மீறிச் சிறை புகுவதற்கு அது வகை செய்தது. அந்தத் திட்டத்தின்படி சத்தியாக்கிரகிகள் தனித்தனியே காந்திஜிக்கு விண்ணப்பம் செய்து அவருடைய அனுமதியைப் பெற வேண்டும். அவ்வாறு அனுமதி பெற்றவர், "யுத்த முயற்சியில் ஈடுபடாதீர்கள்" என்று மக்கள் கூட்டங்களில் பேசலாம். அல்லது அவ்விதக் கருத்து அடங்கிய வாக்கியங்களை எழுதிப் படிக்கலாம்; அல்லது இன்னும் அமைதியான, எளிதான முறையில், உரிய அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதி அந்தக் கருத்தைத் தெரிவிக்கலாம். ஆர்ப்பாட்டங்களோ, அமைதிக் குலைவோ, வன்முறைச் செயல்களோ நேராமல் தவிர்ப்பதற்காகவே, இத்தகைய சத்தியாகிரக உத்தியைச் சாந்த மூர்த்தி வகுத்தார்.

### ராஜினாமா !

முன்னிரண்டு விடுதலைப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றிருந்த கல்கி, அப்போது தொடங்கி இருந்த மூன்றாவது பெரும் போராட்டத்திலும் கலந்து கொள்ள விருப்பம் கொண்டார். ராஜாஜி சிறை சென்றதைக் கண்டதும், அந்த விருப்பம், பேராவலாக வளர்ந்தது. ஏற்கெனவே சில ஆண்டுகளாய் அவரை வருத்திக் கொண்டிருந்த ஆஸ்த்துமா நோய், அந்தப் பனிக்காலத்தில் கடுமையாகியிருந்தது. டாக்டர்களைக் கேட்டிருந்தால் சிறைவாசம் பற்றி நினைக்கவே கூடாது என்று தடுத்திருப்பார்கள். ராஜாஜியைக் கேட்டிருந்தாலோ, அவரும் கண்டிப்பாய்த் தடுத்திருப்பார் என்பதோடு, அந்தத் தடைக்குக் கட்டுப்படுவதாய் வாக்குறுதி அளிக்கும்படியும் கேட்டிருப்பார். ஆகவே அவர் யாருடனும் ஆலோசனை கலக்காமல் தாமே தீர்மானம் செய்து கொண்டு, மனைவியிடம் மட்டும் ஜாடையாகச் சொல்லிவிட்டு, சத்தியாக்கிரகம் செய்ய அனுமதி வேண்டி மகாத்மா காந்திக்கு விண்ணப்பம் அனுப்பினார். டிசம்பர் 31ஆம் தேதி காலையில் அண்ணலின் அனுமதி, வீட்டு முகவரிக்கு வந்தது. அதைக் கண்டு மகிழ்ச்சி கொண்ட கல்கி அந்த விவரத்தை ருக்மிணியிடம் தெரிவித்து, "இனி வாசனின் அனுமதிதான் வேண்டும்" என்று சொல்லிவிட்டு, மனைவியின் திகைப்புத் தீருவதற்கு முன்னாலேயே அலுவலகத்துக்குப் புறப்பட்டு விட்டார்.

வாசனின் அறைக்குள் கல்கி நுழைந்தபோது அங்கே அவருடன் துமிலனும் இருந்தார். அவர் போகட்டும் என்று காத்திராமலும், பீடிகை ஏதும் போடாமலும், நேராகவே வாசனிடம் விஷயத்தைச் சொன்னார் கல்கி. இருவருக்கும் இடையே ஐந்து நிமிடம் பேச்சு நடந்தது. அதன் இறுதியில் கல்கி, வாசனின் அறையை விட்டுத் தமது அறைக்குச் சென்றார். தமது மேஜையின் இழுப்பறைகளைத் திறந்து தமது சொந்தக் காகிதங்கள் முதலியவற்றை எடுத்துக் கொண்டார். அக்கம் பக்கத்து அறைகளிலிருந்த தமது சகாக்களிடம், தாம் வேலையை விட்டுவிட்டதாகச் சொல்லி விடை பெற்றுக் கொண்டார். கடைசித் தடவையாக மாடிப்படிகளிலும் வெளிப்படிகளிலும் இறங்கி வெளியே சென்றார். சற்றே திரும்பிப் பார்த்தபோது, அலுவலகச் சிப்பந்திகளிலும் அச்சுக்கூடத் தொழிலாளர் களிலும் சிலர், வாசல் படிகளில் திகைப்புற்று நிற்பதைக் கண்டார். மறுநாள் புத்தாண்டு தினத்தன்று, வீட்டிலிருந்தபடியே, தமது ராஜினாமாக் கடிதத்தை அனுப்பினார்.

### 'கல்கி'

இந்த வரலாற்று நாயகரின் சொந்தப் பத்திரிகைக்கு, அவருடைய பத்துப் புனைப்பெயர்களில் ஒன்றே மகுடமாய் அமைந்திருப்பது இப்போது ஒரு புதுமையாய்த் தோன்றாமல் இருக்கலாம். ஆனால் அதன் முதல் இதழ், 1941 ஆகஸ்டு முதல் தேதியன்று வெளிவந்த போது "கல்கியின் பத்திரிகை கல்கி" என்று எல்லோரும் வியந்து பேசிக் கொண்டது புதுமையாகத்தான் இருந்தது.

மாதம் இருமுறைச் சஞ்சிகையாகத் தொடங்கிய கல்கி, 13ஆம் மாதத்திலிருந்து மாதம் மும்முறையாகவும் 33ஆம் மாதத்திலிருந்து — அதாவது 1944 ஏப்ரலிலிருந்து வாரம் ஒரு முறையாகவும் வெளிவரலாயிற்று.

### தமிழிசை

"சங்கீத யோகம்" என்ற தலைப்புடன், கல்கிப் பத்திரிகையின் இரண்டாவது இதழில், அதன் ஆசிரியர் எழுதிய கட்டுரை ஒன்று வெளியாயிற்று. "ஆடல் பாடல் பகுதியில், கர்நாடகம்" என்ற புனைபெயரில் 16—8—41 தேதிய அந்த இதழ் விநியோகமான அதே சமயத்தில், ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரின் ஆதரவிலும் நன்கொடையுடனும், சங்கீத வித்வான்கள் மகாநாடு ஒன்று, அவர் நிறுவியதும் அவர் பெயரில் வழங்குவதுமான பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. அந்த மகாநாடு கூடியதைத்தான் சங்கீதத்துக்கு வாய்த்த யோகமாகக் கல்கி குறிப்பிட்டார்.

தமிழகக் கலை வரலாற்றில் "சிதம்பரம் மகாநாடு" என்று புகழ்பெற்ற அந்த மகாநாட்டில், ரசிகமணி டி.கே.சி.யுடன் கல்கியும் கலந்து கொண்டார்.

அந்த மகாநாடு இயற்றிய தீர்மானம் ஒன்று, "தமிழ்நாட்டில் தமிழர்களுக்காக நடக்கும் சங்கீதச் கச்சேரிகளில், தமிழ்ப் பாட்டுக்களுக்கு முக்கியமும் கௌரவமும் கொடுத்துப் பாடச் செய்ய வேண்டும்" என்று சங்கீத சபைகளையும் அவைகளை ஆதரிப்பவர்களையும் கேட்டுக்கொண்டது.

அந்தத் தீர்மானத்தை எதிர்த்தும் கண்டித்தும் சென்னையில் கூட்டங்கள் நடந்தன. அவற்றில், சில சங்கீத வித்வான்களுடன், டி.எல்.வெங்கட்ராமய்யர், டி.டி.கிருஷ்ணமாச்சாரி போன்ற சங்கீத ரசிகர்களும், போஷகர்களும் கலந்து கொண்டார்கள். அவர்களுடைய எதிர்ப்பைக் கண்ட கல்கி, "தமிழ்ப் பாட்டு

இயக்கத்துக்கு விரோதமாக எப்போது எதிர்ப்புக் கூட்டங்கள் போட்டாகிவிட்டதோ, அப்போது அதன் வெற்றியைப் பற்றிக் கவலையே வேண்டியதில்லை'' என்று எழுதினார்.

### பயணப் பிரியர்

நூலறிவுடன் நேர்முகக் காட்சி அறிவும், கல்கியின் வரலாற்று நாவல்களுக்குச் சீருட்டின. ''சிவகாமியின் சபதம்'' நாவலை இறுதி வடிவில் தொடராய் வெளியிடுகையில், அவர் நெடும் பயணம் செய்து, அஜந்தாவையும், எல்லோராவையும் பார்த்தார். பின்னர் ''பொன்னியின் செல்வன்'' நாவலுக்காக, அதைவிட விரிவாகச் சோழ நாட்டிலும் ஈழ நாட்டிலும் பயணம் செய்து, தாம் கண்டவற்றைத் தொன்மைக் காலத் தோற்றங்களாய்க் கற்பனை செய்து கொண்டார். இந்தக் காட்சிப் பயணங்கள் பற்றி உடனுக்குடன் அவர் எழுதிப் பிரசுரித்த கட்டுரைகள் ''நம் தந்தையர் செய்த விந்தைகள்'' என்ற நூலில் பின்னர் ஒரு தொகுப்பாய் வெளியாயின.

இரண்டு பயணங்களிலும் ஓவியர் மணியம் கல்கியுடன் சென்றார். அவருடைய கைவண்ணம் கல்கியின் சொல் வண்ணத்துக்குத் துணையாகி, இலக்கிய இன்பத்துடன் காட்சி இன்பத்தையும் சேர்த்து வாசகர்கள் அனுபவிக்கும்படி செய்தது.

நெடும் பயணங்கள் மூலமும் நெடுங்காலப் படிப்பின் மூலமும் அறிந்து கொண்ட செய்திகளை, தமது நாவல்களில் எங்கெங்கே எப்படி எப்படியெல்லாம் கல்கி பயன்படுத்திக் கொண்டார் என்பது விரிவான ஆராய்ச்சிக்கு உரியது.

### கவிஞர் கல்கி!

கல்கியின் எந்தப் பாட்டிலும் சரி, பாரதியார் கவிதையின் அளாவலைப் பொருளிலும் நடைப்போக்கிலும் காணலாம். டி.கே.சி. சொன்னது போல், ''பாரதியார் பாட்டில் உள்ள கவி ரஸத்தை நன்றாய்ப் பார்த்துப் பார்த்து அனுபவித்திருந்தால் ஒழிய இந்த மாதிரி பாட வராது''.

### சுதந்தர ஆனந்தம்

பேரிகை கொட்டுங்கள்! முரசம் முழக்குங்கள்! சங்கம் ஊதுங்கள்! கொடி உயர்த்துங்கள்! விழா நடத்துங்கள்! ''வந்தே மாதரம்'' என்று வணங்குங்கள்! ''வாழ்க பாரதம்'' என்று வாழ்த்துங்கள்! ''ஜே ஹிந்த்'' என்று கோஷமிடுங்கள்!

கனவு அல்ல; பிரமை அல்ல; கற்பனையும் அல்ல; நம்முடைய வாழ்நாளில், நம்முடைய கண் முன்னே, இதோ பாரத புண்ணிய பூமி பூரண சுதந்தரம் அடைந்தது! இருநூறு வருஷத்து அந்நிய ஆட்சி முடிவடைந்தது! பரதக் கண்டத்துப் பெரியோர்கள் செய்த தவம் சித்தி அடைந்தது! ஆயிரம் ஆயிரம் தேசபக்தர்கள் கண்ட கனவு நனவாயிற்று! இலட்சோப இலட்சம் தேசத் தொண்டர்கள் செய்த தியாகம் பலன் தந்தது! பகவத் கீதையில் பகவான் அருளிய திருவாக்குப் பலித்தது! சத்தியம் ஜயித்தது!

அதோ, இந்தியாவின் சுதந்தரக் கொடி நாடெங்கும் பறப்பதைப் பாருங்கள்! நேற்று வரையில் பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடி பறந்து கொண்டிருந்த கவர்ன்மெண்ட் மாளிகையிலும், இராணுவக் கோட்டைகளிலும் சர்க்கார் காரியாலங்களிலும் இன்று தாயின் மணிக்கொடி வானளாவப் பறப்பதைப் பாருங்கள்! அதில் நீல வர்ணத்தில் பொறித்திருக்கும் அசோக சக்கரத்தையும் பாருங்கள்...

விடுதலைக் களிப்பை அள்ளி வீசும் இந்த ஆரம்ப வாக்கியங்களுடன், 1947 ஆகஸ்ட் 15ஆம் தேதிய கல்கி சிறப்பு மலரின் தலையங்கம். ''வாழ்க சுதந்திரம்! வாழ்க நிரந்தரம்!!'' என்ற மகுடத்துடன் வெளியாயிற்று. வழக்கத்துக்கும் முன்னாலேயே இதை எழுதிய கல்கி, சென்னை நகரிலே அல்லாமல், ''ஆனந்த நகரம்'' என்று அவர் வர்ணித்த கல்கத்தாவில் சுதந்தரப் பொன்னாளைக் கொண்டாடினார்.

### பாரதி மண்டபம்

எட்டயபுரத்து ''பாரதி இலக்கிய மன்றம்'', 1944 செப்டம்பர் மாதம் டி.கே.சி.யின் தலைமையில் நடத்திய தமிழிசை விழாவில் சிறப்புப் பேச்சாளராய்க் கல்கி கலந்து கொண்டார்.

சென்னைக்குத் திரும்பிய கல்கி, தமது எட்டயபுரம் அனுபவங்களை ''பாரதி பிறந்தார்'' என்ற தலைப்புடன் ஒரு கட்டுரையில் எழுதி, தமது பத்திரிகையின் அக்டோபர் 8ஆம் தேதிய இதழில் வெளியிட்டார். அந்தக் கட்டுரையின் இறுதியில் பாரதி மன்றத்து இளைஞர்கள் தம்மிடம் விடுத்திருந்த வேண்டுகோள் ஒன்றைத் தெரிவித்தார்.

பாரதியார் பிறந்த எட்டயபுரத்தில் அவருடைய ஞாபகார்த்தமாக ஒரு சிறு புத்தக நிலையமாவது ஏற்படுத்த வேண்டும் என்பது எட்டயபுரத்து இளைஞர்களின் விருப்பம். அதற்கு வேண்டிய ஒத்தாசைகளை நான் செய்ய வேண்டும் என்றும், தமிழ் மக்களை அதில் ஊக்கம் கொள்ளச் செய்ய வேண்டும் என்றும் அவர்கள் ரயில் கிளம்பும் வரையில் ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இதோ என்னாலான ஒத்தாசையை நான் செய்தாகி விட்டது. இனிமேல், அந்த ஊக்கமும் உற்சாகமும் உள்ள இளைஞர்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது தமிழ் மக்கள், தமிழ் அன்பர்களின் பொறுப்பு.

நிதி திரட்டும் திட்டம் எதையும் நேராக அறிவிக்காத, பொதுப்படையான வேண்டுகோள் தான் இது. ஆயினும், இதைக் கண்டவுடனேயே கி.ரகுநாதன் என்ற மயிலாப்பூர் இளைஞர் ஐந்து ரூபாய்க்கு ஒரு செக் இணைத்த கடிதம் ஒன்றைக் கல்கிக்கு அனுப்பி வைத்தார். அந்தக் கடிதத்தைக் கல்கி வெளியிட்டு, ''எட்டயபுரத்தில் பாரதியின் ஞாபகார்த்தமாக ஒரு வாசகசாலை அமைக்க வேண்டுமானால், குறைந்தபட்சம் அதற்கு ஒரு பெரிய ஐந்து ரூபாய், அதாவது ஐயாயிரம் ரூபாயாவது வேண்டும்'' என்றும், ஊக்கம் அளிக்கும் விதத்தில் வேறு அன்பர்களிடமிருந்து நன்கொடை வரவில்லை என்றால், அது ஐந்து ரூபாய்ச் செக் ரகுநாதனுக்குத் திரும்பி அனுப்பப்படும் என்றும், அடிக் குறிப்பில் எழுதினார்.

அவ்வளவுதான்! இமயம் முதல் இலங்கை வரை பல ஊர்களிலிருந்து ஒன்றும், பத்தும் நூறுமாக மணியார்டர்களும் செக்குகளும் வந்து குவிந்து, கல்கியையும் கல்கி அலுவலகத்தையும் திணற அடித்தன. நாலு மாதங்களில் 36 ஆயிரம் ரூபாய் சேர்ந்து விட்டது. கோரிய தொகைக்குமேல் ஏழு மடங்கு கிடைத்து விட்டதை 18—2—45 இதழில் கல்கி அறிவித்துப் ''போதும்! போதும்! இனி யாரும் பணம் அனுப்ப வேண்டாம்'' என்று கேட்டு கொண்டார். அதைப் பொருட்படுத்தாமல் மேலும் பலர் பணம் அனுப்பி கொண்டே இருந்தார்கள். 42 ஆயிரம் சொச்சத்துடன் பணம் வரத்து ஓய்ந்ததும், அந்தத் தொகையை

"பாரதி ஞாபகார்த்த நிதி" என்ற கணக்கில் பாங்கில் கட்டிவிட்ட தகவலை, அடுத்த மாதம் 18ஆம் தேதிய இதழில் கல்கி அறிவித்தார்.

அந்தத் தொகையிலிருந்து பத்தாயிரம் ரூபாயைத் தனிப்படுத்தி, அதன் வட்டிப் பணத்தைப் பாரதியின் மனைவி யாருக்கு ஆயுட்காலம் வரை பாங்கி நிர்வாகிகள் அனுப்பிக் கொடுக்கும்படி கல்கி ஏற்பாடு செய்தார். (அதன்படியே செல்லமாளுக்கு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை நூற்றுப் பன்னிரண்டரை ரூபாய் உதவிப்பணம் கிடைத்து வந்தது.)

கூடுதலாய்த் தொகை சேர்ந்ததைப் பார்த்த கல்கி, சிறிதாக நூல் நிலையம் ஒன்றை அமைப்பதென்று தொடக்கத்தில் கொண்ட யோசனையை மாற்றிக் கொண்டு, பெரிதாகவே நினைவாலயம் ஒன்றை எழுப்புவதென்று தீர்மானித்தார்.

### காந்தி மண்டபம்

தமிழ்நாட்டின் புராதனமான சிற்பக் கலைக்கு இணங்கிய முறையில் பிரார்த்தனை மண்டபம் கட்டப்படுகிறது. அதேசமயத்தில் காந்தி மகானுடைய எளிய வாழ்க்கை முறைக்கிணங்க, நுட்பமான வேலைப்பாடுகள் அதிகமில்லாமல் காந்தி ஞாபகார்த்தப் பிரார்த்தனை மண்டபம் கருங்கல் திருப்பணியாக அமைக்கப்படுகிறது. பிரார்த்தனை மண்டபம் முழுவதும் கட்டப்படும்போது அதன் தோற்றம் எப்படி இருக்கும் என்பதன் அறிகுறியை நமது சித்திரக்காரர் காட்டியிருக்கிறார்.

— சித்திரக்காரர் காட்டியதைச் சிற்பிகளின் கை வண்ணத்தால் காணக் கொடுத்து வைக்காதபடி, இந்தக் குறிப்பை எழுதிய ஏழாம் மாதம் கல்கி காலமாகி விட்டார்.

காந்தி ஸ்மாரக் நிதியின் நன்கொடையான இரண்டு இலட்சம் ரூபாய் உள்பட, மொத்தம் நாலு இலட்சம் ரூபாய் செலவில் எழுந்த மகாத்மா மணிமண்டபத்தை 1956 ஜனவரி 27ஆம் தேதி, தைப்பூசத் திருநாளில் ராஜாஜி திறந்துவைத்து, காணக் கொடுத்து வைத்தோருக்கெல்லாம் அதைக் காணிக்கை ஆக்கினார். எத்தனையோ பேர்கள் நிறைந்த அந்த விழாவில், தமது அன்புக்கும் பாராட்டுக்கும் உரிய ஒருவர், தம் பக்கத்தில் இல்லாததைப் பெரியதொரு குறையாக அவர் எண்ணியிருப்பார்.

அந்தக் குறையைச் சிவசண்முகம்பிள்ளை வாய்விட்டுச் சொல்லி, சென்னையில் காந்திக்கு நினைவு சின்னம் அமைப்பதற்கு மூலகாரணமாய் இருந்து, தீவிர ஈடுபாட்டுடன் அதற்கென உழைத்த கல்கியை புகழ்ந்து பேசினார். மொத்த நிதி வசூலில் கால்பங்கு கல்கியின் முயற்சியால் கிடைத்ததாகும் என்பதையும் அவர் பாராட்டுடன் அறிவித்தார்.

காந்தி மண்டபத்தின் தலைவாசற் படிகளில் ஏறி இடப்புறம் திரும்பினால், அங்கே உள்ள சுவரில் ஆவணச் செப்புத் தகடு ஒன்றைக் காணலாம். அதிலே மகாத்மா நினைவுச் சின்னக் குழுவினரின் பெயர்களில் ஒன்றாக "செயலாளர் — ஆர்.கிருஷ்ணமூர்த்தி (கல்கி)" என்று பொறித்திருப்பதைப் பார்க்கலாம்.

அந்தச் செப்பேட்டில் மட்டுமின்றி, மண்டபம் முழுவதிலுமே காந்தி பக்தியினாலும் பணியினாலும் அடைந்த புகழ் வடிவிலே கல்கியின் பெயர் பதிந்துள்ளது.

### கலைக் களஞ்சியம்

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் வெளியீடான "கலைக்களஞ்சியம்" தமிழ்ப் புத்தகங்களிடையே அறிவுக் கருவூலமான அரிய பெரிய சாதனை. பத்துத் தொகுதிகள் கொண்ட இந்நூலின் இரண்டாம் தொகுதி கல்கியின் நினைவுக்குக் காணிக்கையாகி இருக்கிறது. எந்த வகைக்காக என்பதைக் கழகத்தின் தலைவர் தி.சு. அவினாசிலிங்கம், இந்தத் தொகுதியின் முகவுரையில் சொல்லி இருக்கிறார்:

ஆரம்பத்திலிருந்து தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் செயலாளர்களில் ஒருவராக இருந்து அண்மையில் காலஞ்சென்ற கல்கி ஆசிரியர் திரு.ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களைத் தமிழ் உலகம் நன்கு அறியும். அவருக்கிருந்த தமிழன்பு மிகப் பெரியது. அவர் தமிழுக்குச் செய்துள்ள சேவை மறக்க முடியாதது. அவர் மறைவால் தமிழகம் ஓர் அரிய அன்பரை இழந்தது. தமிழ் வளர்ச்சிக் கழகமும் தனது வலக்கரம்போல் இருந்த ஒருவரை இழந்திருக்கிறது. தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் செயலாளராக இருந்து, அதன் வளர்ச்சிக்கும் கலைக்களஞ்சியப் பணிக்கும் அவர் செய்த உதவி அளிவில்லாதது.

**நல்ல நண்பர்**

நண்பர்களின் கடிதங்களைக் கல்கி வரவேற்றார்; உவந்து படித்தார். அவை மூலம் வளர்ந்த நல்லுறவை விரும்பினார். தம் எழுத்துக்களைப் பற்றி அவற்றில் இருக்கக்கூடிய பாராட்டையும் மதிப்பீட்டையும் கண்டு மகிழ்ந்தார். ஆனால் அவை எல்லாவற்றுக்கும் பதில் போட நேரமின்றிச் சங்கடப்பட்டார்.

நண்பர்களும் வியப்பாளர்களும் தம்மைக் காண வருவதையும் அவர் விரும்பினார். ஆனால், அவர்களுக்குத் திருப்தி அளிக்கும் அளவுக்கு அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கப் போதிய நேரம் இருக்கவில்லை. அத்துடன், அவருடைய மனநிலையும் உள்நோக்குக்கும் புறநோக்குக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருந்தது. ஒருபுறம், சிந்தனையாளர், இலக்கியப் படைப்பாளர் என்ற முறையில், அவருக்குத் தனிமை வேண்டியதாய் இருந்தது. இன்னொருபுறம், பொதுப்பணிகளிலும் இயக்கங்களிலும் ஈடுபட்டவர் என்ற முறையில், பிறருடைய பழக்கமும் தோழமையும் வேண்டி இருந்தன. இரண்டுக்கும் என்று தனித் தனியே நேரத்தைப் பங்கீடு செய்து ஒதுக்குவது சாத்தியமாய் இல்லை. அதன் காரணமாய், அவருடைய சுபாவத்தை வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு விதமாய் நண்பர்கள் கண்டார்கள் — புதிய நண்பர்களும் சரி, பழைய நண்பர்களும் சரி. அவருடன் பழகியவர்களில் சிலர் அவருடைய இனிய சுபாவத்தை மெச்சினார்கள்; ''எவ்வளவு அன்பாய்ப் பழகினார் தெரியுமா?'' என்று வியந்து சொன்னார்கள். வேறு சிலரோ, ''அவர் சரியாய்ப் பேசவில்லை'' என்றோ, ''பேசவே இல்லை'' என்றோ குறை கூறி வருத்தப்பட்டார்கள். ஒருவரே இருவித அனுபவங்களை அடைந்ததும் உண்டு.

உற்சாகமான உரையாடலுக்கு இடையே, எப்படித் திடீரெனக் கல்கியின் மனம் உள்நோக்காகத் திரும்பி விடும் என்பதை, பேராசிரியர் ஸ்ரீநிவாச ராகவன் விவரித்துச் சொல்லி இருக்கிறார்:

யாரைச் சந்தித்தாலும் அவரவர் துறைக்குப் பேச்சைத் திருப்பி, அவர்களைப் பேசவிட்டு — தம் துறையைப் பற்றி யார்தான் ஆர்வத்தோடு பேச மாட்டார்கள்? — அந்த ஆர்வத்தைப் பூரணமாக ரசிப்பது கல்கியின் பண்பு. சங்கீதக்காரர் வந்தால் பேச்சு ஒரே சங்கீதமயமாகிவிடும். பேச்சே நின்று சங்கீதமே வந்துவிடும். டி.கே.சி.வந்தால் தமிழ்ப் பாடல் அரசாளும். மாலி வந்தால் சித்திரம் தன்னைப் பற்றிப் பேசும். ஸ்ரீமதி ஐயம்மாளோ பால சரஸ்வதியோ தோன்றினால் பேச்சிலே பரதம் தோன்றும். திருநெல்வேலி ஆசிரியர்கள் நிலைமை, வடஆர்க்காட்டில் உணவுப் பஞ்சம், கும்பகோணத்தில் அன்னதானம், எட்டயபுரத்திலே பாரதி மண்டபம் — யார் யார் எந்தெந்தத் துறையிலே ஈடுபட்டுக் கல்கியிடம் வருகிறார்களோ, அவர்களை அதிலேயே திருப்பி விட்டுப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருப்பார்; உற்சாகமாகவும் கேட்பார். ''பேஷ்! பேஷ்!'' என்ற அவருடைய உற்சாக முத்திரை அடிக்கடி மற்றவர் பேச்சைத் தூண்டும். ஆனால் அதோடு, மற்றவர் பேசிக் கொண்டிருக்கும்போது, சிற்சில சமயங்களில் பேச்சையெல்லாம் மறந்து எங்கேயோ சிந்தனை உலகம் ஒன்றுக்குப் போய் விடுவார். அவருடைய கூர்மையான அறிவிலும், சலியாத கற்பனையினாலும் உண்டாகும் நிலை இது. நம்முடைய பேச்சில் முளைத்த ஏதோ ஒரு குறிப்பு ஒரு செய்தி காரணமாய்த் தமக்குள்ளேயே மிக வேகமாக எண்ண உலகில் அவர் சஞ்சரிக்க முற்படுவதால், நம்மை மறந்து விட்டாரோ என்று கூடத் தோன்றும். இதை உணராமல் அவர் பேரில் கசந்து சென்றவர்களும் உண்டு.

கூடுமானவரை வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் தழுவியதாய்ப் பத்திரிகை இருக்க வேண்டும் என்பதே கல்கியின் நோக்கம். அந்த நோக்கம் காரணமாய்த்தான், கதைகளையும் அரசியல் கருத்துக்களையும் வெளியிடுவதோடு நில்லாமல், சமயம், கலைகள், கல்வி, விவசாயம் போன்ற துறைகளில் பயனுள்ள கட்டுரைகளை வெளியிட்டார். இலக்கியத் துறையில், பி.ஸ்ரீ.யின் ''தமிழ் வளர்ந்த கதை'', ''பாரதி விஜயம்'' போன்ற கட்டுரைத் தொடர்களை வெளியிட்டார். தங்கம்மாள் பாரதியையும் சகுந்தலா பாரதியையும் கொண்டு அவர்களுடைய தந்தையாரின் வாழ்க்கைக் குறிப்புகளை எழுதச் சொன்னார். சங்கீத விற்பன்னர்களையும் வித்வான்களையும் கொண்டு இசைக் கலையைப்பற்றியும் கலைஞர்களைப் பற்றியும் எழுதச் செய்தார். சூலமங்கலம் வைத்தியநாத பாகவதரின் தொடர் கட்டுரைகள் இவ்வகையில் ஓர் இசைக் கலை வரலாறாகவே அமைந்துவிட்டன.

டெல்லியிலிருந்து கே.எஸ்.ஸ்ரீனிவாசன் எழுதியனுப்பிய சொல் ஆராய்ச்சிக் குறிப்புக்களை — அவ்வித ஆராய்ச்சிக்கும் இடம் வேண்டும் என்ற நோக்கத்துடன் — ''இது என்ன வார்த்தை'' என்ற தலைப்புடன், 1945 இதழ்களில் ஒரு தொடராக வெளியிட்டார் கல்கி. (அப்போது சொல் ஆராய்ச்சி செய்த ஸ்ரீனிவாசன், பின்னர் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு, வால்மீகியையும் கம்பனையும் இணைத்த ''காவிய ராமாயணம்'' என்ற நூலினை இயற்றினார்).

தமிழகத்துத் தனிப் பண்பாட்டின் பெருமையை எடுத்துக் காட்டுவதான ''பொன்னியின் செல்வன்'', கல்கி இதழ்களில் அத்தியாயம் அத்தியாயமாய் வந்த அதே சமயத்தில், அதன் மூலம் வெகுவாகப் பெருகிய வாசகர்களில் பலர், தனி வாழ்வில் பயன்பெற உதவிய கட்டுரைத் தொடர் ஒன்றும் வெளியாயிற்று. 'ஆரோக்கிய ரகசியம்' என்ற அத்தொடரைக் கல்கியின் வேண்டுகோளின்படி எழுதியவர், யோகாசன நிபுணர், வி.என்.குமாரசுவாமி. ''யோகாசன சிகிச்சை'' என்ற அவருடைய இன்னொரு கட்டுரைத் தொடரும் பின்னர் வெளியாயிற்று.

அந்த நிபுணரிடம் பெரிதும் நம்பிக்கை கொண்ட கல்கி, தமது நெடுநாளைய ஆஸ்துமா நோயைக் குணப்படுத்திக் கொள்வதற்காக, அவரிடம் யோகாசன சிகிச்சை செய்துக் கொண்டார். அத்துடன் தம்மைப் போல் அல்லாது, தம் மகனாவது நல்ல ஆரோக்கியத்துடன் வாழட்டும் என்று எண்ணி, அவனுக்கும் யோகாசனப் பயிற்சி அளிக்கச் செய்தார்.

இந்த வரலாற்றின் நாயகர் வாழ்ந்த கடைசி ஆண்டான 1954இல் ''பொன்னியின் செல்வன்'' தொடர் நாவலின் கடைசி அத்தியாயம் மே 16ஆம் தேசிய கல்கி இதழில் வெளியாயிற்று. அந்தக் கடைசி அத்தியாயத்தின் கடைசியில், ''அருள்மொழிவர்மனின் அருமை நண்பனே!'' என்று, கதாநாயகன் வந்தியத் தேவனை ஆசிரியர் விளித்து, ''நீடுழி நீ வாழ்க!'' என்று வாழ்த்தினார். அந்த வாழ்த்தினை அடுத்த வாக்கியத்தில், ''வீரத்தமிழரின் மரபில் உன் திருநாமம் என்றும் நிலைத்து விளங்குவதாக'' என்று விரிவுபடுத்தி அவனுக்கு விடை கொடுத்தார்.

இதே சொற்களில் இல்லாவிட்டாலும், இதே விதத்தில், இந்த வரலாற்றின் நாயகர் பொன்னியின் புதல்வருக்கு நாம் விடை கொடுக்க வேண்டிய இறுதிக் கட்டம் இப்போது வந்திருக்கிறது.

அந்த ஆண்டின் கடைசி மாதம் ஐந்தாம் தேதி அதிகாலையில், கல்கியின் மானிட வாழ்வு ஐம்பத்தைந்தாவது வயதில் முடிவுற்றது.

*நன்றி : கல்கி நூற்றாண்டு விழா மலர் — 1999*

# தமிழ் நாடகத் தந்தை

'தமிழ் நாடகத் தந்தை' என்றும், 'நாடகப் பேராசிரியர்' என்றும், 'தமிழ் மேடை நாடகத்தின் சேக்சுபியர்' என்றும் நாடகக் கலைவாணர்களால் போற்றிப் பாராட்டப்பட்டவர் பம்மல் சம்பந்த முதலியார். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ் நாடகத்தின் நிலை மிகவும் இரங்கத்தக்கதாக இருந்தது. கற்றவர்களால் நாடகக் கலை வெறுத்து ஒதுக்கப்பட்டது. இத்தகைய காலக் கட்டத்தில் பம்மல் சம்பந்த முதலியார் தமிழ் நாடகத் துறைக்குள் நுழைந்தார். தமிழ் நாடகத்திற்குப் புத்துணர்வும் புதுப்பொலிவும் தந்தார். அவர் இதிகாச நாடகங்களையும், புராண நாடகங்களையும் நடத்தி வந்த தொழில்முறை நாடகக் குழுவினரின் போக்கையும் மாற்றினார். அவர்கள் வரலாறு மற்றும் சமூக நாடகங்கள் நடிக்கத் தூண்டுகோலாக அமைந்தார்.

நாடக நடிகர்களைக் கூத்தாடிகள் என்று அழைக்கப்பட்ட வழக்கத்தை மாற்றி, அவர்களைக் கலைஞர்கள் என்று சிறப்பாகக் குறிப்பிடும் நிலைக்கு உயர்த்தினார். தமிழ் நாடக வரலாற்றில் பம்மல் சம்பந்த முதலியாரின் பங்களிப்பு மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. ஆங்கில நாடகங்களையும், வடமொழி நாடகங்களையும் தமிழில் மொழி பெயர்த்து, அவற்றை மேடைகளில் நடித்துத் தமிழ் நாடகத்திற்கு ஒரு புது வடிவத்தைத் தந்தார். அவர் காலத்துத் தமிழ் நாடகங்களில் பாடல்கள் அதிகமாக இருந்தன. அத்துடன் பாடல்களின் விளக்க உரையாடல்கள் மிகவும் குறைந்த அளவில் இடம் பெற்றிருந்தன.

பம்மல் சம்பந்த முதலியார் ஆங்கில நாடகங்களின் அமைப்பைப் பின்பற்றி உரைநடையில் நாடகங்களைப் படைத்தார்.

நாடகக் கலையில் தன்னை முழுமையாக ஈடுபத்திக் கொண்ட பம்மல் சம்பந்த முதலியார் 9—2—1873இல் சென்னையில் பிறந்தார். மாநிலக் கல்லூரியிலும் பின்னர் சட்டக் கல்லூரியிலும் படித்து பி.ஏ.பி.எல்., பட்டங்கள் பெற்றார். சில காலம் வழக்கறிஞராகவும், நீதியரசராகவும் பணியாற்றினார். 24—9—1967இல் மறைந்தார்.

பம்மல் சம்பந்த முதலியார், நாடகத்திற்கு ஆற்றிய தொண்டு தமிழர்கள் என்றும் நினைவில் வைக்கத்தக்கது. கற்றவர்களும் நல்ல குடும்பத்தைச் சார்ந்தவர்களும் தமிழ் நாடகத்தைப் பார்க்க மாட்டார்கள் என்ற கருத்து பம்மல் சம்பந்த முதலியார் நாடகங்களால் மாற்றம் பெற்றது. உயர் குடியில் பிறந்தவர்களையும் புகழ் பெற்ற அரசியல்வாதிகளையும், அறிஞர்களையும் பம்மல் சம்பந்த முதலியார் தம்முடைய நாடகங்களில் நடிக்கச் செய்தார். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சர். சி.பி. இராமசாமி அய்யர், தேசிய இயக்கத்தின் தலைவராக விளங்கிய சத்தியமூர்த்தி, முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ஆர்.கே. சண்முகம் செட்டியார் முதலியோர் ஆவார்கள். அக்காலத்தில் நீதிமன்றத்தில் நீதியரசராகப் பணியாற்றிய பி.வி. சீனிவாச அய்யங்கார் அவர்கள் பம்மல் சம்பந்தனாரின் நாடகப் பணிக்குத் துணை செய்தார்.

நாடகம் என்பது தெருக்கூத்து என்றும், சிற்றூர் மக்கள் மட்டும் அதனைக் கண்டுகளிப்பர் என்றும் நிலவிய கருத்தை மாற்றி நல்ல மேடை அமைத்து, பலவகை நாடகங்களை நடத்தித் தமிழ் நாடகத்தை மேம்படுத்தினார்.

**– முனைவர் ச. சு. இராமர் இளங்கோ**

தற்போதுள்ள போக்குவரத்து வசதிகள் அறவே இல்லாத அக்காலக்கட்டத்தில், பம்மல் சம்பந்த முதலியார் தன்னுடைய நாடகங்களை இந்தியாவில் உள்ள நகரங்களிலும் கடல் கடந்து பர்மா, இலங்கை முதலிய நாடுகளிலும் மேடை ஏற்றினார். இலங்கையில் அவருடைய நாடகங்களைப் பார்த்த கலையரசு சொர்ணலிங்கம் என்பவர், பிற்காலத்தில் ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சிக்குப் பாடுபட்டார். அவர் பம்மல் சம்பந்த முதலியாரைத் தன்னுடைய ஆசான் என்று குறிப்பிட்டுள்ளார்.

அக்காலத்தில் நடத்தப்பட்ட நாடகங்கள் அனைத்தும் இன்பியல் முடிவுடையன. சம்பந்த முதலியார் அந்நிலையை மாற்றி ஆங்கில நாடகங்கள் அமைப்பைப் போன்று, இன்பியலும் துன்பியலும் கலந்து வரும் நாடகங்களைப் படைத்தார். தமிழ் நாடக மேடையில் செய்த பெரிய புரட்சி இதுவாகும்.

ஆங்கில நாடகங்களையும், வடமொழி நாடகங்களையும் அரங்கேற்றும்போது அவற்றைத் தமிழ்ச் சூழலுக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்தார். அதன் விளைவாக வேற்று மொழி நாடகங்கள் தமிழர்களுக்கு அந்நிய நாடகங்களாக ஆகாமல் தடுத்தார்.

வடமொழி, ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மன், லத்தீன் முதலிய மொழிகளிலிருந்து அரங்கேற்றியதன் மூலம் நாடகம் பற்றிய பரந்த விரிந்த பார்வையைத் தமிழக மக்களிடம் ஏற்படுத்தினார்.

பம்மல் சம்பந்த முதலியார் ஆங்கிலம், வடமொழி, பிரெஞ்சு, செர்மன், லத்தீன் முதலிய மொழிகளிலிருந்து நாடகங்களைத் தமிழில் மொழி பெயர்த்தார். அவருடைய மொழிபெயர்ப்பு, தமிழ் நாடகக் கலைக்குக் கிடைத்த பெருஞ்செல்வமாகும். "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும்" என்ற மகாகவி பாரதியாரின் கருத்தை மெய்ப்பித்துள்ளார்.

அந்நாட்களில் தமிழ் நாடகங்கள் விடிய விடிய நடக்கும். அந்நிலையை மாற்றித் தமிழ் மேடை நாடகங்களை மூன்று மணி நேரத்திற்குள் முடிக்க வேண்டும் என்று காலத்தைச் சுருக்கிய பெருமை சம்பந்த முதலியார் அவர்களையே சாரும். இவ்வாறு நாடகத்திற்குரிய கால எல்லையை வரன்முறை செய்தவர் பம்மல் சம்பந்த முதலியார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாடகங்களை எழுதுகின்ற ஆசிரியர்கள் அவர்கள் படைத்துள்ள நாடக மாந்தர்களின் உள்ளுணர்வுப் போராட்டங்களை விவரிக்க வேண்டும். அவ்வாறு விவரிக்கும்போது அந்நாடகங்களைப் பார்க்கின்ற மாந்தர்களுடைய மனங்களும் தூய்மை பெறும் என்று நாடக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பம்மல் சம்மந்த முதலியார் இயற்றிய 'மனோகரா', 'இரு நண்பர்கள்' முதலியவை இவ்வகையைச் சார்ந்தவை.

பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய 94 நாடகங்களில் முதன்முதலாக அச்சிடப்பட்ட நாடகம் 'லீலாவதி — சுலோசனா' ஆகும். இந்நாடகம் 1895ஆம் ஆண்டு சனவரித் திங்களில் வெளிவந்தது. இந்நாடக நூலுக்குப் பம்மல் சம்பந்தனாரின் உயர்நிலைப் பள்ளி ஆசிரியரான முருகேச முதலியார், மாநிலக் கல்லூரித் தமிழாசிரியர் கிருஷ்ணமாச்சாரி, கிருத்துவக் கல்லூரித் தமிழாசிரியர் பரிதிமாற்கலைஞர், பூவை கல்யாணசுந்தர முதலியார், திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை, தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதையர், தமிழ்ச்சுவடி பதிப்புத் துறையின் முன்னோடிகளில் ஒருவரான சி.வை.தாமோதரம் பிள்ளை, மனோன்மணீயம் நாடக ஆசிரியர் சுந்தரம் பிள்ளை

**இலக்கியம் என்பது நாகரீகத்தைப் புகட்ட வேண்டும். மக்களிடம் உயரிய குணங்களைப் புகுத்துவதாக இருக்க வேண்டும்.**
**– தந்தை பெரியார்**

முதலியோர் சாற்றுக் கவிகள் வழங்கியுள்ளனர்.

பம்மல் சம்பந்தனார் எழுதிய இராமலிங்க சுவாமி கள், விசுவாமித்திரர் எனும் இரு நாடகங்கள் இன்னும் கிடைக்கவில்லை என்று நாடக ஆய்வாளர் முனைவர் ஏ.என்.பெருமாள் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றை இதிகாச, புராண நாடகங்கள் என்றும் வரலாற்று நாடகங்கள் என்றும் சமூக நாடகங்கள் என்றும் மொழிபெயர்ப்பு நாடகங்கள் என்றும் பிரிக்கலாம். இந்நாடகங்கள் சுகுண விலாச சபாவில் அரங்கேறின.

சுகுண விலாச சபா நடத்திய அனைத்து நாடகங்களிலும் பம்மல் சம்பந்த முதலியார் நடித்துள்ளார். மனோகரா நாடகத்தில் மனோகரனாகவும், பின்னர் புருடோத்தமனாகவும் நடித்துள்ளார். 'சபாபதி' நாடகத்தில் சபாபதி முதலியாராகவும் அவருடைய பணியாளராகவும் நடித்துள்ளார்.

மேலும் 'சிறுத்தொண்டர்' நாடகத்தில் சித்திரபுத்திரனாகவும் 'காலவ ரிஷி' என்ற நாடகத்தில் நாரதராகவும் சிறிய வேடங்களில் நடித்துள்ளார். மேலும் பெண் வேடம் புனைந்தும் நடித்துள்ளார்.

நாடகத்தில் பெரிய பாத்திரங்களில் மட்டுமன்றி இங்ஙனம் சிறிய பாத்திரங்களில் நடித்ததால் அவர் மேலும் புகழ் பெற்றார். நாடகத்தில் தலைவனாக நடித்தவர்கள் மற்றச் சிறிய பாத்திரங்கள் ஏற்று நடிக்க முன்வர மாட்டார்கள் என்ற கருத்தை முறியடித்தார்.

'இரண்டு நண்பர்கள்' எனும் நாடகத்தில் சுந்தராதித்யனுக்கு இறுதியில் பைத்தியம் பிடித்துவிடுகிறது. அப்பாத்திரத்தை ஏற்று நடிக்க பம்மல் சம்பந்தனார், மன நோயாளிகளின் செயல்களை இரு திங்கள் மருத்துவமனையில் இருந்து நுணுகி அறிந்த பின்பு அவ்வேடத்தில் நடித்தார்.

சேக்சுபியரின் 'ஹேம்லட்' நாடகத்தில் நடிப்பதற்கு முன்னர் அந்நாடகத்தில் ஆங்கிலத்தில் நடித்த எட்மண்ட் கீன், எட்வின் பூத், கெம்பிள் ஆகியோர் நடிப்பைக் கூர்ந்து ஆராய்ந்து அதன் பின்னரே அப்பாத்திரத்தில் நடித்தார்.

மொழி பெயர்ப்பு நாடகங்களான சாகுந்தலை, மாளவிகாக்னிமித்ரம், விக்ரமோர்வசி, ரத்னாவளி முதலிய வடமொழி நாடகங்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். சேக்சுபியர் ஆங்கிலத்தில் எழுதிய 'Hamlet' என்ற நாடகத்தை 'அமலாதித்யன்' என்றும், 'As you like it' என்ற நாடகத்தை 'விரும்பிய விதமே' என்ற பெயரிலும் 'Cymlealine' என்ற நாடகத்தை 'சிம்ஹளநாதன்' என்றும், 'Merchant of Venice' என்ற நாடகத்தை 'வாணீபுரத்து வாணிகன்' என்றும், 'Macbeth' என்ற நாடகத்தை 'மகபதி' என்றும், பிரஞ்சு மொழியிலுள்ள 'The Knavery of Scalphin' என்ற நாடகத்தை 'காளப்பன் கள்ளத்தனம்' என்றும் தமிழில் மொழி பெயர்த்தார்.

சுகுண விலாச சபையின் நிறுவனராகவும், நாடக ஆசிரியராகவும், நடிகராகவும், நாடக இயக்குநராகவும் விளங்கிய பம்மல் சம்பந்த முதலியார், தாம் படைத்த அனைத்து நாடகங்களையும் அச்சிட்டு வெளியிட்டார்.

பம்மல் சம்பந்த முதலியார் பல்துறைப் புலமை மிக்கவர். நாடகங்கள் எழுதியதுடன், 'பேசும்பட அனுபவங்கள்', தமிழ் பேசும் படக்காஷி', 'கதம்பம்', 'தமிழ் அன்னை பிறந்து வளர்ந்த கதை', 'காலக் குறிப்புகள்', 'சிவாலயங்கள்— இந்தியாவிலும் அப்பாலும்', சிவாலய சிற்பங்கள்', 'சிவாலய உற்சவங்கள்', 'சுப்பிரமணிய ஆலயங்கள்', 'தீட்சிதர் கதைகள்', 'ஹாஸ்யக் கதைகள்', 'ஹாஸ்ய வியாசங்கள்' முதலிய நூல்களையும் எழுதியுள்ளார்.

சிறுத்தொண்டர் நாடகத்தில் சிறுத்தொண்டர் மகனான சீராளனாகவும், அரிச்சந்திரன் நாடகத்தில் அரிச்சந்திரன் மகனான லோகிதாசனாகவும் யாரும் நடிக்க அக்காலத்தில் முன்வரவில்லை. எனவே பம்மல் சம்பந்த முதலியார் அவருடைய மகனை அவ்விரு பாத்திரங்களையும் ஏற்று நடிக்கச் செய்தார். நாடகத்துறையில் அவருக்கிருந்த மிகுந்த ஈடுபாட்டை இதன் வழி அறியலாம்.

சம்பந்த முதலியார் நாடகக் கலையை வளர்க்கும் முகத்தான் 'Indian Stage' (இந்திய நாடக மேடை) என்ற ஆங்கில இதழை நடத்தினார். தமிழ் நாடகத் தோற்றத்தை விளக்கும் வகையில் 'நாடகத் தமிழ்' என்ற நூலை எழுதினார். 'நான் கண்ட நாடகக் கலைஞர்கள்', 'என்

சுயசரிதம்', 'நடிப்புக் கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி?' முதலிய நூல்கள் அவருடைய நாடக அனுபவங்களோடு தொடர்புடைய நூற்களாகும்.

பம்மல் சம்பந்த முதலியார் தமக்கு ஏற்பட்ட நாடக அனுபவங்களைத் தொகுத்துப் பிற்காலத் தலைமுறைக்குப் பயன்படும் வகையில் 'நாடக மேடை நினைவுகள்' என்ற நூலை எழுதினார். இந்நூல் ஆறு தொகுதிகளைக் கொண்டது. நாடக மேடை நினைவுகள் முதல் தொகுதி 1932இலும், இரண்டாம் தொகுதி 1933இலும், மூன்றாம் தொகுதி 1935இலும், நான்காம் தொகுதி 1936இலும், ஐந்தாம் தொகுதி அதே ஆண்டிலும், ஆறாம் தொகுதி 1938இலும் வெளிவந்தன.

பம்மல் சம்பந்த முதலியார், நாடகக் கலையை வளர்ப்பதை வாழ்வின் நோக்கமாகக் கொண்டார். தன்னுடைய வாழ்க்கையை நாடகத்திற்காக அர்ப்பணித்தவர். அவருடைய நாடக வாழ்க்கை, மகிழ்ச்சியான அனுபவங்களையும் கசப்பான உண்மைகளையும் கொண்டது.

பம்மல் சம்பந்தனார் இளம் வயதில் தமிழ் நாடகங்களை வெறுத்தார். 'அரிச்சந்திரா' என்ற நாடகத்தைப் பார்க்க அவருடைய நண்பர் அழைத்தபோது அவர் மறுத்தார்.

1891ஆம் ஆண்டு பெல்லாரியில் இருந்து கிருஷ்ணமாச்சார்லு என்ற புகழ் பெற்ற தெலுங்கு நடிகர் 'சரச விநோதினி சபா' என்ற நாடகக் குழுவுடன் சென்னைக்கு வந்து தெலுங்கு நாடகங்களை மேடையேற்றினார். அந்நாடகங்களைக் கண்ணுற்ற பம்மல் சம்பந்தனார் தமிழிலும் அவை போன்ற நாடகங்களை நடத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டார். கிருஷ்ணமாச்சார்லு நடத்திய நாடகங்களில் ஒன்று 'ஸ்திரீ சாகசம்' என்பதாகும். இந்நாடகத்தைப் பம்மல் சம்பந்தனார் 'புஷ்பவல்லி' என்ற பெயரில் மொழிபெயர்த்தார். 'சரச விநோதினி சபா' என்ற அந்நாடகக் குழுவில் கற்றவர்களும், உயர் பதவியில் உள்ளவர்களும், அரசு அலுவலர்களும் பங்கேற்றிருந்தனர். அதேபோன்று நாடகக் குழுவைச் சென்னையில் அமைக்க வேண்டும் என்று பம்மல் சம்பந்தனார் விரும்பினார். அதன் விளைவாக 1—7—1891ஆம் ஆண்டு 'சுகுண விலாச சபை' என்ற நாடகக் குழுவை உருவாக்கினார். அக்குழுவில் பம்மல் சம்பந்தனாரும் ஊ.முத்துக்குமாரசாமி செட்டியார், வி.வெங்கடகிருஷ்ண நாயுடு, அ.வெங்கடகிருஷ்ணபிள்ளை, த.செயராம் நாயகர், ஜி.இ.சம்பந்து செட்டியார், சுப்பிரமணிய பிள்ளை ஆகிய எழுவர் இடம் பெற்றிருந்தனர். பம்மல் சம்பந்தனார் 'புஷ்பவல்லி' என்ற நாடகத்தைத் தொடக்கத்தில் எழுதி இருந்தாலும் சுகுண விலாச சபையின் சார்பாக முதலில் அரங்கேறிய நாடகம் 'சுந்தரி' ஆகும்.

பம்மல் சம்பந்தனார் சுகுண விலாச சபையை நிறுவியதுடன் அந்நாடகக் குழுவுக்கு நிதி ஆதாரம் கேட்டு, சென்னையில் புகழ்பெற்ற செல்வந்தர்களை நாடிச் சென்றார். அவர்களுள் ஒருவர் திவான்பகதூர் பாக்கம் இராசரத்தின முதலியார் ஆவார். பம்மல் சம்பந்தனாரும் அவருடைய நாடகக் குழுவைச் சார்ந்தவர்களும் இராசரத்தினம் அவர்களைச் சந்தித்து, தங்களுடைய நாடகக் குழு வளர நிதிஉதவி வழங்கும்படி கேட்டு கொண்டனர். திரு.இராசரத்தினம் "இதுபோன்ற நாடகக் குழுவால் நாட்டிற்கு என்ன பயன்?" என்று கேட்டார். பம்மல் சம்பந்தனார், அதற்குப் பதில் 'சேக்சுபியர் மகா கவியைக் கேளுங்கள்' என்று கூறினார். அதன்பின் இராசரத்தினம் 'சேக்சுபியர் இங்கிலாந்தைச் சார்ந்தவர். அப்படிப்பட்ட நாடக ஆசிரியர் நம் நாட்டில் யார் இருக்கிறார்கள்?' என்று கேட்டார். பம்மல் சம்பந்தனார் 'இன்று இல்லாவிட்டாலும் இனிமேல் அவர் போன்ற நாடக ஆசிரியர்கள் நம் நாட்டில் பிறப்பார்கள்' என்று உறுதியாகப் பதில் அளித்தார்.

'சுகுண விலாச சபா' என்ற நாடக அமைப்பைச் சென்னையில் உருவாக்கிய பின்னர், இந்நாடகக் குழுவைப் பின்பற்றித் தமிழகத்தில் புதிய நாடகக் குழுக்கள் தோன்றின. அவற்றுள் ஒன்று 'ஓரியண்டல் டிராமேட்டிக் சொசைட்டி'

**எழுத்தாளனின் எழுதுகோலில் உள்ள ஒரு துளி மைக்கு, ஒரு கோடி மக்களைச் சிந்திக்க வைக்கக் கூடிய ஆற்றல் உண்டு.**

**— கவிஞர் பைரவன்**

**திறமை மட்டும் ஓர் எழுத்தாளனைப் படைத்து விடாது; எழுத்துக்குப் பின் மனித இதயம் இருக்க வேண்டும்.**

**— வால்டோ எமெர்சன்**

> **சோம்பேறிக்கு எல்லாம் கடினமாகத் தோன்றும். ஊக்கமுள்ளவனுக்கு எல்லாம் எளிதாய்த் தோன்றும்.**
>
> – ரிச்சர்ட்

என்பதாகும். இந்நாடகக் குழு சுகுண விலாச சபா தோன்றுவதற்கு முன்னரே உருவாகி, பின்னர் செயலற்று விட்டது. சுகுண விலாச சபாவுக்குப் பின் மீண்டும் செயல்படத் தொடங்கியது.

அன்றைய தமிழ் நாடகங்களில் உண்மைக்கு மாறாகப் பொருந்தாத நிலையில் உரையாடல்களும், நிகழ்வுகளும் அமைந்திருந்தன. எடுத்துக்காட்டாக அரசன் அவைக்கு வந்தவுடன் அமைச்சரைப் பார்த்து, "மாதம் மும்மாரி மழை பொழிகிறதா? பிராமணர்கள் யாகம் செய்கிறார்களா? சத்திரியர்கள் சரியாகச் சண்டை போடுகிறார்களா? சூத்திரர்கள் வேலை செய்கிறார்களா? என்று கேட்க, அமைச்சர் அரசனின் ஒவ்வொரு கேள்விக்கும் ஆமாம் என்று பதில் கூறுவார்.

இந்நாடக உரையாடலைக் கேட்ட பம்மல் சம்பந்தனார், இந்த அரசன் ஊரில் மழை பெய்வதைக்கூட அறியாமல் அந்தப்புரத்தில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தானா? என்று கூறி நகைத்தார்.

பம்மல் சம்பந்தனார் நாடகக் கதையை எழுதும் முறை ஒரு புதுமையானதாகும். பம்மல் சம்பந்தனார் நாடகக் கதையை மனத்தில் அமைத்துகொண்ட பின்னர், நோட்டுத்தாளில் பென்சிலால் 'ஏ' என்ற அரசனுக்கு 'பி' என்று ஒரு மகன் இருந்தான். 'சி' என்ற அரசனுக்கு, 'டி', 'இ' என்று இரு புதல்வியர் இருந்தனர். 'ஏ' என்ற அரசன் தன் மகனுக்குத் திருமணம் முடிக்க அமைச்சருடன் ஆலோசனை செய்து முடித்தபின் 'எஃப்' என்ற தூதுவனை 'சி' எனும் அரசனிடம் அனுப்பினான்.

இவ்வாறு கதை அமைப்பை எழுதிக்கொண்ட பின், புதிதாக ஏதாவது தோன்றினால் கதைப்போக்கை மாற்றி எழுதி விடுவதும் உண்டு. நாடகத்திற்கு ஏற்றவாறு காட்சிகளைப் பிரித்த பின்னர் ஏ, பி, சி, டி, இ, எஃப் முதலிய நாடகப் பாத்திரங்களுக்கு அவரவர் பண்புகளுக்கு ஏற்றவாறு பெயர்களைச் சூட்டுவார்.

பம்மல் சம்பந்தனார் 1891இல் பதினெட்டு வயதில் நாடக மேடை ஏறி நடிக்கத் தொடங்கினார். அத்துடன் நாடகங்களை எழுதவும் தொடங்கினார். அவருடைய பணி அவர் இறக்கும் வரை நீடித்தது. நீண்ட காலம் நாடகத் துறையில் இருந்ததால் அவருடைய நாடக அனுபவங்கள் நமக்கு வழிகாட்டத்தக்கன.

பம்மல் சம்பந்தனார் பல்வேறு நாடகங்களை நடத்தியதுடன் மற்ற நாடகக் குழுக்களின் நாடகங்களைப் பார்த்து அவற்றில் வரும் புதிய உத்திகளைத் தன்னுடைய நாடகங்களிலும் கையாண்டார்.

'மதராஸ் டிராமடிக் சொசைட்டி' என்னும் பெயரில் அமைந்த நாடகக் குழு நடத்திய நாடகங்களில் காட்சிகளுக்கு ஏற்பவும் இடங்களுக்கு ஏற்பவும் திரைகளைப் (Scenic arrangements) பயன்படுத்தியதைக் கண்ணுற்ற பம்மல் சம்பந்தனார், தன்னுடைய நாடகங்களிலும் அந்த முறையைப் பின்பற்றினார்.

மேலும் பாரசீக நாடகக் குழுவினர் நடத்திய நாடகங்களின் திரைகள், பக்கத் திரைகள் (Side wings), மேல் தொங்கட்டான்கள் (Flies) முதலியவை புதிய முறையில் அமைந்திருந்தன. அவற்றைக் கண்ணுற்ற பம்மல் சம்பந்தனார், அவர்கள் பயன்படுத்தியதைப் போன்ற திரைகளைத் தன்னுடைய நாடகங்களிலும் பயன்படுத்தினார்.

பாரசீக நாடகக் குழுவினர் தமிழ் நாடக மேடை அமைப்பில் ஒரு திருப்பத்தை விளைவித்தனர். இதற்கு முன்னர்த் தமிழ் நாடகங்களில், ஒரு காட்சிக்கும் இன்னொரு காட்சிக்கும் இடையே இடைவெளி விடப்பட்டது. இக்குறை பாரசீக நாடகக் குழுவினர் வருகையால் தமிழ் நாடக மேடையில் களையப்பட்டது.

பாரசீக நாடகக் குழுவினர் பாத்திரங்களுக்கு ஏற்ப உடைகள் அணிந்திருந்தனர். அந்நாட்களில் தமிழ் மேடை நாடகங்களில் வறியவர்களாக நடிப்பவர்கள் செல்வந்தர்கள் போல் உடையணிந்திருந்தனர். அத்தகைய பொருந்தாப் போக்கையும் அந்நாடகக் குழு நீக்கிற்று.

நாடக அரங்கில் இடம்பெறும் ஒவ்வொரு காட்சியும் கதை நிகழ்ச்சிக்கு ஏற்ப உடனடியாக மாறுகின்ற காட்சி அமைப்பையும் (Transformation scenes) பாரசீக நாடகக் குழுவினர் தமிழ் நாடக மேடைக்கு அறிமுகப்படுத்தினார்.

அந்நாளில் தமிழ் நாடக மேடையில் பக்க வாத்திய இசைக்கலைஞர்கள் ஓரத்தில் அமர்ந்திருந்தனர். ஆயின் பாரசீக நாடகக் குழுவினர் பக்க வாத்தியக் கலைஞர்களை நாடக மேடைக்கு முன்னர் அமர வைத்தனர். அதன்

விளைவாகப் பக்க வாத்தியக் கலைஞர்கள் தமிழ் நாடக மேடையின் முன்னர் அமர்ந்தனர்.

பம்மல் சம்பந்தனார் 'ருக்மாங்கதா' என்ற நாடகத்தை உரையாடல்களும் பாடல்களும் இன்றித் தோற்றக் காட்சிகளின் மூலம் (Tableau vivantes) அமைத்து முதன்முதலில் தமிழில் நாடகத்தை நடத்தினார். இது மௌனக்காட்சி என்ற நாடக வகையைச் சார்ந்தது.

பம்மல் சம்பந்தனார் பல்வேறு ஊர்களில் நாடகங்கள் நடத்தியபோது அவருக்கு ஏற்பட்ட இடையூறுகளால் மனம் நொந்தார். ஆயினும் தமிழ்ச் சான்றோர் பழமொழிகளை நினைவுகூர்ந்து மனவலிமை பெற்றார்.

நாடக மேடையில் அவர் செய்த மாற்றங்களைக் கண்டு முதலில் முகம் சுளித்தவர்கள், பின்னர் அம்மாற்றங்களை முழுமனத்துடன் வரவேற்றனர்.

நாடக நடிகர்கள் மது அருந்தக்கூடாது என்றும், தன்னைக் காட்டிலும் நடிப்பில் சிறந்தவர்கள் இல்லை என்ற ஆணவம் கொள்ளக் கூடாது என்றும், தன்னோடு நடிப்பவர்களுடன் ஒத்த மனப்பான்மையோடு பழக வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார். நாடக நடிகர்கள் தீய பழக்கங்களை விட்டுவிட்டு நல்ல பழக்கங்களை மேற்கொண்டால்தான் அவர்கள் வாழ்வு செம்மை பெறும் என்றும், சமூகத்தில் அவர்கள் உயர்வாகக் கருதப்பெறுவார்கள் என்றும் நெறிப்படுத்தியுள்ளார்.

'சுகுண விலாச சபை'யில் சேர வரும் நடிகர்கள் முதலில் சிறிய பாத்திரங்களையே ஏற்று நடிப்பர். பின்னர் அவர்கள் பெரிய பாத்திரங்களை ஏற்று நடிப்பர்.

நாடகக் கலைஞர், நியாயமான கருத்தைக்கூட பிறர் மனம் கொள்ளக் கனிவாகக் கூறவேண்டும். அதற்கு மாறாக முரட்டுத்தனமாகக் கூறினால் அந்த நியாயமான கருத்துக்கூட வெற்றி பெறாமல் போய்விடும் என்று பம்மல் சம்பந்தனார் கூறியுள்ள அறிவுரை எல்லோரும் பின்பற்றத்தக்கதாகும்.

'நாடகக் கலைஞர்கள் வருவாய்க்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்' என்ற கருத்துடையவர் பம்மல் சம்பந்தனார். 'ஒருவருக்கு நூறு ரூபாய் வருமானம் என்றால் 99 ரூபாய் 15 அணா செலவு செய்துவிட்டு மீதியைச் சேமிப்பாக வைத்துக்கொள்ள வேண்டும்'. அதை விடுத்து நூறு ரூபாய் முழுவதையும் செலவு செய்யக்கூடாது. அவ்வாறு செலவு செய்கின்றவர்கள் வாழ்வில் துன்பப்படுவர் என்று குறிப்பிட்டுள்ளார். இது நாடகக் கலைஞர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லோருக்கும் கூறப்படுகின்ற அறிவுரை என்றே கருதலாம்.

நாடக அரங்கேற்றம் என்பது பல்துறைக் கலைஞர்களின் கூட்டு முயற்சியால் உருவாவது. எனவே நடிகர்கள் அனைத்துக் கலைஞர்களையும் மதித்துப் பழகத் தெரிய வேண்டும் என்றும் அறிவுறுத்துகின்றனர்.

***"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்***
***உயிரினும் ஓம்பப் படும்"***

என்ற வள்ளுவர் குறளுக்கு ஏற்ப நடிகர்கள் ஒழுக்கத்துடனும் கட்டுப்பாட்டுடனும் வாழவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மனிதருக்குள் ஏற்றத்தாழ்வை உருவாக்கிய சாதி அமைப்பு முறையை எதிர்த்தும் மக்கள் எல்லோரும் 'ஒரே குலம்' என்ற கருத்தை வலியுறுத்தியும், சாதிச் சண்டைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் பம்மல் சம்பந்தனார் 'பிராமணனும் சூத்திரனும்' என்ற நாடகத்தை அந்நாளிலேயே எழுதியுள்ளார் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

வெள்ளைச் சுவரில் கருப்புப் புள்ளி இருந்தால் பார்ப்பவர்களின் கண்களுக்கு உடனடியாகப் புலப்படுவதுபோல, நாடக அரங்கேற்றத்தின்போது சிறு தவறுகூடப் பார்வையாளர்களுக்குப் பெரிதாகத் தெரியும். எனவே நாடக அரங்கேற்றத்தில் சிறு தவறுகூட நிகழாமல் விழிப்புடன் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

*நன்றி :*
நாடக மேடை நினைவுகள்
*வெளியீடு :*
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

★

**மலை கண்டு, மாநதி கண்டு அல்ல, ஒரு நாட்டைப் பிற நாட்டார் மதிப்பது! அந்நாட்டு மக்களின் மனவளத்தைக் கண்டுதான்! அத்தகைய மனவளம் வளர வீட்டிற்கோர் நூலகம் வேண்டும்.**

**– அறிஞர் அண்ணா**

# வருவாய்த்துறையின் மூலம் செயல்படுத்தப்படும்

# நலிவுற்றோர் நலத்திட்டங்கள்

| திட்டத்தின் பெயர் | விவரம் | வரையறைகள் | அணுகவேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| **நலிந்தோர் குடும்ப நலத்திட்டம்** | பொருளீட்டின் குடும்பத்தைக் காப்பாற்றக் கூடிய குடும்பத் தலைவர் மரணமடைந்தால் அவரை இழந்து நலிவுற்று வாடும் குடும்பத்தின் துயரினைத் துடைக்கும் பொருட்டு அக்குடும்பத்திற்கு ரூ.10,000 நிவாரணமாக வழங்கப்படுகிறது. | அனைத்து ஆதாரங்கள் மூலமாகப் பெறும் ஆண்டு வருமானம் ரூ.7,200–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். | தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத் திட்டம்) |
| **விபத்து நிவாரணத் திட்டம்** | 44 வகையான ஏழைத் தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போதோ அல்லது இதர நேரங்களிலோ விபத்தினால் இறந்தால்/ஊனமடைந்தால் நிவாரணம் வழங்கப்படுகிறது.<br>★ விபத்தில் இறந்தால் ரூ.15,000.<br>★ ஊனமடைந்தால், ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.5,000 முதல் ரூ.10,000 வரை. | ஆண்டு வருமான வரம்பு மற்றும் வயது வரம்பு ஏதுமில்லை.<br>சிறப்புச் சான்றிதழ், பிரேதப் பரிசோதனைச் சான்றிதழ் மற்றும் காவல் துறையின் முதல் தகவல் அறிக்கையின் நகல் தாக்கல் செய்யப்படவேண்டும். | தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத் திட்டம்) |



| திட்டத்தின் பெயர் | விவரம் | வரையறைகள் | அணுகவேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| தீ விபத்து/ வெள்ள நிவாரணத் திட்டம் | ★ முழுவதும் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்குத் தலா ரூ.1,000.<br>★ பகுதியாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்குத் தலா ரூ.500.<br>★ இறந்தவர் குடும்பத்திற்கு ரூ.15,000.<br>**கால்நடைகள்**<br>★ இறந்த பசு, காளை மற்றும் எருமை ஒன்றுக்கு ரூ.5,000.<br>★ இறந்த பசு மற்றும் எருமை ஆகியவற்றின் கன்று ஒன்றுக்கு ரூ.3,000.<br>★ இறந்த செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு ஒன்றுக்கு ரூ.1,000. | –<br>இறந்த கால்நடைகளில் ஒரு குடும்பத்திற்கு இரண்டு கால்நடைகளுக்கு மட்டும் நிவாரணம் வழங்கப்படுகிறது. | வட்டாட்சியர் |
| நிலமற்ற ஏழைகளுக்கு விவசாய நிலம் ஒப்படை செய்தல் | 1½ ஏக்கர் நஞ்சை நிலம் அல்லது 3 ஏக்கர் புஞ்சை நிலம் ஒப்படை வழங்கப்படுகிறது. | ★ அந்த கிராமத்தில் வசிப்பவர்<br>★ ஆண்டு வருமானம் ரூ.12,000–க்கு மிகக் கூடாது.<br>★ தாமாகவோ அல்லது குடும்பத்தின் மூலமாகவோ விவசாயம் செய்ய வேண்டும். | வட்டாட்சியர் |
| வீடற்றவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கல் | சென்னை 1 சென்ட், நகராட்சிகள் 1½ சென்ட், ஏனைய இடங்களில் 3 சென்ட். | ஆண்டு வருமானம் ரூ.12,000–க்குக் குறைவாக இருந்தால் இலவச வீட்டுமனை ஒப்படை; இதரர்க்கு கிரயம் வசூலித்து வீட்டுமனை ஒப்படை. | வட்டாட்சியர் |

# சங்கத் தமிழர்கள் வாழ்வில் ஆடைகள்

- மறுமலர்ச்சி கவிஞர் தமிழோவியன்

சங்க இலக்கிய புலவர்கள் அக்காலத்தில் வாழ்ந்த ஆடவர்கள் தோற்றத்தையும், மங்கையர்களின் பொலிவினையும் நம் கண் முன்னே அழகிய ஓவியங்களாக நிற்குமாறு பல கவிதைகள் படைத்துள்ளனர்.

அவ்வாறு அவர்களை நம் கண்முன் நிறுத்தும் போது அவர்கள் உடுத்திருந்த ஆடையைப் பற்றியும் அணிந்திருந்த அணிகலன்கள் பற்றியும் அழகாக எடுத்துக்காட்டியுள்ளார். பழந்தமிழர்கள் உடுத்தியிருந்த உடைகளில் பலவித வேறுபாடுகள் இருந்தன. அந்த வேறுபாடுகள் புலவர்கள் குறிக்கும் பல சொற்களால் அறியலாம். துவரி, அறுவை, வேட்டி, மடி, கலிங்கம், சிதார், சீரை, காழகம், கச்சு என்று அவர்கள் உடுத்தியிருந்த ஆடைகளைப் பிரித்துக் காட்டினர்.

ஒரு பெண் உடுத்தியிருந்த ஆடையை ஒரு புலவர் வருணிக்கின்ற அழகைப் பாருங்கள். அவள் ஆடையைத் தன் உடலைச் சுற்றிக் கட்டிக்கொண்டிருந்தாள். இடுப்பைச் சுற்றிக்கட்டி முதுகிலும் பக்கத்திலும் தொங்கவிட்டிருந்த அந்தக் காட்சியை

*புடைவீழ் அந்துகில் இடைவயின்*
*தழீஇ*

- என்ற வரிகளில் அக்காட்சியைப் படைக்கின்றார். பெண்கள் தங்கள் இடுப்புக்கும் உடம்புக்கும் ஆகக் கட்டும் மேலாடையின் தோற்றம் இது.

புலவர்கள் அவர்கள் கட்டும் உள்ளாடையையும் குறிப்பிடத் தவறவில்லை. பெண்கள் தங்கள் மார்பின் மேல் கட்டும் கச்சு பற்றிக் குறிப்பிடுகின்றனர்.

கச்சுகளில் பலவித பூக்கள், கோலங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவைகள் பலவித வண்ணங்களால் செய்யப்பட்டிருந்தது என்பதனை முல்லைப்பாட்டால் அறிகிறோம்.

நீலக் கச்சைப் பூவாராடை - புறம் என்ற புறநானூற்று வரிகளாலும் இதனை உணர்கிறோம்.

மாதர் படாஅ முலைமேல் துகில் - திருக்குறள் என்று இந்தக் கச்சு மென்மையான நூலால் இழைக்கப்பட்ட தோற்றத்தைக் காட்டுகிறார் வள்ளுவர்.

நம்நாடு வெப்ப நாடாகலின் ஆடவரும், பெண்டிரும் மெல்லிய ஆடையையே விரும்பி உடுத்தினர்.

சங்க காலத் தமிழரும் - ஆடவரும் பெண்டிரும் மெல்லிய ஆடைகளை உடுத்துதலைப் பல பாக்களின் வழியாக உணர்கிறோம்.

***'நூலாக் கலிங்கம்'***
***'அரவுரியன்ன அறுவை'***
***'அவியன்ன அவிர்நூற் கலிங்கம்'***
***'பல்கலைச் சில்பூங் கலிங்கம்'***
***'நேர் கரை நுண்ணூர் கலிங்கம்'***
***'இழை மருங்கறியா நுழை நூற் கலிங்கம்'***
***'காம்பு சொலித்த தன்ன அறுவை'***

இப்படிப்பட்ட பூந் துகிலாடை உடுப்பது மட்டும் அல்லாமல் பட்டு நூலால் நெய்த ஆடைகளையும் உடுத்தினர். பூத் தொழில்கள் பலவாறு நிறைக்கப்பட்ட பட்டுடை புடைதாழ உடுப்பதில் பெண்களுக்கு ஆர்வம் மிகுதி.

***'பூங்கரை நீலம் படை தாழ'***

- என்ற முல்லைப்பாட்டு வரிகளால் இதனை உணரலாம்.

இதுமட்டும் அன்றி எலிமயிர் போன்றவற்றால் செய்த ஆடையைத் தமிழர் உடுத்தினர் என்று சிலப்பதிகாரம் மூலம் அறிகிறோம்.

ஆடவர்கள் தங்கள் அரையில் பூநிறம் பொருந்திய பல நிறை ஆடைகளை உடுத்தினர். அவ்வாடைகளுக்கு லுங்கி என்ற பெயர் இக்காலத்தில் வழங்குகிறது.

மடி, வேட்டி என்ற பெயர்கள் வெண்ணிறமான ஆடைகளுக்கு வழங்கப்படுகின்றன.

ஆண்கள் தோற்பட்டையில் துண்டு ஆடைகளும், தலையில் பாகையும் உடுத்தினர். பட்டாடை, துகில், கலிங்கம் என்ற பெயர்கள் சிறப்பான செல்வர்கள் உடுத்தும் ஆடைகளைக் குறிப்பிட்டன. ஏழைகள் உடுத்த ஆடைகளோ சிதாகர் என்று குறிப்பிடப்பட்டன. அவைகள் கந்தல் ஆடைகள். அழுக்குப் படிந்தவை. இந்த அழுக்குப் படிந்த ஆடைகளை ஏழை மக்கள் உடுத்திக்கொண்டு பரிதவித்த காட்சிகளை ஒரு புலவர் விவரிக்கின்றார்.

***'வேற்றிழை நுழைந்த வேர்களை சிதாஅர்'***
***'ஊருண் கேணிப் பாட்டிலைப் பாசி***
***வேர்புரை சிதா அர்'***

- என்ற வரிகள் ஏழ்மையின் தாழ்வையும், உடையின் அழுக்கையும், இழுக்கையும் எடுத்து இயம்புகின்றன.

இல்லற வாழ்க்கையிலிருந்து துறந்தவர்கள் மரஉறி உடுத்தினர்.

**"நமக்கு இன்னலும், இடையூறும் இருக்கத்தான் செய்யும்; ஆனால் நமது உழைப்பு ஒரு நாளும் வீணாகாது!" – பேரறிஞர் அண்ணா**

***'சிதை தைஇய உடுக்கையர்' – முருகு***

- என்ற வரிகளால் அறியலாம்.

போர்க்குச் செல்லும் வீரர்கள் தங்கள் மார்பின் மேல் பகைவர்கள் எறியும் வேலும், அம்பும் தம்மைத் தாக்காதவாறு 'மெய்புகு கருவி' என்னும் புலித் தோலால் செய்யப்பட்ட அழகிய பரந்த கவசத்தை உடுத்தினர் என்பது 'புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய' என்பதனால் தெளியப்படும்.

தமிழ் மக்கள் பொழுதுக்கு ஏற்ற ஆடைகளை உடுப்பதிலும் கைதேர்ந்தவர்களாய் இருந்தனர்.

***மட்டு நீக்கி மது மகிழ்ந்தும்***
***பட்டு நீக்கி துகில் உடுத்தும்***

கள்ளுண்ணும் போதும், களியாட்டு அயரும்போதும் கொட்டைக் கரைய பட்டாடையும், காதல் விளையாட்டு உயரும்போது மனதிற்கு இன்பம் விளைவிக்கும் பாலாவி அன்ன மேலாடையும் உடுத்தினர் ஆடவரும், பெண்டிரும்.

குறிஞ்சி நிலப் பெண்கள் தழையால் ஆன ஆடையை உடுத்தினர். இது ஆம்பல் முதலிய மலர்களாலும் தளிர்களாலும் செய்யப்பட்டது. தழையாடை கத்திரிக்கப்பட்டு மட்டமாகச் செய்து தம் இடுப்பில் உடுத்திக் கொண்டனர்.

இதனைக் காதலன் காதலிக்காகக் கொடுக்கப்படும் அன்பின் அடையாளமாகக் கொடுக்கப்பட்ட ஆடையாகவே நினைத்தனர். இக்காலத்தில் அன்பின் அடையாளமாகப் பிறந்த நாளில் கொடுக்கப்படும் பூச்செண்டு. பொக்கை என்று கொள்ளலாம்.

இந்தத் தழை ஆடையைப் பெண்கள் நெஞ்சு நெகிழ உடுத்தினர் என்று இலக்கியத்தில் பல இடங்களில் காண்கிறோம்.

***'குவளைக் கூம்பவிழ் முழுநெறி புரள்வரும்'***
***'சிறு வெள்ளாம்பல் இளையமாகத் தழையாயினவே'***
***'பைவிரி அல்லல் கொய்தழை தை இ'***

இவ்வாறு தமிழர்கள் ஆடைகள் உடுத்துதலிலே எத்தனை முன்னேற்றம் அடைந்திருந்தனர் என்று சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். ★

# என்னை கவர்ந்த பாரதி

பெருங்கவிஞர் நெ.அ. பூபதி

'பாட்டுக்கொரு புலவன்
பாரதி' என
எல்லோராலும்
பாராட்டப்பெறும்
பாரதி பத்தொன்பதாம்
நூற்றாண்டிலே
தோன்றி இருபதாம்
நூற்றாண்டிலே
மறைந்த மகாகவி!

பாரதி நூற்றாண்டையொட்டி 'பாவலர் பார்வையில் பாரதி' எனும் கவிதைத் தொகுப்பொன்று வெளியிட்டேன்.

*அந்த நூலில்,*
*நான்!*
*கவிஞன் என்ற முறையில் ஒரு*
*கவிஞனுக்குச் செய்கின்ற மரியாதை இது!*

*பாரதி!*
*பாரதத்தைப் 'பா'ரதத்தால் வலம்வந்த*
*சாரதி!*

*அவன்!*
*வாழ்ந்த காலத்தில் அவனோடு வறுமையும்*
*வாழ்ந்ததாக நம்பப்படுகிறது!*

*அப்போதும் – அவன்*
*தன்னைப் பற்றி நினைத்ததாகத் தெரியவில்லை.*
*தான் வாழும் மண்ணைப் பற்றியும் மக்களைப்*
*பற்றியுமே நினைத்தான்!*

*சங்கத்தமிழ் அவனிடம் விளையாடியது –*
*அவனோ*
*சிங்கத்தோடு விளையாடினான்–அவன் கவிச்*
*சிங்கம் அல்லவா?*

*மதம் அவனைப் பிடிக்கவில்லை – ஆனால்*
*மதம் பிடித்த யானை அவனைப்*
*பதம் பார்த்துவிட்டது!*

*அவன்*
*மறைந்தபோது!*
*அந்தச் சவத்தின் பின்னாலே*
*சென்றவர்கள் குறைந்த எண்ணிக்கை எனச்*
*சொல்லப்படுகிறது!*

*இன்று!*
*அவனில்லை–ஆனாலும் இந்த*
*அவனியில் வாழ்ந்து கொண்டிருக்கிறான்!*

*இங்கே*
*'பாவலர் பார்வையில் பாரதி'*
*பாவடிவில் காட்சி தருகிறான்!*

அதனை
*அவனை*
*படித்து*
*பார்த்து மகிழுங்களேன்!*

*இது*
*புதுக்கவிதை அன்று!*
*அது*
*இது மாதிரி!*

என முன்னுரையை வார்த்தைகளை மடக்கிப் போட்டு எழுதியிருந்தேன்.

அதோடு,

13.12.81–இல் புதுவையில் நடைபெற்ற பாரதி நூற்றாண்டு தொடக்க விழா கவிதாஞ்சலியில் பாடிய கவிதையும் வெளியிட்டிருந்தேன்.

அந்தக் கவிதை இதுதான்:

*"பாரதிநீ எத்தனைநாள்*
*பட்டினியாய்க் கிடந்தாயோ!*
*ஆனால் இன்று?*

*பாரதமே வியப்படைய*
*பாரெங்கும் விழாக்கோலம்!*
*பசித்தி ருந்தும்*

*பாரதிரும் எரிமலையாய்ப்*
*பாடல்கள் வெடித்தபோது*
*பழித்த வர்கள்*

*பாரதிஉன் புகழ்வானில்*
*பவனிவரும் பரிதாபம்*
*பார்க்க வாராய்!*

எந்த ஒரு கவிஞன் வாழ்கின்றபோது செத்துக் கொண்டிருக்கிறானோ அவன்தான் உண்மையான கவிஞன் எனக் கவியரசர் பொன்னிவளவன் சொல்வார்.

அப்படித்தான் அவரும் வாழ்ந்து மறைந்தார்.

ஒரு கவிஞன் வாழுகின்றபோது அவனது வறுமையைப் போக்காத சமுதாயம் — அரசு அவன் மறைந்த பின்னர் அவனுக்கு விழா எடுப்பதும் சிலை அமைப்பதும் மணிமண்டபம் கட்டுவதும் அவனுக்குச் செய்யப்படுகின்ற மரியாதை எனச் சொல்லலாம்.

அதனால் அவனுக்கோ அவன் குடும்பத்திற்கோ என்ன பலன்?

எந்தப் பலனையும் எதிர்பாராமல் நாட்டிற்காகவும் — சமுதாயத்திற்காகவும் பாடுகிறவன் — பாடுபடுகிறவன்தான் கவிஞன். அப்படிப்பட்ட கவிஞன் சாவதில்லை — என்றென்றும் வாழ்ந்து கொண்டிருப்பான்.

*பாரதி!*

***நாட்டு விடுதலைக்காக மட்டுமன்றி***
***பெண் விடுதலைக்காகவும் போராடிய பாட்டாளி!***
***ஆம்!***
***முதலை ஆளுகிறவன் முதலாளி.***
***தொழிலை ஆளுகிறவன் தொழிலாளி.***
***எழுத்தை ஆளுகிறவன் எழுத்தாளி.***
***பாட்டை ஆளுகிறவன் பாட்டாளிதானே!***

அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டுக்கிடந்த இந்திய விடுதலைக்காக எத்தனையோ தலைவர்கள் பாடுபட்டிருக்கிறார்கள்; போராடியிருக்கிறார்கள்.

அந்த வரிசையிலே பாரதியும் ஒருவனாகத் திகழ்ந்தான்.

பாட்டாலே மக்கள் உள்ளத்திலே விடுதலை உணர்வை — எழுச்சியை உருவாக்கினான்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அவனுடைய பாடல்கள் எழுச்சி பெறுவதற்கு எருவாக அமைந்தன என்று சொன்னால் அது மிகையாகாது.

***“தாயின் மணிக்கொடி பாரீர்—அதைத்***
***தாழ்ந்து பணிந்திட வாரீர்!”***

— என்ற கொடி வணக்கப் பாடலும்

***“என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?***
***என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?”***

— என்ற சுதந்திர வேட்கைப் பாடலும்

***“வந்தே மாதரம் என்போம் – எங்கள்***
***மாநிலத் தாயை வணங்குது என்போம்”***

— என்ற பாடலும்

***“அச்சமில்லை அச்சமில்லை***
***அச்சமென்ப தில்லையே***
***உச்சிமீது வானிடிந்து***
***வீழ்ந்த போதும் அச்சம் என்பதில்லையே!”***

— என்ற எழுச்சிப் பாடலும்

அன்று தெருவெங்கும் முழக்கமிடச் செய்து மக்களை எழுச்சிபெறச் செய்தானே பாரதி அதற்காகவா என்னைக் கவர்ந்தான்! அல்ல... அல்ல.

***“செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்***
***தேன்வந்து பாயுது காதினிலே!”***

— என்று தான் பிறந்த தமிழ் நாட்டின் சிறப்பைப் பற்றியும்

***“யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்***
***இனிதாவது எங்கும் காணோம்”***

— என்று தமிழ் மொழியின் மேன்மைப் பற்றியும் பாடியதற்காகவா பாரதி என்னைக் கவர்ந்தான்! அல்ல... அல்ல.

*"ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி*
*அலையும் அறிவிலிகாள்!—பல*
*ஆயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்*
*டாமெனல் கேளீரோ!"*

—என்றும்

*"சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்*
*தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"*

— என சமுதாயச் சீர்திருத்தப் பாடல்களைப் பாடினானே பாரதி! அதற்காகவா என்னைக் கவர்ந்தான்! அல்ல... அல்ல.

பின் எதற்காக. பாரதி என்னைக் கவர்ந்தான் என்று கேட்பீர்கள்.

'அடுப்பூதும்' பெண்களுக்குப் படிப்பெதற்கு?' என்று அன்றைக்குப் பெண்களை அடிமைப்படுத்தி வைத்திருந்தார்களே! அந்த அடிமைத் தளையை உடைத்தெறிந்தானே பாரதி!— அந்த பாரதி என்னைக் கவர்ந்ததில் வியப்பேது?

*"பெண்டாட்டி தளையடிமைப் படுத்த வேண்டிப்*
*பெண்குலத்தை முழுதடிமைப் படுத்த லாமோ?*

.........................................

*பெண்மை அடிமையுற்றதால்*
*மக்களெல்லாம் அடிமையுறல்*
*வியப்பொன்றாமோ?"*

எனக் கேள்விக் கணைகள் தொடுத்து நாட்டு விடுதலைக்காக மட்டுமல்லாமல் பெண் விடுதலைக்காகவும் பாடினானே அந்தப் பாரதி என்னைக் கவர்ந்தான்.

*"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை யென்*
*றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்*
*வீட்டுக்குள் பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற*
*விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்"*

*"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் ஆள்வதும்*
*பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்*
*எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்*
*இளைப்பில்லை காணென்று கும்மியடி"*

— என்று பெண்கள் விடுதலைக் கும்மி பாடிய பாரதியின் கனவு இன்று நனவாகிக் கொண்டிருப்பதை நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோம்.

இன்றைக்குப் பல்வேறு துறைகளில் பெண்கள் ஆண்களுக்கு இணையாகத் தங்கள் முத்திரையைப் பதித்து வருகிறார்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

கல்வியில், தொழில் துறையில், அறிவியலில், ஏன் அரசியலில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருவதை நாம் அறிவோம்.

பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் மாணவிகள் அதிக விழுக்காடு தேர்ச்சி பெறுவதும் அதிக மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் முதலாவதாக முன்னணியில் நிற்பதும் மகிழ்ச்சிக்குரியது என்றாலும் மாணவர்கள் பின்தங்கி வருகிறார்களே என்று வருத்தமடையத்தான் செய்கிறது.

பள்ளி, கல்லூரி மாணவ—மாணவிகளுக்காக கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, ஒப்பித்தல் போட்டி தி.மு.க. இலக்கிய அணி நடத்திக்கொண்டு வருகிறது என்பது நாடறியும்.

அந்தப் போட்டிகளிலெல்லாம் மாணவிகள் அதிக அளவில் பங்குபெறுவதும் பரிசுகள் தட்டிச் செல்வதும் வாடிக்கையாக இருந்து வருகிறது. அந்த அளவுக்கு ஆர்வமும் அக்கறையும் மாணவிகளிடத்தில் இருப்பது போன்று மாணவர்களிடத்தில் இல்லை என்பது வருத்தமே. இந்த நிலை நீடிக்குமானால் மாணவர்கள் ஏன் ஆண்கள் எதிர்காலத்தில் உரிமைக்காகப் போராடும் சூழ்நிலை உருவாகும் என அந்த நிகழ்ச்சிகளில் நான் எச்சரிப்பதும் உண்டு.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சிக்கவிஞர் வழியில் நடைபோடும் கலைஞர் அவர்கள் பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்கள் தீட்டி அவற்றை நிறைவேற்றிக்கொண்டு வருகிறார்.

அவற்றில் மிக முக்கியமானவை சொத்தில் பெண்களுக்குச் சமபங்கு சட்டமாக்கியதும் — முப்பத்து ஒன்று விழுக்காடு பெண்களுக்கு இடஒதுக்கீடு செய்ததும் ஆகும்.

*"பெண்ணுக்கு விடுதலைநீ ரில்லை யென்றால்*
*பின்னிந்த உலகினிலே வாழ்க்கை யில்லை"*

— என்று பாரதியின் பாட்டு வரிகளுக்கிணங்க செயலாற்றி வரும் முத்தமிழறிஞர் மூதறிஞர் கலைஞர் அவர்களுக்குப் பெண்குலம் நன்றிக்கடன் பட்டிருக்கிறது என்பதை நினைவு கூற விரும்புகிறேன்.

பெண்கள் பெண்களாக நடந்துகொண்டால் வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை.

பேயாக நடந்து கொண்டால்?...

**செப்டம்பர் 11, பாரதியார் நினைவுநாள்** ★

# தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொகுப்பு வீடுகள்

காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆலப்பாக்கம் ஊராட்சியைச் சார்ந்த, பெத்தல் நகரில் சுமார் 100 குடும்பத்தினர் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 50 குடும்பத்தினர் ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்தவர்கள். மற்றவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள். இவர்களின் இருப்பிட வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு அரசு 1998–99ஆம் ஆண்டில், இந்திரா குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 7 வீடுகளை ஒதுக்கியது. நடப்பு 1999–2000மாவது ஆண்டில் 18 வீடுகள் ஒதுக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு வீட்டின் மதிப்பு ரூ.32,000 ஆகும். துப்புரவு கழிப்பிடம், புகையில்லா அடுப்பு அனைத்து வீடுகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. ★

# 'டோக்ரா' (DWCRA) திட்டத்தின் கீழ், கவின்மிகு தோல்பொருள் தயாரிக்கும் மகளிர்

காஞ்சீபுரம் மாவட்டம், காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரப்பாக்கம் ஊராட்சியைச் சார்ந்த கீழம்பாக்கம் கிராமத்தில் தோலினால் ஆன பொருட்களை தயாரிக்கும் டோக்ரா (DWCRA) – ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டக் குழு உள்ளது. இந்தக் குழு 13 பெண் உறுப்பினர்களைக் கொண்டு 15–1–99 முதல் 'கீழம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் மன்றம் தோல் பொருட்கள் தயாரிக்கும் மையம்' என்ற பெயரில் இயங்கி வருகிறது. இந்த 13 பெண்களில், 11 பேர் ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்தவர்கள். 2 பேர் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்கள். இந்தக் குழுவில் உள்ளவர்கள் அவர்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள் மற்றும் தொடர்புடைய பொருட்களை தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறுகிறார்கள். இந்த மூலப்பொருட்களைக் கொண்டு கீழ்க்கண்டவாறு பொருட்கள் தயாரித்து கூலி பெறுகிறார்கள்.

| | சிறியது ரூ. | பெரியது ரூ. |
|---|---|---|
| 1. மணிபர்ஸ் | 5.50 | 7.00 |
| 2. சாவிக்கொத்து | 2.00 | |
| 3. கைப்பை | 4.00 | 12.00 |



மேற்கண்ட பொருட்கள், ஜெர்மனி மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு தனியார் நிறுவனங்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தக் குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு மாதத்திற்கு ரூ.600–க்குக் குறையாமல் பெறுகிறார்கள். இந்த டோக்ரா குழுவை, தற்போது புதிதாக தொடங்கியுள்ள சுதந்திரப் பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் இணைத்திட தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. ★

# கிராமப்புறப் பகுதிகளில் வறுமை ஒழிப்பில் சுயநிதி உதவிக் குழுக்கள்

பாரத ஸ்டேட் வங்கி தன்னுடைய கிளைகளைக் கிராமப்புறம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பரவலாக அமைத்து சுயநிதி உதவித் திட்டத்தின் மூலம் கிராமப்புறப் பகுதிகளில் வசிக்கும் ஏழைகளுக்குக் கடனுதவி அளித்து வறுமை ஒழிப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இந்த சுயநிதி உதவிக் குழுவின் அடிப்படை குறிக்கோள்களான சேமிப்பு/சிக்கனம் மற்றும் கடன் போன்றவற்றை, அரசு சாரா நிறுவனங்களின் ஒத்துழைப்பைக் கொண்டு செயல்படுத்துகிறது. பலதரப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களை உறுப்பினர்களாகக் கொண்டு அவர்தம் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகை செய்கிறது. குறிப்பாக மகளிருக்கு அதிகாரம் வழங்குவதே இதன் மைய நோக்கமாகும். சமூக வளர்ச்சிப் பணிகளான மருத்துவம், குழந்தைகள் – முதியோர் கல்வி, குடிநீர், சுகாதாரம் மற்றும் பொருளாதார மேம்பாட்டுப் பணிகளான பயிர் சாகுபடி, கறவை மாடுகள், ஆடுகள், கோழிகள் வளர்ப்பு, சிறுதொழில்கள், கிராமப்புற கைவினைத் தொழில்கள் போன்றவை உறுப்பினர்களிடையே வலியுறுத்தப்படுகிறது. வங்கிக் கணக்குகள் செயலாக்கும் பழக்கம், குழு நடவடிக்கைகளை நிர்வகித்தல், சுயநிதிக் குழுக்களின் கணக்குகளை நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றைக் கூட்டுப் பொறுப்பாக செயல்படுத்தப்படுகிறது. தலைமைப் பயிற்சி, பொது பிரச்சினைகள் குறித்து மேலதிகாரிகளுக்குத் தெரிவித்தல், உள்ளாட்சித் தேர்தல்களில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்கெடுத்தல் போன்றவையும் சுயநிதி உதவிக் குழுவின் முக்கிய நிகழ்ச்சி நிரல் அட்டவணையாக வகுக்கப்பட்டு அரசு சாரா நிறுவனங்களின் வழிகாட்டுதலுடன் செயல்படுத்தப் படுகிறது.

சுயநிதி உதவிக் குழுக்களின் நடவடிக்கைகள், பாரத ஸ்டேட் வங்கியின் சேமிப்பு சுழற்சி முறைகளால், அவர்களின் வருவாய் வீட்டுச் செலவில் சிக்கனப்படுத்துவதன் மூலம் வெகுவாக மேம்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்ப நாட்களில் கடன் தொகை அவர்தம் குடும்ப செலவுகளுக்காகவே பயன்படுத்தப்பட்டு வந்த நிலை மெதுவாக மாறி, தற்பொழுது வேளாண்மை மற்றும் வேளாண்மை தொடர்பான நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் நிலை உருவாகியுள்ளது. உறுப்பினர்கள் தனிப்பட்ட அதிக வட்டிக்கு கடன் வழங்கும் நபர்களின் பிடியிலிருந்து தற்பொழுது விடுபட்டு, குறைந்த வட்டிக்கு வங்கிகளில் கடனுதவி பெற்று வருகின்றனர்.

கடனுதவித் தொகையின் வரம்பு 840 சுயநிதி உதவிக்குழுவிற்கு ரூ.1.37 கோடி. இதில் 707 மகளிர் சுயநிதிக் குழுக்கள் உள்ளன.

1. சுயநிதிக் குழுக்கள் ஏற்கெனவே உள்ள 1:1 முதல் 1:4 விகிதத்தில் சேமிப்புக் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டு, விநியோகிக்கப்பட்ட விவசாயக் கடன் மூலம் சேமித்த தொகை ரூ.0.29 கோடி.

2. 1998–99ஆம் ஆண்டில், மற்ற பகுதிகளை விட இத்திட்டத்திற்கான மாவட்டமாக காஞ்சிபுரம் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இம் மாவட்டத்தில் 11 அரசு சாரா நிறுவனங்களின் தீவிர ஒத்துழைப்புடன் 10 கிளைகள் அமைக்கப்பட்டு, ரூ.16.38 இலட்சம் 115 சுயநிதி உதவிக் குழுக்களுக்கு (179 உறுப்பினர்கள்) கடனாக வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் 112 சுயநிதி உதவிக்குழுக்கள் பெண்களுக்கானவை. மொத்த சேமிப்பு ரூ.12.29 இலட்சம். மேலும் அரசு சாரா நிறுவனங்களான ASSEFA, SRDT, TANWA, ISED, ARD, ARWEL மற்றும் பாரத ஸ்டேட் வங்கி, அய்யம்பேட்டை கிளை இதில் ஈடுபட்டுள்ளன.

3. இவற்றைத் தவிர பாரத ஸ்டேட் வங்கியின் திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி கிளைகள், சுயநிதி உதவிக் குழுக்களை ஏற்படுத்தி உள்ளன. பாரத ஸ்டேட் வங்கியும், அரசு சாரா நிறுவனங்களும் வருவாய் பெருக்கும் திட்டங்களை இரண்டாம் கட்டமாகத் துவக்கியுள்ளன.

1. மெழுகுவர்த்தி தயாரித்தல்

2. சரிகை வேலைப்பாடு (எம்பராய்டரி)

3. பால் ஊர்திகள் வாங்குதல் ஆகும்.

**பயிற்சி :**

மெழுகுவர்த்தி தயாரிக்கும் முறை குறித்த ஒருநாள் பயிற்சி வகுப்பு அரசு சாரா நிறுவனங்கள் மூலம் கிராமம் தொழிற்சாலையில் நடத்தப்பட்டது. தயாரிப்புக்குத் தேவையான அடிப்படை பொருட்கள் அளிக்கப்பட்டு, தயாரிக்கப்பட்ட பொருட்கள் பயிற்சி நிறுவனத்தினாலேயே வாங்கப்பட்டன.

**பால் ஊர்தி வாங்குதல்:**

இதில் குறிப்பிடத்தக்க அம்சமாக பவுஞ்சூல் பகுதி பாரத ஸ்டேட் வங்கி (காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் பகுதியிலுள்ள லத்தூர் பிரிவு) 1998–99ஆம் ஆண்டில் நிதிஉதவி அளித்த 50 சுயநிதி உதவிக் குழுக்களில், 25 மகளிர் சுயநிதி உதவிக் குழுக்கள் கூட்டாகக் கடனுதவி பெற்று சொந்தமாக பால் ஊர்தியினை வாங்கியுள்ளன. இதன் மூலம் தாங்கள் தயாரிக்கும் பாலை (ASSEFA) குளிர்பதன நிலையத்திற்கு (23 கி.மீ) சொந்த வண்டியில் அனுப்புவதன் மூலம் வாகன செலவைக் குறைத்து, பாலின் விலையைக் குறைத்ததோடு அல்லாமல், மற்றவர்களின் பாலையும் தங்களது ஊர்தியில் அனுப்பி வருவாய் ஈட்டியுள்ளனர். இந்த பால் ஊர்தி 'சர்வ சேவா டைரி பெடரேஷன் மகளிர் சுயநிதிக்குழு'வினால் வாங்கப்பட்டது. ★

# மூடப்பட்ட தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு ரூ.250 உதவித்தொகை பெறுதல் பற்றிய விவரங்கள்

தமிழ்நாட்டில் நீண்ட காலமாகப் பல தொழிற்சாலைகள் இயங்காமலும்/மூடப்பட்டும் உள்ளன. இவை பெரும்பாலும் நிதி நெருக்கடி, பங்குதாரர்களுக்குள் கருத்து வேறுபாடு ஆகிய காரணங்களால் மட்டுமே இயங்காமல் உள்ளன. இவற்றில் தொழிலாளர் பிரச்சினைகளால் மூடப்பட்டவை எதுவுமில்லை. அதேபோல், 1947ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டம், பிரிவு 250–இன் கீழ் அனுமதி பெறப்பட்டு மூடப்பட்ட நிறுவனங்களும் ஏதும் இல்லை. எனினும், இவ்வாறு மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளினால் சுமார் 40,000 தொழிலாளர்கள் வேலையிழந்து தவிப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உதவிட வேண்டும் என்ற கருத்தினை அரசு நீண்ட நாட்களாகப் பரிசீலனை செய்தது. மேலும் பல்வேறு தொழிற்சங்கங்களும் இது சம்பந்தமாக அரசிற்குக் கோரிக்கைகள் வைத்தன. நீண்ட பரிசீலனைக்குப் பின், மேற்கு வங்காளத்தில் செயல்படுத்தப்படும் திட்டத்தினைப் போலவே இம்மாநிலத்திலும் 1989–90ஆம் ஆண்டுக்குப் பிறகு (அதாவது 31–3–90க்குப் பின்) மூடப்பட்ட தொழில் நிறுவனங்களைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு 1–5–99 லிருந்து ஒவ்வொரு மாதமும் தலா ரூ.250 (ரூபாய் இருநூற்றைம்பது மட்டும்) வீதம் உதவித் தொகை அளிக்க முடிவெடுத்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது. இவ்வுதவித் தொகை மூடப்பட்ட தொழிற்சாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு இது ஒரு இடர்காப்பு உதவியே (Relief) தவிர இழந்த மாத வருமானத்தை ஈடுகட்டுவதற்காக அல்ல.

இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

**இத்திட்டத்தால் கவரப்படும் தொழிற்சாலைகளின் அலகுகள்:**

1. தொழிற்சாலைகள் சட்டம், 1948இன் கீழ் பதிவு பெற்ற தொழிற்சாலைகளாக இருத்தல் வேண்டும்.
2. இந்த தொழில் நிறுவனங்கள் 1989–90ஆம் ஆண்டுக்குப் பிறகு (அதாவது 31–3–90க்குப் பிறகு) கதவடைப்பு செய்யப்பட்டோ/உற்பத்தி நிறுத்தம் செய்யப்பட்டோ அல்லது மூடப்பட்டோ இருத்தல் வேண்டும்.
3. 30–4–99 அன்று நிறுவனத்தின் கதவடைப்பு/உற்பத்தி நிறுத்தம் அல்லது மூடப்பட்டோ ஓராண்டு பூர்த்தியாகி இருத்தல் வேண்டும். (அதாவது 30–4–98க்கு முன் அத்தொழில் நிறுவனத்தின் இயக்கம் நிறுத்தப் பட்டிருக்க வேண்டும்.)
4. அவ்வாறு இயக்கம் நிறுத்தப்படுமுன் அத்தொழில் நிறுவனம் 5 ஆண்டுகளுக்கு மேல் இயக்கியிருக்க வேண்டும்.
5. தொழில் நிதி மற்றும் புனரமைப்பு வாரியம்/தொழில் தீர்ப்பாயம்/நீதிமன்றத்தால் தொழில் நிறுவனத்தை மூடிவிடவோ/கலைத்துவிடவோ உத்தரவிடப்பட்டு, அவ்வுத்தரவின் மேல் மேல்முறையீடு உரிய மேல்முறையீட்டு மன்றத்தில் செய்யப்பட்டிருக்க வேண்டும். (அவ்வாறு மேல்முறையீடு செய்யாத நிறுவனங்களைப் பொறுத்த அளவில், அத்தொழில் நிறுவனத்தை மூடுதலாலோ அல்லது கலைத்து விட்டதாலோ தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய தொகை அளிக்கப்படும் வரை அல்லது ஓராண்டு வரை, இவ்விரண்டு நிகழ்வுகளில் எது முன்னதாக நிகழ்கிறதோ அதுவரை இந்நிறுவனம் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் நிறுவனமாக கருதப்படும்.)
6. அதாவது தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் நிரந்தரமாகத் தொடர் உற்பத்தியாக இருக்கவேண்டும். காலத்திற்கேற்ற உற்பத்தியாக இருக்கக் கூடாது.
7. பிற மாநிலங்களில் தொழிற்சாலையின் கிளைகள் இருப்பினும் தமிழகத்திலுள்ள தொழிலாளர்களுக்கு மட்டும் இப்பயன் பொருந்தும்.

இத்திட்டத்தின் கீழ், தொழில் நிறுவனங்களைத் தேர்வு செய்யும் ஆய்வுக் குழு, தொழிலாளர் ஆணையர் அலுவலகம் மற்றும் தலைமைத் தொழிற்சாலைகள் ஆய்வர் அலுவலகத்திலுள்ள ஆவணங்களைப் பரிசீலித்து பயன்பெற தகுதியுள்ள தொழில் நிறுவனங்களைத் தேர்வு செய்யும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெறக் கூடிய தொழில் நிறுவனங்களின் பட்டியலைக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். இக்குழு, இத்திட்டத்தின் கீழ் பயன்பெறவுள்ள தகுதிகளின்

அடிப்படையில் தொழிற் சங்கத்தின் பரிந்துரையைப் பரிசீலனை செய்யும். இக்குழு இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் பற்றி அரசுக்கு அவ்வப்போது அறிவுரை வழங்கும். இக்குழு மூன்று மாதங்களுக்கொருமுறை கூடும். இது ஒரு முதல் தர குழுவாகக் கருதப்படும்.

**இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும், தொழிலாளர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகள்:**

ஆய்வுக் குழு தேர்ந்தெடுத்துள்ள தொழிற்சாலைகளின், பட்டியலை அரசு ஒப்புதல் பெற்று, தொழிலாளர் துறை அறிவிக்கும். அவ்வாறு அறிவிப்பு செய்யப்பட்ட பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் நிறுவனங்களைச் சார்ந்த கீழ்க்கண்ட தகுதிகள் உள்ள தொழிலாளர்கள் பயன்பெறுவர்.

1. தொழிலாளி தேர்வு செய்யப்பட்ட தொழில் நிறுவனத்தின் தொடர் பணி செய்யும் (Regular) தொழிலாளியாகப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டவராகவோ அல்லது அத்தொழில் நிறுவனத்தில் நிர்வாக அலுவலகத்தில் பணிபுரிந்தவராகவோ இருந்து இத்தொழிற்சாலை கதவடைப்பு/உற்பத்தி நிறுத்தம் மற்றும் மூடப்படுதலாலோ பணியில்லாமல் சம்பளம் பெறாமல் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
2. தொழில் நிறுவனம் இயக்கம் நிறுத்தப்படுவதற்கு முன்னர் அந்நிறுவனத்தில் குறைந்தபட்சம் ஓராண்டு காலம் தொடர்ந்து பணிபுரிந்திருக்க வேண்டும்.
3. தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் அவர் தொழிலாளி என்ற வரையறைக்குள் வருபவராக இருத்தல் வேண்டும்.
4. அவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றவராகவோ/ பணியிலிருந்து விலகியவராகவோ/தன்னிச்சை ஓய்வு திட்டத்தின் கீழ் செல்ல ஒப்புக் கொண்டவராகவோ இல்லாமலிருக்க வேண்டும். மேலும் இத்திட்டத்தின் கீழ் உள்ள உறுதி பயன்களைப் பெற்றுக் கொண்டவராகவும் இருத்தல் கூடாது; மற்றும்
5. 58 வயதைக் கடந்தவராக இருத்தல் கூடாது.

**தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த கீழ்க்கண்ட தொழிலாளர்கள் பயன்பெற இயலாது:**

1. தொழிலாளி மூடப்பட்ட தொழிற்சாலையிலேயே ஏதாவது பணியில் இருந்தால் (உதாரணமாக, பாதுகாப்பு அலுவலர்கள், பராமரிப்பு பணியாளர்கள்).
2. தொழிலாளி பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டாலோ/ பணியிலிருந்து விலகியவராகவோ அல்லது தன்னிச்சையாக ஓய்வு பெற்று இறுதிப் பயன்களைப் பெற்றுக் கொண்டவராக இருந்தால் அல்லது பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டவராகவோ இருந்தால்.
3. வேறு நல்ல வேலையில் சேர்ந்திருந்தால்.
4. தொழிலாளர் சேமநலத் திட்டத்தின் கீழ், ஓய்வூதியம் பெறுபவராகவோ அல்லது ஒட்டுமொத்தமாக ஓய்வூதியம் பெறுபவராகவோ இருந்தால்.

**இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை அளிப்பது கீழ்க்கண்ட நேர்வுகளில் நிறுத்தப்படும்:**

1. மூடப்பட்ட தொழில் நிறுவனம் மீண்டும் இயங்க ஆரம்பித்தால்.
2. தொழிலாளி இறந்துவிட்டால்.
3. தொழிலாளிக்கு 58 வயது பூர்த்தியடைந்தால்.
4. தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தின் கீழ் செல்ல ஒப்புக்கொண்டு அதன்படி பணப் பயன்களைப் பெற்றுக்கொள்ளும்போது.
5. தொழிலாளர் சேமநலத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் அல்லது மாற்றி பெறு (Commuted) ஓய்வூதியம் பெற்றிருந்தால்; மற்றும்
6. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறவியலாத தகுதிகளில் ஏதேனும் ஒன்றை தொழிலாளி அடைந்தால்.
7. பஞ்சாலைத் தொழிலாளர் புனரமைப்புத் திட்டம் போன்ற பிற எந்தவொரு தொழிலாளர் நலத் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறுபவராக இருத்தல் கூடாது.

> **“சொந்த வாழ்க்கையிலே அக்கறை காட்டுவது ஒரு சபலம். அதனை நீக்காதவர்களால் பொது வாழ்க்கை என்னும் போர்க்களத்திலே உலவ முடியாது!”**
>
> **– பேரறிஞர் அண்ணா**

**இத்திட்டத்தின் கீழ் பயன்பெற செய்யப்படவேண்டிய விண்ணப்பம் மற்றும் பயனாளிகள் பட்டியல் தயாரித்தல்:**

**1. மனு**

ஆய்வுக் குழு தேர்ந்தெடுத்த பட்டியல் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின் தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தால் சம்பந்தப்பட்ட சமரச அலுவலர்கள் மற்றும் தொழிலாளர் ஆணையர் அலுவலகங்களில் அறிவிப்பு செய்யப்படும். மேலும், இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியுள்ள தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவத்தில் (இணைப்பிலுள்ள படி) அறிவிப்பு செய்யப்படும் அலுவலகங்களிலுள்ள அலுவலர்களிடம் அளிக்க வேண்டும். இம்மனு பெறுவதற்கான இறுதி தேதி என அறிவிப்பு செய்யப்பட்ட நாளுக்கு முன்னர் இம்மனு செய்யப்பட வேண்டும்.

**2. பட்டியல்**

இவ்வாறு பெறப்படும் மனுக்களைச் சரிபார்க்க/சோதனையிட தொழிலாளர் ஆணையருக்கு அதிகாரம் உள்ளது. அவ்வாறு சரிபார்க்கும் போது, பி.எப். மற்றும் ஈ.எஸ்.ஐ. அமைப்புகளில் உள்ள ஆவணங்களை ஒப்பிட்டு சரிபார்க்கலாம். மேலும் மனுவின் உண்மை தன்மையைத் தொழிற்சங்கத் தலைவர்களுடன் அல்லது **மற்றவர்களின் சாட்சியத்தின் அடிப்படையில் தொழிலாளர்** ஆணையர் சரிபார்க்கலாம். அவ்வாறு சரிபார்த்தவுடன்/பரிசோதனை செய்த பின்னர் ஒரு தொழில் நிறுவனத்தின் தகுதியுடைய தொழிலாளர்களின் ஒட்டுமொத்த பட்டியலை தொழிலாளர் ஆணையர் தயாரித்து அரசின் ஒப்புதல் பெறுவார். பயனாளிகள் பட்டியலில் தொழிலாளியின் பெயர், முகவரி, அவருக்கென்று ஒதுக்கப்பட்ட எண், அவர் பெயரில் கணக்கு ஆரம்பிக்கப்பட வேண்டிய கிளை மற்றும் வங்கியின் பெயர் ஆகியவை உள்ளடங்கியிருக்கும். மேலும் பயனாளி வருடத்திற்கு ஒரு முறை இந்த பகுதிகளில் தான் வசித்து வருவதாகவும் வேறு பணி ஏதும் செய்யவில்லையென்றும் சான்று அளிக்கவேண்டும். அதனை அப்பகுதியிலுள்ள அரசு 'பி' அலுவலர் அல்லது சட்டமன்ற உறுப்பினர் அல்லது வருவாய்த்துறை அலுவலரிடம் (தாசில்தார்) அத்தாட்சி பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.

இத்திட்டத்தைப் பொறுத்த வரை, தகுதி வாய்ந்த தொழிலாளர்களைத் தேர்ந்தெடுக்கையில், திட்ட உதவி பயனாளியின் 58 ஆண்டுகளுக்குப் பின்னரோ அல்லது அதற்கு முன் இறப்பு, வெளி மாநில இடப்பெயர்ப்பு போன்ற காரணங்களால் கொடுக்கப்பட இயலாது என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். இதனை மிகவும் உன்னிப்பாக தொழிலாளர் ஆணையர் தனது களப் பணியாளர்கள் மூலமாக உறுதி செய்து கொள்ள வேண்டும். தகுதி வாய்ந்த தொழிலாளர், முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கும்போது அவரது பெயர், முகவரி, பணியில் இருக்கும் தொழில் நிறுவனம், அவரது வயது போன்ற விவரங்களை நிறுவனத்திடமிருந்தோ/ஈ.எஸ்.ஐ.பதிவுகளின் அடிப்படையிலோ தெளிவாகத் தெரிந்து குறிப்பிட வேண்டும். ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கொரு முறை அடுத்தத் தவணை உதவித்தொகை வழங்குவதற்கு முன்னால் இந்த விவரங்கள் சரிபார்க்கப்பட்டு தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தால் சான்றளிக்கப்பட வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் தகுதியில்லாத தொழிலாளர்கள் அல்லது தகுதி பெற்று ஒரு காலக்கட்டத்தில் தகுதியிழந்தால் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை பட்டுவாடா செய்வது தவிர்க்கப்பட வேண்டும். அத்தகைய தவறுகள் நேர்ந்தால் சம்பந்தப்பட்ட களப்பணியாளர்கள் நிதியிழப்புக்கு பொறுப்பாவார்கள் என்று தெளிவாகத் தொழிலாளர் ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

**இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை வழங்கப்படும் முறை:**

1. இத்திட்டத்தின் கீழ் தகுதியுள்ள தொழிலாளிக்குத் தொடர்ந்து மாதம் ஒன்றுக்கு ரூ.250 வழங்கப்படும். ஆனால், இத்திட்டத்தின் கீழ் பயன்பெறவியலாத தகுதிகளில் ஏதேனும் ஒன்றினை தொழிலாளி பெற்றிருந்தால்/அடைந்தால் இத்தொகை வழங்கப்பட மாட்டாது.

2. தொழிலாளிக்கு 3 மாதங்களுக்கொருமுறை இத்தொகை வங்கி மூலம் வழங்கப்படும். இத்தொகை அவர் பெயரில் கணக்கு தொடங்கப்பட்ட வங்கி மூலம் வழங்கப்படும்.

3. ஒரு தொழில் நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட கிளையிலேயே கணக்கு துவக்கப்படவேண்டும்.

4. தொழிலாளர் ஆணையர் தயாரித்த பட்டியலிலுள்ள பயன்பெறத் தகுதியுடைய ஒவ்வொரு தொழிலாளியும் குறிப்பிட்ட தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் கிளையில் கணக்கு துவக்க வேண்டும்.

5. தொழிலாளர்களுக்கும் பொறுப்பு ஏற்படுத்தும் வகையில் அவர்களே தன் பெயரில் தனி சேமிப்புக் கணக்கு ஒன்றை துவக்கி தொழிலாளர் ஆணையர், சென்னை–6க்கு தெரிவிக்க வேண்டும்; மற்றும்

6. அந்தந்த வங்கிகளுக்கு காசோலை மூலம் 3 மாதத்திற்கான தொகை அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர்கள் பட்டியலின் 2 நகல்களுடன் அனுப்பப்படும். வங்கி அந்த தொழிலாளர்களின் கணக்கில் பணம் செலுத்தியதற்கான ஆதாரமாக பட்டியலின் நகலில் தேவையான விவரங்களை குறிப்பிட்டு தொழிலாளர் ஆணையருக்கு

அனுப்பவேண்டும். இதுவே பற்று இரசீதாகக் கருதப்படும்.

**இத்திட்டத்தினை நிர்வகித்தல்:**

தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் தேவையான பணியாளர்களுடன் அலுவலரும் கூடிய ஒரு பிரிவு இத்திட்டத்தை நிர்வகித்து வரும்.

## இணைப்பு - 'அ'

## உதவித்தொகை கோரும் விண்ணப்பதாரர் சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப் படிவம்

**விண்ணப்பம்**

எண் :

நாள் :

1. பெயர் :
2. தகப்பனார் பெயர் :
3. பிறந்த தேதி—தொழிற்சாலையின் பதிவேட்டின்படி (அத்தாட்சியுடன்) :
4. தொழிற்சாலையில் பணிபுரிந்தபோது வசித்து வந்த முகவரி :
5. தற்போதைய முகவரி :
6. பணிபுரிந்த தொழிற்சாலையின் பெயர் மற்றும் முகவரி :
7. பணியின் பெயர் :
8. பணியின் தரம் – நிரந்தரம் அல்லது தற்காலிகம் :
9. பணியில் சேர்ந்த நாள் மற்றும் துறை/பிரிவு :
10. மூடப்பட்ட நாள் :
11. மொத்தம் பணி செய்ய காலம் :
12. ஈ.எஸ்.ஐ. அட்டை எண் :
13. லோக்கல் ஆபீஸ் முகவரி :
14. வைப்பு நிதி எண் :
15. பதவி இழந்தபோது பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் வகித்து வந்த பதவியின் பெயர் :
16. மொத்த சம்பளம் :
17. தற்போது எங்கேனும் பணிபுரிகின்றீர்களா? அவ்வாறெனில், பணியாற்றும் அலுவலக முகவரி :
18. தற்போது பணியில்லாமலிருந்தால் எந்த தேதியிலிருந்து :
19. பணியில்லாமல் எவ்வாறு குடும்பம் பராமரிக்கப்படுகிறது/வருமானம் :
20. தொழிற்சாலை மூடியபோது தங்களுக்குச் சேர வேண்டிய பணப் பயன்களை பெற்று விட்டீர்களா? இல்லையெனில், அதன் காரணம் :
21. தாங்கள் தன்னிச்சை ஓய்வுத் திட்டத்தின் கீழ் ஒப்புக் கொண்டவரா? :
22. தாங்கள் பஞ்சாலைத் தொழிலாளர் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் உதவி பெறுபவரா? :
23. தங்களுக்கு 58 வயது பூர்த்தியாகும் தேதி :
24. தாங்கள் தொழிலாளர் சேமநலத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெறுகிறீர்களா? அல்லது ஒட்டுமொத்தமாக ஓய்வூதியம் பெறுகிறீர்களா? அதன் விவரம் தருக :
25. தாங்கள் எந்த தொழிற்சங்கத்தில் உறுப்பினர் :

மேலே கூறப்பட்ட விவரங்கள் அனைத்தும் உண்மையானவையே. இதில் ஏதாவது பொய்யான தகவல்கள் இருந்து கண்டுபிடிக்கப்பட்டால், அதற்கான தண்டனை வழங்கப்படும் என்பதனையும் அறிவேன் என இதன் மூலம் சான்றளிக்கப்படுகிறது. மேலும் எனக்கு வழங்கப்பட்ட தொகையினை திருப்பிச் செலுத்தவும் ஒப்புக்கொள்கிறேன்.

இடம் : விண்ணப்பதாரர்/

நாள் : தொழிலாளி கையொப்பம்

## இணைப்பு-'ஆ'

**சான்றிதழ்**

திரு........................த/பெ.................................
எண்..........................(தெருவின் பெயர்)...........................
(கிராமம்).......................(வட்டம்).................................
(மாவட்டம்)......................... என்பவரை எனக்கு................ ஆண்டுகளாக நன்கு தெரியும். இவர் மேற்குறிப்பிட்டுள்ள முகவரியில்............வருடங்களாக வசித்து வருகிறார். இவர்...................... என்ற தொழிற்சாலையில் பணிபுரிந்து, அத்தொழிற்சாலை மூடப்பட்டுவிட்டதால், தற்போது பணியேதும் செய்யாமல் இருந்து வருகிறார் என இதன் மூலம் சான்று அளிக்கிறேன்.

அலுவலக முத்திரை : சான்றளிக்கும்

நாள் : அலுவலரின் கையொப்பம்

(இச்சான்றிதழ் அப்பகுதியிலுள்ள அரசு 'பி' அலுவலர் / சட்டமன்ற உறுப்பினர் / வருவாய்த் துறை அலுவலர் (வட்டாட்சியர்) இவர்களில் எவரேனும் ஒருவரிடம் வருடத்திற்கொருமுறை பெறுதல் வேண்டும்)

**விண்ணப்பம் பெற்றுக் கொண்டதற்கான ரசீது**

விண்ணப்ப எண்:

நாள் :

மூடிய தொழிற்சாலையின் பெயர் :

மூடப்பட்ட தொழிற்சாலையினால் வேலையிழந்த தொழிலாளர்களுக்கு அரசின் உதவித் தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற திரு.......................... அவர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டது

*விண்ணப்பம் பெற்றுக்கொண்ட அலுவலரின் கையொப்பம் பதவி மற்றும் தேதியுடன்.*

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **க.முத்துசாமி,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை—தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை—600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906

உங்களின் நீண்டநாள் கனவை நனவாக்கும் புதிய திட்டம்.

## கோ-ஆப்டெக்ஸின்

# பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.

உங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, **"பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்"**.

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!

**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை !**

| வ.எண் 1 | மாதச் சந்தா ரூ. 2 | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை ரூ. 3 | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 4 | கூடுதல் தொகை (3+4) ரூ. 5 | அரசு தள்ளுபடி * ரூ. 6 | அங்கத்தினர்களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 7 |
|---|---|---|---|---|---|---|
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள 20%க்கு ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு காலத்தில் அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பட்டர்பிளை, குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - கோயம்புத்தூர், கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெக்ஸ் பவளம் - ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்டெக்ஸ் பட்டு மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் மற்றும் இதர பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

**இன்றே இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.**

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

*பாரம்பரியத்தின் பெருமை. காலத்திற்கேற்ற ரசனை.*

தமிழரசு

பதிவு எண் . M 8676
Licence No. TN/MS(C)/PP-23